DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam, Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1473 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday June 28, 2024

# எனக்கும் எனது கட்சியினருக்கும் இன்னும் நிறையவே வேலைகள் உண்டு

## றொறன்ரோ சென் போல்ஸ் தொகுதியின் இடைத்தேர்தல் முடிவு குறித்து ஊடகங்களுக்கு தெரிவித்த கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ



கடந்த வாரம் நடைபெற்ற றொறன்ரோ சேன்போல் தொகுதிக்கான இடைத்தேர்தலில் லிபரல் கட்சி வெட்பாளர் லெஸ்லி சர்ச் தோல்வியடைந்ததும் கன்சர்வேட்டிவ் வேட்பாளர் டான் ஸ்டீவர்ட் சுமார் 600 வாக்குகள் வித்தியாசத்தில் பெற்றதும் நாம் அனைவரும் அறிந்த ஒன்றே.
இந்த முடிவைப் பயன்படுத்தி கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைமையும் அதன் உறுப்பினர்களும், கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் உடனடியாக பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர்.
இது தொடர்பாக பதிலளிக்கும் போதே பிரதமர் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் 30வது ஆண்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது




ஸ்காபுறோவில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பெற்ற ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் என்ற நற்பெயரோடு 30வது ஆண்டு நிறைவு செய்துள்ள ஆதிபராசக்தி குருமன்றத்தின் 30 ஆண்டுகள் பூர்த்தி விழா கடந்த 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோவில் அமைந்துள்ள ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்றத்தில் நடைபெற்றது இந்த விழாவை கந்தையா யோகநாதன் தொகுத்து வழங்கினார். சிறப்புரைகள் மற்றும் ஆன்மீக சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெற்றன. செல்விகள் பவித்திரா சேந்தன் மற்றும் மித்திரா சேந்தன் ஆகிய சகோதரிகள் தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் கனடிய தேசிய கீதம் ஆகியவற்றை இசைத்தனர்.
தொடர்ந்து 30வது ஆண்டை நிறைவு செய்துள்ள ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு அவர்களின் சேவைகளைப் பாராட்டும் வகையில் மாகாண அரசு சார்ந்த பாராட்டுப் பத்திரங்களையும் லோகன் லோகேந்திரலிங்கம் அவர்கள் வாசித்து வழங்க பல அன்பர்கள் மற்றும் சக்திகள் இணைந்து அவற்றை ஸ்தாபகர் சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு அவர்களின் கரங்களில் ஒப்படைத்தனர்

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8


Vijaya Jewellery
INVITATION
cordially invite you to the
GRAND OPENING
of their new showroom of
Gold Jewellery
TIME & DATE:
Sun 30th June 2024
@ 12 Noon
VENUE:
3341 Markham Road
Unit 127, Scarborough,
ON M1X 0A5
JOIN OUR LUNCH

## உதயன் கதிரோட்டம்

# மக்களால் தெரிவு செய்யப்படாத ரணிலை மீண்டும் மக்கள் மூலம் தெரிவு செய்வதில் தமிழ் அரசியல்வாதிகள் கரிசனையோடு இருப்பது ஏன்?

இலங்கையின் புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும் தேர்தல் இந்த வருடத்திற்குள் நடைபெறவுள்ளது என்ற ஊகம் தெரிவிக்கப்பட்டிருக்கும் இந்த நிலையில் முக்கிய வேட்பாளர்கள் என்று கருதப்படும் அநுரகுமார திசநாயக்க. ரணில் விக்கிரமசிங்க மற்றும் அஜித் பிரேததாச ஆகியோர் இலங்கைத் தீவு எங்கும் பயணங்களை மேற்கொண்டு பிரச்சாரங்களைச் செய்து வருகின்றார்கள். இந்த ஜனாதிபதித் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்படவுள்ளவர் ஒரு புதியவராக இருக்க வேண்டும் என்பதில் இலங்கையின் முழு வாக்காளர்கள் தொகையில் கணிசமானவர்கள் விரும்புகின்றார்கள் என்பதும் அங்கு மேற்கொள்ளப்பட்ட மக்கள் கருத்துக்களின் அடிப்படையில் வெளிப்படையாகவே தெரிகின்றது.

கடந்த தடவை இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி . "அரகலய" போராட்டத்தின் போது அதிர்ந்து நின்ற அரசியல் தலைவர்கள் மற்றும் ஊழல் ஜனாதிபதியான கோட்டாபாய நாட்டைவிட்டு நீங்கிச் சென்றமையால் ஒரு" திடீர் " ஜனாதிபதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ரணில் என்னும் "குள்ளம்" இந்த தேர்தலில் மக்களின் ஆணையைப் பெற்றவராக வரவிரும்புவதையும் நாம் அவதானிக்கலாம்.

ஜேவிபியின் தலைவர் அநுர குமார திசநாயக்க அவர்கள். தமிழர் பகுதிகளுக்கு அடிக்கடி பயணம் செய்து பிரச்சாரங்களை மேற்கொள்ளவது போன்று ரணிலும் பயணங்களை மேற்கொள்கின்றார். ஆனால் ஒரு வித்தியாசம்.. ரணில் மேற்கொள்ளும் பயணங்கள் அரசாங்கத்தின் செலவில். ஏனைய இருவரும் மேற்கொள்வது தங்கள் கட்சியின் சொந்தச் செலவில் தான்.

இவ்வாறிருக்கும் போது. ரணில் விக்கிரமசிங்க, மீண்டும் அதிகாரம் பெற்ற ஒரு ஜனாபதியாக வரவேண்டும் என்பதை பல தமிழ் அரசியல்வாதிகள் விரும்பியும் அவருக்காக பிர்சசாரம் செய்தும் வருகின்றார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் அவர்கள் "விடாப்பிடியாக" இந்த விடயத்தில் உள்ளார் என்பது இளையவர்களுக்கு கூட தெரிந்து விட்டது. அவர் மட்மல்ல யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய தமிழ் பேசும் அரசியல்வாதிகளான அங்கஜன் இராமநாதன். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட பலரும் அந்த "வேட்கை"யோடு தான் உள்ளார்கள் என்பதும் நன்கு வெளிச்சமாகத் தெரியும் "விருப்பங்கள்"

அதற்கு மேலாக வடக்கு மாகாண ஆளுனர் திருமதி சார்ள்ஸ் கூட ரணலை ஜனாதிபதியாக்க தனது பதவியின் பின்னால் உள்ள வளங்களைப் பாவிக்க வேண்டும் என்று ரணில் தனது அண்மைய யாழ்ப்பாண விஜயத்தின் போது கேட்டுக் கொண்டதாகவும் யாழ்ப்பாணத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதை விட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த பலரும் குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஶ்ரீதரன் சிவஞானம் அவர்கள் கூட தனது சொந்த நலன் கருதி ரணில் தான் ஜனாதிபதிக் கதிரையில் அமர வேண்டும் என்று விரும்புவதாக அவரது நட்பு வட்டாரங்களிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது. இனி. கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் பல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் பேசும் அரசியல்வாதிகளும் ரணில் தான் மீண்டும் பதவியில் அமர் வேண்டும் என்று விரும்புகின்றார்கள். அதைவிடக் கேவலம். தான் ஒரு ஈரோஸ் உறுப்பினர் என்று அடிக்கடி அரசில் அறிக்கையை வெளியிடும் ஒருவர்கூட அண்மையில், இலங்கையின் அடுத்த ஜனாதிபதியாக ரணில் தான் வரவேண்டும் என்று "ஈரோஸ்" பெயரைப் பாவித்து அறிக்கையை வெளியிட்டுள்ளார். அந்தளவிற்கு ரணிலை மீண்டும் ஜனாதிபதியாக்கினால் தங்கள் வங்கிக்கணக்குகளின் இருப்பை இன்னும் அதிகரித்துக் கொள்ளலாம் என்று நப்பாசை கொண்டவர்களாக விளங்குகின்றார்கள் என்பது புலனாகின்றது. எமது அவதானிப்பின் படி யாழ்ப்பாணத்தில் "வாசம்" செய்யும் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்கள் கூட " தமிழ் வேட்பாளர் கோசத்தை முன்னின்று எழுப்புகின்றவராக இருந்தாலும் மட்டக்களப்பு பகுதியில் பல வர்த்தக முயற்சிகளும் வீடுகளும் உள்ளதால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்தால் தனது மட்டக்களப்பு வர்த்தகத்தை தொடரவும் இன்னும் வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கும் நாளுக்காகக் காத்திருக்கின்றார் என்ற செய்தியும் எமது ஆசிரிய பீடத்திற்கு கிட்டியுள்ளது.

இது இவ்வாறிருக்கையில் சில நாட்களுக்கு முன்பாக கருணா விநாயகமூர்த்தி, ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றிய தகவல் ஒன்றை அறிக்கையாக ஊடகங்களுக்கு வெளியிட்டதைக் கண்டு அவரது முன்னாள் "சகாவான" பிள்ளையான் கூட ஜேவிபியின் வேட்பாளர் அநுரகுமார திசநாயக்கவை திட்டித் தீர்த்து தங்கள் கட்சியான "தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்" கட்சிக்கு ஜேவிபி தான் முதலில் ஆயுதம் தந்தார்கள். பின்னர் மக்களைச் சுடுவதற்காக ஆயுதங்களை தங்களிடமிருந்து கேட்டார்கள் என்றெல்லாம் அறிக்கை ஒன்றின் மூலம் விசமத்தனமா பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறு பார்க்கும் போது தங்கள் நலன்களைக் கவனிக்கும் தமிழ் அரசியல்வாதிகளும் அவர்களின் நிழலில் வாழ்க்கையை நடத்திவரும் அவர்களது சகாக்களும் ரணில் விக்கிரமசிங்காவிற்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்கிய தமிழ் மக்களை மாத்திரமல்ல தென்னிலங்கையில் உள்ள உழைக்கும் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளையும் வாழ்க்கையின் அடிமட்டத்திற்கு நகர்த்திச் செல்லும் ரணிலின் கைங்கரியத்திற்கு "கரம்" கொடுப்பவர்களாக விளங்குவது வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வை மேம்படுத்தாது என்றும். அநுரகுமார திசநாயக்க போன்றவர்களிடம் தங்கள் "வர்த்தக நோக்கம்" எடுபடாது என்பதை அறிந்து அவருக்கு எதிராகவும் ரணிலுக்கு ஆதரவாகவும் செயற்படுவது அனைத்து இலங்கை மக்களுக்கும் ஏற்புடைய தல்ல என்பதை இவ்வாரம் நான் "கதிரோட்டம்" பகுதியில் எழுத்தில் பதிவு செய்ய விரும்புகின்றோம்.!

மக்களால் தெரிவு செய்யப்படாத ரணிலை மீண்டும் மக்கள் மூலம் தெரிவு செய்வதில் தமிழ் அரசியல்வாதிகள் முன்வரிசையில் இருப்பது ஏன்? என்ற கேள்விக்குரிய பதில்கள் பிள்ளையான் மற்றும் சுமந்திரன் போன்றவர்களின் பேச்சுக்களிலிருந்து தென்படுகின்றன என்பதையும் அதேபோன்று வாயை மூடிக்கொண்டிருப்பவர்களும் தங்கள் தேடல்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப ரணிலுக்கு மறைமுகமான ஆதரவை வழங்குவார்கள் என்றே நிச்சயம் எதிர்பார்க்கலாம்.!

We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# எனக்கும் எனது கட்சியினருக்கும் இன்னும் நிறையவே வேலைகள் உண்டு...

(முன் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் "கனேடியர்கள் அனைவரும் உறுதியானதும் உண்மையானதுமான முன்னேற்றத்தை எதிர்பார்த்து உள்ளார்கள் அதை அவர்களுக்கு வழங்க எனக்கும் எனது முழு லிபரல் அணிக்கும் இன்னும் நிறைய வேலைகள் உள்ளன என்பதை நான் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன். விரை எமது கனடிய தேசம் இதைப் பார்க்கவும் உணரவும் முடியும்." என்றார் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ.

"கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் வேட்டாளர் ஸ்டீவர்ட்டின் போராடிப்பெற்ற வெற்றிக்காகவும், சர்ச்சின் "நேர்மறையான பிரச்சாரத்திற்காகவும்" வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன் என்று குறிப்பிட்ட ஜஸ்ரின் ட்ரூடோ, அவரது எதிர்காலம் குறித்து இப்போது எழுப்பப்படும் பரந்த கேள்விகளுக்கு பதிலளிக்கவில்லை.

"இது வெளிப்படையாக நாங்கள் விரும்பிய முடிவு அல்ல, ஆனால் மக்களின் கவலைகள் மற்றும் விரக்திகளை நான் தொடர்ந்தும் செவிமடுக்க விரும்புகிறேன் என்பதில் நான் தெளிவாக இருக்க விரும்புகிறேன்" என்று கூறினார். "எனது கவனம் உங்கள் வெற்றியில் உள்ளது, அது எப்போதும் அங்கேயேதான் இருக்கும்."

ரொறன்ரோ சென் போல்ஸ் தொகுதியின் இடைத்தேர்தல் முடிவு தொடர்பாக ஊடகங்களுக்கு தெரிவித்த கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ மிகவும் உறுதி மிக்கவராக ஊடகங்களுக்கு பதிலளித்தார்.

கடந்த முப்பது ஆண்டு காலம் நீடித்த லிபரல் கட்சியின் இந்த தொகுதியில் வெற்றியானது 1993 முதல் இந்த தொகுதியை தங்கள் கைகளில் வைத்திருந்தனர். இந்த இடைத்தேர்தலில் கொன்சர்வேர்ட்டிவ் கட்சி வேட்பாளர் ஸ்டீவர்ட் மொத்தம் 15,555 வாக்குகளுடன் 42.1 சதவீத வாக்குகளைப் பெற்றார், லிபரல் கட்சியின் வேட்பாளர் சர்ச் மொத்தம் 14,965 வாக்குகளுடன் 40.5 சதவீதத்தைப் பெற்றார். இறுதி முடிவுகள் அதிகாலை 4:00 மணிக்கு வெளிவந்தன, அதே நேரத்தில் தேர்தல்கள் கனடா திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் 36,962 செல்லுபடியாகும் வாக்குகளை கவனமாக எண்ணிய பின்னர் முடிவுகளை வெளியிட்டனர்.

மேற்படி சென்போல் தொகுதியில் கிடைத்த எதிர்பாராத இந்த தோல்வி ட்ரூடோவின் கட்சிக்கு ஒரு குறிப்பிடத்தக்க அடியாகும் என்று பலரும் விமர்சனம் செய்த வருகின்றனர். இது 2025 இல் நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலுக்கு முன்னால் அவரது தலைமையின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றும் 192 வாக்குச் சாவடிகளைக் கொண்ட இடைத்தேர்தல் முடிவுகள், கன்சர்வேடிவ் மற்றும் லிபரல் கட்சிகளை மோதவிட்டன.

வரலாற்று ரீதியாக, லிபரல் பிரதிநிதிகள் இந்த தொகுதியில் 1993 முதல் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். லிபரல்களுக்கு இந்த இழப்பு அடுத்த கூட்டாட்சி தேர்தலுக்கு நல்லதல்ல என்றும் பலர் தெரிவிக்கின்ற நிலையில் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் மேற்கண்ட உறுதியான பதிலை வழங்கியுள்ளதை கொன்சர்வேர்ட்டிவ் கட்சியை சற்று சிந்திக்க வைத்துவிட்டது என்றும் அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

ட்ரூடோவின் நிலை பலவீனமாகிவிட்டதாகவும், நாடு முழுவதும் உள்ள லிபரல்வாதிகளுக்கு எதிர்கால சவால்களைக் குறிக்கும் என்றும் பலர் நம்புகிறார்கள். பணவீக்கம், வீட்டு விலைகள் அதிகரிப்பு, குடியேற்றம் மற்றும் வாழ்க்கைச் செலவுகள் எல்லா நேரத்திலும் உச்சத்தில் இருப்பதால், ஜஸ்ரின் ட்ரூரோவின் புகழ் கணிசமாக சரிந்துள்ளது. லிபரல்வாதிகள் உள்ளூர் பிரச்சினைகளை திறம்பட கையாளத் தவறியது இந்த விளைவுக்கு ஒரு முக்கிய காரணமாகும் என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இது அடுத்த தேர்தல்களுக்கு அடுத்த "பாதுகாப்பான" இடங்களை ஏற்படுத்தலாம் மற்றும் லிபரல் தலைவர் என்ற தனது நிலையை மறுபரிசீலனை செய்ய ட்ரூடோவுக்கு அழுத்தம் கொடுக்கலாம். இரு கட்சிகளும் புதிய சவால்களை எதிர்கொள்ள வேண்டும், உள் அதிருப்தியை நிவர்த்தி செய்ய வேண்டும் மற்றும் எதிர்கால தேர்தல்களுக்கு வியூகம் வகுக்க தயாராக வேண்டும்.

அரசியல் பற்றுறுதிகள் தொடர்ந்து மாறுவது மற்றும் கனேடிய அரசியல் உருவாகும்போது, இந்த மாற்றங்கள் நாடு முழுவதும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். லிபரல்வாதிகள் நகர்ப்புற ஆதரவில் அவர்களின் படிப்படியான சரிவுக்கு பங்களிக்கும் காரணிகளைக் கவனிக்கத் தொடங்க வேண்டும், மேலும் அவர்களின் முன்னுரிமைகள் மற்றும் பிரச்சார உத்திகளை மறுமதிப்பீடு செய்யலாம்.

லிபரல் கட்சிக்கும் அதன் தலைவரும் தற்போதைய பிரதமர் ட்ரூடோவுக்கும் என்ன காத்திருக்கிறது என்பதை அடுத்த பொதுத்தேர்தல் மட்டுமே சொல்ல முடியும் என்றும் அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

**Condo for Rent**

ஸ்காபுறோவில் **Warden & Finch** சந்திப்புக்கு அருகில் **3 Bedrooms,** விசாலமான **Living Room, Store Room, 2 Bath Room, Balcony,** உடன் 01-07-2024 தொடக்கம் வாடகைக்கு உண்டு.
இலவச வாகன தரிப்பிடம் மற்றும் இலவச கேபிள் மற்றும் **24 Hr Security, Party Hall, Out Door Pool, 24 Hrs Bus Srvice, Shopping Mall, Temple, Banks, Grocery Shops,** அனைத்தும் மிக அருகில்
**Call:** 416.897.0083

**ஒரு சோடிக் குத்துவிளக்குகள் விற்பனைக்குண்டு**

வீடுகளில் காட்சிப் பொருளாகவும் பாவிக்கக் கூடிய அழகிய ஒரு சோடிக் குத்துவிளக்குகள் உடனடியாக விற்பனைக்கு உண்டு.
விலையை பேசித்தீர்க்கலாம்.
தொடர்புகளுக்கு :- 647 339 401

இலங்கை செய்திகள்
Sri Lanka News
மன்னார் நிருபர்

# இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லையை ஆய்வு செய்த மத்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர்: சஞ்சீவ் சீத்



- எஸ்.ஆர். லெம்பேட் (21-06-2024)

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி அரிச்சல் முனையில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மத்திய பாதுகாப்பு துறை இணை அமைச்சர் சஞ்சீவ் சீத் இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லை பகுதியில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கை குறித்து ஆய்வு செய்ததுடன், இந்திய எல்லையில் உள்ள தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தினார்.

நாடு முழுவதும் 21-06-2024 அன்று வெள்ளிக்கிழமை சர்வதேச யோகா தினம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக ராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியில் மத்திய பாதுகாப்புத் துறை சார்பில் யோகா பயிற்சி 21-06-2024 அன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக 20-06-2024 அன்று சிறிய ரக ராணுவ விமான மூலம் ஐ.என்.எஸ் பருந்து கடற்படை தளத்திற்கு வந்த மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் சஞ்சீவ் சீத் இந்திய கடற்படை மற்றும் கடலோர கடற்படை காவல் படை முகாம் களை ஆய்வு செய்த பின்னர் ராமேஸ்வரம் கடல் பகுதியை ஆய்வு செய்ததுடன், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு பணிகள் குறித்து பாதுகாப்பு துறை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இதையடுத்து அன்று வெள்ளிக்கிழமை காலை ராமேஸ்வரம் ராமநாதசாமி திருக்கோயில் சாமி தரிசனம் செய்த மத்திய இணை அமைச்சர் பின்னர் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையில் நடைபெற்ற யோகா தினத்தில் கலந்து கொண்டு யோகா பயிற்சி செய்தார்.

அதனை தொடர்ந்து தனுஷ்கோடி அரிச்சல் முனையில் இருந்து இந்திய கடலோர காவல் படைக்கு சொந்தமான ஹோவர் கிரா·.ப்ட் கப்பலில் இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லை வரை சென்று கடலுக்கு மத்தியில் அமைந்துள்ள மணல் திட்டில் இறங்கினார்.

பின்னர் சர்வதேச கடல் எல்லையில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து, கண்காணிப்புகள் குறித்தும் ஆய்வு செய்தவுடன் கண்காணிப்பு பணிகள் குறித்து பாதுகாப்பு அதிகாரியிடம் கேட்டறிந்தார்.

இதனையடுத்து இந்திய எல்லையில் வைக்கப்பட்டிருந்த இந்தியா என்ற பெயர் பலகைக்கு அருகே நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டதுடன், எல்லையில் உள்ள தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தினார்.

பின்னர் மீண்டும் ஹோவர் கிராப்ட் ரோந்து கப்பல் மூலம் தனுஷ்கோடி வந்து சாலை மார்க்கமாக ஐ.என்.எஸ் பருந்து கடற்படை தளத்திற்கு சென்றார்.

முன்னதாக முன்னாள் குடியரசுத் தலைவர் ஏபிஜே அப்துல் கலாம் நினைவகத்திற்கு சென்று அவரது சமாதியில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் ஆய்வின் போது அவருடன் இந்திய கடலோர காவல்படை மண்டபம் முகாமின் நிலைய கமாண்டர் வினைக்குமார் மற்றும் கடற்படை தளத்தின் நிலையை கமாண்டர் கேப்டன் அஸ்வின் மேனன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

# இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை நீண்ட புரையோடிப்போன ஒரு விஷயமாக உள்ளது – இலங்கை ஜனாதிபதியின் மன்னார் விஜயம் குறித்து மீனவர்கள் கவலை



- எஸ்.ஆர். லெம்பேட் (21-06-2024)

எதிர் வரும் மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் ஒன்று வரவுள்ளது. அப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னாரிற்கு வந்து தான் ஆக வேண்டும். மீனவர்களிடம் வாக்கு கேட்கத்தான் வேண்டும். அப்போது மீனவர்களே இறுதி முடிவு எடுப்பார்கள் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம். ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் 21-06-2024 அன்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை நீண்ட புரையோடிப்போன ஒரு விஷயமாக உள்ளது. கடந்த வாரம் மன்னாருக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி அவர்களை சந்திப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் பயனளிக்கவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் விஜயம் எதற்கானது என்று கூட தெரியவில்லை.வடக்கில் உள்ள பல்வேறு வளங்களை எவ்வாறு அன்னியர்களின் கையளித்து எவ்வாறு இந்த நாட்டிற்கான வருவாயை பெற்றுக்கொள்ளலாம் என்பதே காரணமாக உள்ளது.

நிலமாக இருந்தாலும் சரி கடலாக இருந்தாலும் சரி இந்த இரண்டையும் மையப் படுத்தியதாக காணப்படுகின்றது. கடலில் இருக்கின்ற அனைத்து வளங்களும் இந்தியாவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. காற்றாலை யாக இருந்தாலும் சரி கணிய மணல் அகழ்வாக இருந்தாலும் சரி இந்தியாவிடம் கையளிக்கப்பட்டு விட்டது.

நாங்கள் மீனவர்களின் பிரச்சனையை கதைப்பதற்காகவே மாத்திரம் ஜனாதிபதியை சந்திக்க சந்தர்ப்பம் கோரினோம்.

எந்த அபிவிருத்திக்கும் நாங்கள் தடையானவர்கள் இல்லை. எமது வாழ்வாதார பிரச்சினையை கதைப்பதற்கு அவரை அணுகுகின்ற போது அவர் அதை தட்டிக் கழிக்கின்றார்.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரிற்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்ட போது அவரை சந்திப்பதற்கான எமது கோரிக்கை தட்டி கழிக்கப்பட்டுள்ளது.

மீனவர்களை ஏன் அவர் கண்டுகொள்ளவில்லை. வடமாகாணமும் மன்னார் மாவட்டமும் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

எதிர் வரும் மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் ஒன்று வரவுள்ளது. அப்போது இவர் மன்னாரிற்கு வந்து தான் ஆக வேண்டும். மீனவர்களிடம் வாக்கு கேட்கத்தான் வேண்டும். மீனவர்களே இறுதி முடிவு எடுக்க வேண்டும்.

# எல்லை தாண்டி மீன் பிடித்ததாக ராமேஸ்வரம் மீனவர்கள் 22 பேர் 3 படகுகளுடன் இலங்கை கடற்படையினரால் கைது:



## மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும் என உறவினர்கள் கண்ணீர் மல்க பேட்டி

- எஸ்.ஆர். லெம்பேட் (23-06-2024)

ராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மூன்று படகையும் அதிலிருந்து 22 மீனவர்களையும் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படை கைது செய்து காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று விசாரணைக்கு பின்னர் யாழ்ப்பாணம் மீன் வளத்துறை அதிகாரிகளிடம் மீனவர்கள் படகுடன் ஒப்படைக்கப்பட்டனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்தில் இருந்து 22-06-2024 அன்று 507 விசைப்படகுகளில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான மீனவர்கள் மீன்பிடி அனுமதி சீட்டு பெற்று மீன் பிடிக்க கடலுக்கு சென்றனர்.

மீனவர்கள் 23-06-2024 அன்று அதிகாலை சுமார் 2 மணி அளவில் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக ஜஸ்டின், ரெயிமெண்ட் மற்றும் கெரின் ஆகியோருக்கு சொந்தமான 3 மீன்பிடி விசைப் படைகளையும் அதில் இருந்த சுரேஷ் பாபு, காளிதாஸ், ரூபின், கண்ணன், நாகராஜன் உள்ளிட்ட 22 மீனவர்களை கைது செய்து காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்று அவர்களிடம் முதல் கட்ட விசாரணை செய்து பின்னர் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தில் வைத்து மீனவர்கள் யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகள் ஒப்படைக்கப்பட்டனர்.

ஒப்படைக்கப்பட்ட மீனவர்களுக்கு மலேரியா மற்றும் கொரோனா பரிசோதனை செய்த பின்னர் மீனவர்கள் அனைவரும் தற்போது யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

மீன்வளத்துறை அதிகாரிகள் விசாரணைக்குப் பின் மீனவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்படுவார்கள் என மீன்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

60 நாள் மீன்பிடி தடைக்காலம் முடிந்து ஒரு வாரம் காலம் மட்டும் முடிவடைந்த நிலையில் இலங்கை கடற்படையினர் 22 ராமேஸ்வரம் மீனவர்கள் சிறை பிடித்து சென்றது ராமநாதபுரம் மாவட்ட கடற்கரை கிராமங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



வயிற்று பிழைப்பிற்காக மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கை கடற்படை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளனர்.

# தமிழக மீனவர்கள் தொடர் கைதின் எதிரொலி: எல்லை தாண்டி மீன் பிடிக்க வேண்டாம் என தமிழக மீன்வளத் துறையினர் ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கை



- எஸ்.ஆர்.றொசேரியன் லெம்பேட் (26-06-2024)

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கடந்த ஒரு வாரத்தில் 30-க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் அடுத்தடுத்து இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு வருவதன் எதிரொலியாக ராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையை தாண்டி செல்ல வேண்டாம் எனவும், உயிர்காக்கும் உபகரணங்களை கையில் வைத்துக் கொள்ளுமாறு ராமேஸ்வரம் மீன்வளத்துறை அதிகாரிகள் ஒலிபெருக்கி மூலமாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் இருந்து கடந்த 22-06-2024 சனிக்கிழமை மீன் பிடிக்க சென்ற மூன்று விசைப்படகுகளையும் அதிலிருந்து 22 மீனவர்களையும் எல்லை தாண்டி பிடித்ததாக இலங்கை கடற்படை கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.

அதனை தொடர்ந்து 10 நாகை மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர். தமிழக மீனவர்களை தொடர்ந்து இலங்கை கடற்படை கைது செய்து வருவதால் மீனவர்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் 22-06-2024 சனிக்கிழமை மீன் பிடிக்க சென்ற 22 ராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கை கடற்படை சிறை பிடித்ததை கண்டித்து ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து இன்று வேலை நிறுத்தப் போராட்டம் முடிந்து கடலுக்கு மீன்பிடிக்க சென்ற ராமேஸ்வரம் மீனவர்களுக்கு ராமேஸ்வரம் மீன்வளத்துறை உதவி இயக்குனர் அப்துல் காதர் ஜெய்லானி உத்தரவின் பேரில் மீன்வளத் துறை அதிகாரிகள் ஒலிபெருக்கி வாயிலாக "இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லையை தாண்டி இலங்கை கடற்பரப்பிற்குள் மீன்பிடிக்க செல்லக்கூடாது, உயிர் காக்கும் உபகரணங்களை வைத்திருக்க வேண்டும், மீனவர் அடையாள அட்டை மற்றும் மீன்பிடி படகின் உரிய ஆவணங்களை வைத்துக் கொள்ளுமாறு" எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

உலக செய்திகள் World News

# ரி-20 உலகக் கிண்ணப் போட்டி

அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் இடம்பெற்றுவரும் 2024 ஆம் ஆண்டுக்கான ரி-20 உலகக்கிண்ணத் தொடரானது பல சுவாரஸ்களை ஏற்படுத்தி வருகின்றது. தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள இந்தப் போட்டியில் முதற் சுற்றுப் போட்டிகள் முடிவடைந்து எட்டு அணிகளைக் கொண்ட சுற்று கடந்த வாரம் இடம்பெற்றது. அதில் முதற்சுற்றுப் போட்டியுடன் முக்கிய நாடுகளான இலங்கை, நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகள் கத்துக்குட்டி அணிகளினால் தோற்கடிக்கப்பட்டு வெளியேறி இருந்தன.

இதில் அமெரிக்க அணியில் பெரும்பாலும் விளையாடும் வீரர்கள் இந்தியா நாட்டில் பிறந்து சந்தர்ப்பம் கிடைக்காமையினால் அமெரிக்காவில் குடியேறி தற்போது அந்நாட்டுக்காக விளையாடும் வீரர்களான காணப்படுவதால் அந்த அணியும் பலம் வாய்ந்த அணியாக காணப்பட்டது. அத்துடன் ஐ.பி.எல். போட்டிகளில் மூலம் சில சிறிய நாட்டு வீரர்கள் தமது திறமையை வளர்த்துக் கொண்டமையாலும் பல முன்னணி அணிகள் ஆரம்பத்திலேயே வெளியேற்றப்பட்டன.

இரண்டாம் சுற்றுக்கு முன்னேறிய எட்டு அணிகளில் இந்தியா, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் இவை ஒரு குழுவாகவும் இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள், அமெரிக்கா என்பன இரண்டாபது குழுவாகவும் போட்டியிட்டன. இதில் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அணிகள் ஏனைய அணிகளுடன் போட்டியிட்டு அதில் அதிக புள்ளிகளைப் பெறும் அணி அரையிறுதிக்கு தெரிவு செய்யப்படும். அந்தவகையில் முதலாவது குழுவிலிருந்து இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

இங்கு ஆப்கானிஸ்தான் அணியானது சம்பியன் அணியான அவுஸ்திரேலியாவையும் எதிர்பார்க்கப்பட்ட பங்களாதேஷ'யும் தோற்கடித்து அரையிறுதிக்கு முன்னேறியுள்ளதுடன் இரண்டாவது குழுவிலி தென்னாபிரிக்க மற்றும் இங்கிலாந்து அணிகள் அரைறிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளன. இதில் இந்திய அணியானது நாளை இங்கிலாந்தினை எதிர்கொள்ள உள்ளதுடன் தென்னாபிரிக்கா அணியானது ஆப்கானிஷ்தானை நாளை மறுதினம் எதிர்கொள்ளவுள்ளது.

பல முன்னணி அணிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த ஆப்கானிஸ்தான் அணியானது அரையிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெறுமா அல்லது தென்னாபிரிக்கா அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து முதற்தடவையாக அரையிறுதிக்கு நுழைந்துள்ள ஆப்கானிஸ்தான் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறுமான என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.

# வடமாகாண இளைஞர்களின் தவறான நடத்தை புலம்பெயர்ந்தோர் அனுப்பும் பணமும் காரணம்

யாழ்ப்பாணத்தில் தற்போது இளைஞர்கள் மத்தியில் பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. இவ்வாறு சட்டவிரேத செயற்பாடுகள் அதிகரித்து வருவதற்கு காரணம் இளைஞர்கள் மத்தியில் வேண்டுமென்றே தென்னிலங்கையினால் கட்டவிழ்த்து விடப்பட்டதாக பல்வேறு தரப்பினரும் குறிப்பிட்டு வருகின்றனர். அங்கு இராணுவத்தினரே வேண்டுமென்று இளைஞர் மத்தியில் கஞ்சா, அபின், கெரோயின், மற்றும் மது பழக்கங்களை தூண்டியதாகவும் மேலும் தென்னிலங்கை பெண்களை அழைத்து வந்து விடுதிகளில் சட்டவிரேத செயற்பாடுகளுக்கு உட்படுத்துகின்றமை என குறிப்பிடப்படுகின்றது. இதனை முற்று முழுதாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் தென்னிலங்கையில் காணப்படும் தமிழ் முஸ்லிம் மக்கள் அனைவரும் தினத்தினம் தமது வாழ்க்கையினை சிறப்பாக கொண்டு செல்வதைக் காணலாம்.

பல்வேறு கஷ்டங்கள் ஏற்பட்ட போதிலும் பெற்றேரின் கண்டிப்புடன் காணப்படும் பெரும்பாலான பிள்ளைகள் இவ்வாறன நடத்தைகளை மேற்கொள்வதில்லை. இதற்கு காரணம் பெற்றோர் தமது பிள்ளைகளின் நடவடிக்கை தொடர்பாக அவதானமாக இருப்பதாகும். இங்கு அனைத்து பெற்றோரும் அவதானக் குறைவாக இருப்பதில்லை. ஒட்டுமொத்தமாக அனைவரையும் குறைசெல்ல முடியாது.

பொதுவாக வடமாகாணத்தில் காணப்படும் குடும்பங்களில் எவராவது ஒருவர் ஐரோப்பிய நாடு ஒன்றில் தொழில் புரிபவராகவோ அல்லது நிரந்தரமாக வசிப்பவராகவோ கணப்படுகின்றார். அவர் அந்த நாட்டில் பனி, மழை, குளிர், வெப்பம் போன்ற பல காரணிகளுக்கு மத்தியில் பெரும்பாடுபட்டு தாம் உழைக்கும் பணத்தில் ஒரு பகுதியை தமது உறவுகளுக்கென அனுப்புகின்றார்கள். அவ்வாறு அனுப்பப்படும் தொகையானது இலங்கையில் ரூபா மதிப்பில் கணிப்பிடும் போது அது பெரிய தொகையாக அமைகின்றது. யாழ்ப்பாணத்தில் கூலி வேலை செய்யும் ஒருவர் ஒரு நாளுக்கு 3000 ரூபா முதல் 4000 ரூபாவரை பெறுகின்றனார். ஆனால் வெளிநாட்டில் இருந்து வரும் தொகை பெரியதாக காணப்படும் போது அவர்கள் அத் தொகை பணத்தினை ஆடம்பரமாக செலவு செய்வதுடன் தமது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் சேர்ந்து அனாவசியமான முறையில் செலவிடுகின்றார்கள்.

அத்துடன் சில பெற்றோர் தமது பிள்ளைகளை அங்கு படிப்பிப்பதில் ஆர்வம் காட்டாது அவர்களையும் லண்டன், பிரான்ஸ், கனடா போன்ற நாடுகளுக்கு அனுப்பப் போகின்றோம் அவர்களுக்கு படிப்பு முக்கியம் இல்லை என்ற எண்ணத்தில் செயற்படுவதை காணக்கூடியதாக உள்ளது. இதற்கு காரணம் வெளிநாட்டில் அதிகமாக சம்பாதிக்க முடியும் இங்கு படித்து முடித்தால் கிடைக்கும் அரச உத்தியோகத்தின் மூலம் குறைவான பணமே கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பாகும். அத்துடன் பிள்ளைகளை அனுப்பிவிட்டால் தாமும் வெளிநாடு சென்று வரலாம் என்ற ஆசையும் தான்.

எனவே, இவர்களின் இவ்வாறான செயற்பாடுகளால் சுற்றித்திரியும் இளைஞர்கள் ஏதோ ஒரு வகையில் தறவான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தூண்டப்படுகின்றார்கள். தாம் கஷ்டப்பட்டு உழைத்தால் அதன் வலி அவர்களுக்கு தெரியும் ஆனால் வெளிநாட்டு காசு என்பதால் அவர்களுக்கு அதன் வலி புரிவதில்லை. எனவே, பணத்தை அனுப்பும் புலம் பெயர்ந்த உறவுகள் அதன் வலியை அங்குள்ளவர்களுக்கு தெரியப்படுத்தவேண்டும். அதேபோல் இலங்கையில் வசிக்கும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு கஷ்டம் ஒன்றால் என்ன என்பதையும் ஒழுக்கத்தையும் கல்வியின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறி எதிர்கால சந்ததியினர் தவறான திசையில் செல்வதை தடுப்பதற்கு தம்மாலான பங்களிப்பினை வழங்குவதன் மூலம் சிலந்த எதிர்கால சமூதாயத்தை உருவாக்கலாம்.




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் மீண்டும் ஆரம்பம்!



தையிட்டியில் அமைந்துள்ள சட்ட விரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான தொடர் போராட்டமானது வெள்ளிக்கிழமை 21ம் திகதி அன்றையதினம் ஆரம்பமாகியுள்ளது.

குறித்த விகாரையானது பொதுமக்களது காணிகளை அபகரித்து அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ளது. எனவே அதனை அகற்றுமாறு கோரி ஒரு வருட காலமாக தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருக்கின்றது.

பௌர்ணமி தினத்தை முன்னிட்டு குறித்து விகாரையில் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட உள்ள நிலையில் அதற்கு எதிர்ப்பை வெளிக்காட்டும் முகாமாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# தமிழீழ விடுதலை போராட்டத்தின் முதுபெரும் தூண் சரிந்தது

## மாமனிதர் மருத்துவர் ஜெயகுலராஜாவின் மறைவு தமிழர் தேசத்தை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாருக்கு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி

இயக்கத்தின் சார்பில் எமது ஆத்மார்த்தமான அஞ்சலிகளையும் புகழ் வணக்கத்தினையும் தெரிவித்து நிற்கின்றோம். தனது வாழ்நாளில் அதிகமான காலப்பகுதியை தேசவிடுதலைப் பணிக்காக அர்ப்பணித்தவர். ஈழத்தமிழரின் உரிமைப்போராட்டத்தின் ஆரம்பம் முதலே தன்னை தமிழினத்தின் ஒப்பற்ற உயரிய உன்னத விடுதலைப்பணிக்காக தன்னை அர்ப்பணித்து தனது தியாகம் நிறைந்த பணியினாலும் போர்க்காலங்களில் மக்கள் துயர்துடைப்பு பணிகளிலும் மருத்துவ சேவையிலும் தன்னை அர்ப்பணித்து பணியாற்றியதன் மூலம் எம்மின மக்களின் உள்ளங்களிலும் எம் தேசத்தலைவரின் இதயத்திலும் நீங்காத இடம்பிடித்தன் மூலம் எம் தேச ஆன்மாவில் நீக்கமற நிலைத்து ஈழத்தமிழர் வரலாற்றில் தனிமனித சரித்திரமாக மிளிர்கின்றார்.

இளம் மருத்துவராக ஜெயகுலராஜா அவர்கள் பணிபுரிந்து கொண்டிருந்த காலப்பகுதியில் இலங்கை அரசின் இன ஒடுக்குமுறையின் உச்சநிலையாக தமிழின ஒடுக்குமுறையின் அடிமைச்சசாசனமான 1972ல் அன்றைய பேரினவாத அரசினால் கொண்டுவரப்பட்ட முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் அரச உத்தியோத்தராக சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்து தனது இனமான கொள்கைக்கு முன்பாக தனது தொழிலை துச்சமென நினைத்து தூக்கி எறிந்த இனமான செம்மலாவார்.

தாயகத்தில் பேரினவாத ஆக்கிரமிப்பும் அடக்குமுறையும் உச்சம் பெற்றிருந்த நிலையில் தனது உயிரைக் கூட ஒரு பொருட்டாக எண்ணாது ஈழத்தமிழ் மக்களுக்கும் போராளிகளுக்கும் தனது மருத்துவப்பணியினையும் மனிதநேயப்பணியினையும் மிக அர்ப்பணிப்புடன் வழங்கினார். எடுத்துக்காட்டாக 1982ல் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த போராளிகள் அரச மருத்துவமனையில் சிகிச்சை பெறமுடியாது. ஏனென்றால் இராணுத்தினரால் இலகுவாக அடையாளம் காணமுடியும். இவ்வாறான ஆபத்து நிறைந்த சூழலில் அவர்களை தான் பணியாற்றிய திருச்சபை மருத்துவமனையாகிய புத்தூர் புனித லூக்கா மருத்துமனையில் சிகிச்சையளித்து தனது சகோதரர் அருட்தந்தையாக பணியாற்றிய புன்னாலைக்கட்டுவன் நல்லாயன் ஆலயத்தில் பாதுகாத்தார். இதன் விளைவாக இவரும் அவரின் சகோதரர் வணபிதா. ஜெயதிலகராஜாவும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டனர்.

1983ல் தமிழினத்துக்கு எதிராக நடந்த அரசபயங்கரவாதத்தின் கொலை வெறியாட்டமான வெலிக்கடை படுகொலையில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பி பின்னர் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு பின்னர் மட்டு சிறையுடைப்பில் சிறை மீண்டு தமிழகம் சென்றார்.

தமிழகத்திலும் தனது மானிடநேய மருத்துவப்பணியிலும் மக்கள் துயர்துடைப்பு பணியினையும் தொடர்ந்தார். அங்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்று ஈழஅகதிகள் மத்தியில் அர்ப்பணிப்பு மிக்க பணியாற்றினார். 1987ல் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் தம்பதிகளுடன் தாயகம் திரும்பி மீண்டும் தாயகத்தில் தனது உயரிய பணியினைத் தொடர்ந்தார்.

கடும்போரும் வன்முறைகளும் சூழ்ந்திருந்த காலப்பகுதியில் தனது அர்ப்பணிப்பு மிக்க பணிகள் மத்தியிலும் பல மக்கள் அமைப்புக்களின் தலைமை பொறுப்புக்களை ஏற்று சிறப்பான தலைமைத்துவத்தினை வழங்கியவர். எடுத்துக்காட்டாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம், யாழ் வை.எம்.சி.ஏ., யாழ் கிறிஸ்தவ ஒன்றியம் என்பவைகளின் தலைவராக செயற்பட்டு போர் நெருக்கடி மிக்க காலங்களில் சிறப்பான வழிநடத்தலையும் மக்கள் மத்தியில் நம்பிக்கையினையும் கொடுத்தவர். இது மாத்திரமன்றி போர்க்களங்களில் மருத்துவப்பணியாற்ற பல கள மருத்துவர்களை பயிற்சியளித்து உருவாக்கி போர்க்கள உயிர்காப்பு பணிகளை செம்மையாக்கியவர். கடும்போர் நெருக்கடிகள் மத்தியிலும் எம்தேச கட்டுமானத்தின் மைல்கல்லாக தமிழீழ மருத்துவக் கல்லூரியின் உருவாக்கத்திலும் அதன் வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகித்து செயற்பட்டவர்.

1995ல் இராணுவ ஆக்கிரமிப்பினால் யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வின்போது மக்களோடு மக்களாக இடம்பெயர்ந்து சென்று வன்னி பெருநிலப்பரப்பில் தனது பணியினைத் தொடர்ந்தார். அக்காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய பொறுப்பதிகாரியாக பொறுப்பேற்று பல்வேறு நெருக்கடிகள், சவால்கள் மத்தியில் கால்நடையாகவும் துவிச்சக்கரவண்டியிலும் பயணித்து தனது மனிதநேயப் பணியினை தொடர்ந்தவர். அதேவேளை வெண்புறா என்கின்ற செயற்கைக்கால் பொருத்தும் மனிதாபிமான தொண்டு நிறுவனத்தின் பணிப்பாளராக பணியேற்று போரின்போது கால்களை இழந்த அனேகருக்கு செயற்கைக்கால் பொருத்த காரணமாக அமைந்தார். போரினால் மிகக்கடுமையாக அழிவடைந்த முல்லைத்தீவு மண்ணில் சிறுவர்களை மகிழ்வூட்ட தனது சொந்த செலவில் மாவீரர் நினைவு பூங்காவை (விலங்கியல்) நிறுவி சிறுவர்களுக்கான சிறந்த மகிழ்வூட்டும் பொழுதுபோக்கு களத்தை உருவாக்கியவர். இப்படியாக எம் இனத்திற்காக இவர் ஆற்றிய எண்ணிலடங்காப் பணிகளை எழுதிக்கொண்டே செல்லலாம்.

தனது அறிவை, ஆற்றலை பன்முக ஆளுமையினை தேசவிடுதலைக்காக அர்ப்பணித்து அரும்பாடுபட்டு பணியாற்றிய ஓர் தியாகச்செம்மலை எம் தேசம் இன்று இழந்து நிற்கிறது. தேசவிடுதலை என்கின்ற உயர்ந்த இலட்சியத்துக்காக வாழ்ந்து அதற்காக உழைத்த உன்னதமான மனிதர்களை சாவுகள் ஒருபோதும் காவுகொள்வதில்லை. எம்தேசத்தின் ஆன்மாவிலும் தேசமக்களின் மனங்களிலும் நிரந்தரமாக வாழ்வார்கள்.

இன்று எமது தேசம் எதிர்கொண்டுள்ள நெருக்கடியான ஆக்கிரமிப்பு சூழ்நிலையில் மாமனிதர் மருத்துவர் ஜெயகுலராஜா போல் ஆயிரம் ஆயிரம் தேசப்பற்றாளர்கள் உருவாக்கினால் தான் எமது தேசத்தினையும் மக்களினையும் மீட்க முடியும் என்பதே நிதர்சனம். மருத்துவர் ஜெயகுலராஜா அவர்களின் மறைவிற்கு இறுதி வணக்கம் செலுத்தும் அதே தருணத்தில், அன்னாரின் சுதந்திர தேச கனவினை நனவாக்க நாம் அனைவரும் சேர்ந்து உழைப்போம் என உறுதி எடுத்துக்கொள்வோம்.



நன்றி.
அருட்பணி. து. ஜோசப்மேரி
தலைவர்

தவத்திரு வேலன் சுவாமிகள்
தலைமை ஒருங்கிணைப்பாளர்

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி
வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்

# தமிழக மீனவர்களிடம் தினக்கூலிகளாக வேலை செய்யும் ஈழத்து அகதிகள்

- நடராசா லோகதயாளன்

இலங்கைக் கடற்பரப்பிற்குள் ஊடுருவிய சமயம் கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்களில் இருவர் இலங்கையைச் சேரந்தவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

நெடுந்தீவுக் கடற்பரப.பிற்குள் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்கள் 3 படகுடன் 22-06-2024 அன்று காலை நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்டனர்.

தமிழகம் இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்ட இந்த 22 மீனவர்களில் இருவர் இலங்கையர் எனவும் இலங்கையில் இருந்து படகு வழியாக தமிழகத்திற்கு தப்பிச் சென்று இராமேஸ்வரம் பகுதியில் உள்ள மண்டபம் அகதிகள் முகாமில் வசிக்கும் சுப்பிரமணியம் தீபன் சுப்பிரமணியம் சுதாகர் ஆகிய சகோதரர்களே இவ்வாறு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

1997 ஆம் ஆண்டு போர் உச்சம் பெற்ற சமயம் தப்பிச் சென்று முகாமில் வசிக்கும் இவர்கள் தினக் கூலிக்காக தமிழக மீனவர்கள் படகில் பணியாற்றுவதாக கண்டறியப்பட்டுள்ளது.



# மனோ கணேசன் தலைமையில் த.மு.கூட்டணி தூதுக்குழு, ஐநா வதிவிட பிரதிநிதி மார்க் அந்திரேயை சந்தித்து உரையாடல்

இலங்கைக்கான ஐநா வதிவிட பிரதிநிதி மார்க் அந்திரேவிற்கும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான தூதுக்குழுவுக்கும் இடையில் தீர்க்கமான சந்திப்பு 26-06-2024 அன்று கொழும்பில் நிகழ்ந்தது. இதன் போது, தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார் மற்றும் தமுகூ/ஜமமு கேகாலை மாவட்ட அமைப்பாளர் எம். பரணிதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பு தொடர்பில் மனோ கணேசன் எம்பி ஊடகங்களுக்கு கருத்து கூறிய போது தெரிவித்தாவது,

நுவரெலியா முதல் கொழும்பு அவிசாவளை உட்பட, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, குருநாகலை ஆகிய மாவட்டங்களில் பரந்து விரிந்துள்ள பெருந்தோட்ட பிரதேசங்களில், நவீன அடிமைத்துவ அம்சங்களுக்கு மத்தியில், மலையக சமூக குடும்பங்கள் வாழ்கின்றன. இம்மக்களுக்கு பெருந்தோட்ட நிலங்களில், வதி விட காணி உரிமை, வாழ்வாதார காணி உரிமை உள்ளிட்ட உரிமைகளை பெற்று தந்து அவர்களை இந்நாட்டின் முழுமையான பிரஜைகளாக்கும் கொள்கையை தமிழ் முற்போக்கு கூட்டணி முன்னெடுக்கின்றது.

அடுத்து வரும் ஆட்சி மாற்றத்தை அடுத்து, இது ஒட்டு மொத்த பெருந்தோட்ட துறையிலும் முறை மாற்றமாக பரிணமிக்க வேண்டும். அதற்கான முன் தயாரிப்பு பணிகளில் நாம் இன்று ஈடுபட்டுள்ளோம். இந்த விவகாரங்கள தொடர்பான உள்நாட்டு அரசியல் சட்டவாக்க நடவடிக்கைளை தமிழ் முற்போக்கு கூட்டணி மேற்கொள்ளும். அதற்கான பலம் மற்றும் தூரப்பார்வை எம்மிடம் உள்ளது. அடுத்த ஆட்சி மாற்றத்துக்கு உள்ளே சென்று திட்டங்களை வகுப்பதை விட, முன்கூட்டியே முன் தயாரிப்பு நடவடிக்கைகளில் தற்போது நாம் ஈடுபட்டுள்ளோம்.

இந்த விவகாரம் தொடர்பில் மலையக சிவில் சமூகத்துடனும் நாம் தற்போது கலந்து உரையாடுகிறோம். மக்கள் ஆணை கொண்ட அரசியல் பிரநிதிகளுடன் இணைந்து பணியாற்ற கூடிய மலையக சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பற்றியும் நாம் வெகு விரைவில் சர்வதேச சமூகத்துக்கு அறிவிப்போம் எனவும், ஐநா நிறுவனங்களான உணவு விவசாய நிறுவனம், யுனிசெப், உலக உணவு நிறுவனம் ஆகியவை ஊடாக எமக்கு தொழில்நுட்ப, அபிவிருத்தி, ஒத்துழைப்புகளை வழங்க ஐநா முன் வர வேண்டும் என்ற கோரிக்கையையும், நாம் இலங்கை ஐநா வதிவிட பிரதிநிதி மார்க் அந்திரேயிடம் முன் வைத்துள்ளோம். எமது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட இலங்கை ஐநா வதிவிட பிரதிநிதி ஆவன செய்வதாக உறுதி அளித்தார்.

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கல்லுண்டை பகுதி மக்கள் அவர்களது குடியேற்ற திட்டத்திற்கு அருகாமையில் கவனஈர்ப்பு போராட்டம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து 21-06-2024 வெள்ளிக்கிழமை அன்றைய தினம் கல்லுண்டை பகுதி மக்கள் அவர்களது குடியேற்ற திட்டத்திற்கு அருகாமையில் கவனஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், கல்லூண்டாய் குடியேற்றத்திட்ட பகுதியில் ஜே/135, ஜே/136 என இரண்டு கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. ஆனால் மொத்தமாக 88 குடும்பங்கள் தான் வசிக்கின்றன. ஜ/135 கிராம சேவகர் பிரிவில் சுமார் 27 குடும்பங்கள் தான் உள்ளன. ஏனையோர் ஜ/136 கிராம சேவகர் பிரிவில் தான் உள்ளனர்.

இரண்டு கிராமங்களையும் பிரிப்பதற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் அனுமதியுடன், ஜேர்மனியை சேர்ந்த பெண் ஒருவரின் நிதியில் கட்டடம் ஒன்று கட்டப்படுகிறது. இந்த கட்டடம் ஜே/135 பகுதியைச் சார்ந்ததாகவே உள்ளது. இதனால் ஜ/136 பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கட்டடம் யாருக்காக, எந்த நோக்கத்திற்காக, எந்த நிர்வாகத்தின் கீழ் கட்டப்படுகின்றது என்ற எதுவும் எமக்கு தெரியாது. இதுகுறித்து கிராம சேவகரை கேட்டபோது, அது சம்பந்தமான எந்தவொரு உத்தியோகபூர்வ தகவலும் தனக்கு வழங்கப்படவில்லை என கூறுகிறார்.

சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரே இதில் தலையிட்டு குழப்பத்தை ஏற்படுத்துகின்றார். கிராம சேவகரா சமுர்த்தி உத்தியோகத்தரா என்ற குழப்பத்தில் நாங்கள் உள்ளோம். இரண்டு பகுதி மக்களும் சந்தோஷமாக இருந்தோம். ஆனால் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் இரண்டு பிரிவு மக்களையும் பிரித்து பிரச்சனையை உண்டாக்குகின்றார்.

சமுர்த்தி உத்தியோகத்தர் தனது அலுவலகத்தில் இருக்காமல் ஜே/135 கிராம சேவகர் பிரிவில் உள்ள சில பெண்களின் வீடுகளுக்குள் இருந்து கதைத்துக்கொண்டு இருக்கின்றார். ஏதாவது தேவைக்கு அலுவலகத்துக்கு சென்றாலும் அங்கு சமுர்த்தி உத்தியோகத்தர் இல்லை.

சமுர்த்தி உத்தியோகத்தருக்கு இடமாற்றம் கிடைத்தும் கூட அவர் செல்லாமல் இருக்கின்றார். இரண்டு கிராம சேவகர் பிரிவுகளையும் இணைத்து சந்தோஷமாக செயற்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை என்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகளை ஏந்தி கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



# யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வத்திராயனில் நபர் ஒருவர் தீ காயங்களுடன் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் 20ம் திகதி வியாழக்கிழமையன்று இரவு 10:00 மணியளவில் எரியூட்டப்பட்ட நிலையில் நபர் ஒருவர் பொதுமக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மருதங்கேணியை சேர்ந்தவரே இவ்வாறு மீட்கப்பட்டு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்படிருந்த நிலையில் அங்கிருந்தும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் உள்ள தனது வீட்டில் தனியாக உறங்கியுள்ளார். இந்நிலையில் இரவு பத்து மணியளவில் எரிகாயங்களுடன் அலறியடித்து வீட்டில் இருந்து வெளியே ஓடிவந்த வேளை பொதுமக்களால் மீட்கப்பட்டு மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மந்திகை ஊடாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளார்.



இச் சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பணத்தை காலால் மிதித்த வர்த்தகருக்கு விசாரணை — கொழும்பிலிருந்து வந்தது உத்தரவு!

பணத்தை காலால் மிதித்த வர்த்தகருக்கு விசாரணை - கொழும்பிலிருந்து வந்த உத்தரவு மேற்படி வர்த்தகரை யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்துக்கு அழைத்து விசாரணை நடத்தும் அளவிற்கு கொண்டு சென்றுள்ள என எமது யாழ்ப்பாணச் செய்தியாளர் அறிவித்துள்ளார். அவரிடம் வாக்குமூலமும் பெறப்பட்டுள்ளது.

பிரபல வர்த்தகர் ஒருவரான தியாகி என்பவர் பணத்தை காலால் மிதிக்கும் வீடியோ பதிவுகள் அண்மையில் சமூக ஊடகங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில், அது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் தலைமையகத்தில் இருந்து வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைய, யாழ்ப்பாணப்பொலிஸ் பிராந்தியத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரான ஜெகத் விஷாந்த தலைமையிலான குழுவினரால் மேற்படி வர்த்தகர் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்துக்கு 22-06-2024 அன்று அழைக்கப்பட்டு அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அவரின் வாக்குமூலம் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# பொலன்னறுவை பொலிசாரின் சன்மான பணம் 74 இலச்சத்தை ஏப்பமிட்ட பொலிஸ் சாஜன் ஒருவர் பணியில் இருந்து இடைநீக்கம்

பொலன்னறுவை பொலிசாருக்கு வழங்கும் சன்மான பணமான 74 இலச்சம் ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் சாஜன் ஒருவரை வெள்ளிக்கிழமை (21) பணியில் இருந்து இடை நீக்கம் செய்யுயப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த பொலிஸ் சாஜன் 2021ம் ஆண்டு பொலன்னறுவை பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றி வந்த போது அங்கு பொலிசாருக்கு சன்மானமாக வழங்கும் பணமான 74 இலச்சம் ரூபாவை மோசடி செய்துள்ளநிலையில் இடமாற்றம் பெற்று ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்துள்ளார்.

இந்த நிலையில் இந்த மோசடி தொடர்பாக பொலன்னறுவை விசேட குற்றப் புலன்விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுவந்த நிலையில் இவரை கடந்த 18ம் திகதி கைது செய்து பொலன்னறுவை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் வெளிவந்துள்ளார்.

இவ்வாறு பிணையில் வெளிவந்தவரை உடனடியாக பணியில் இருந்து பொலிஸ் திணைக்களம் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் 34 வது தியாகிகள் தின நினைவேந்தலும் 200 பெண்தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு பணம் வழங்கி கௌரவிப்பும்



மக்கள் இல்லாத மண்ணை நேசிக்கவில்லை, மக்களுக்காகவே மண்ணை நேசிக்கின்றோம் எனும் தொனிப்பொருளில் சத்துருக்கொண்டான், காத்தான்குடி கொக்கட்டிச்சோலை, அருந்தலாவ, வெருகல் படுகொலை என கொல்லப்பட்டவர்களை நினைவு கூறும் வகையில் தோழர் பத்ம நாபா 34 வது தியாகிகள் தினம் ஜுன் 19 நினைவேந்தலும் பெண்கள் தலைமைதாங்கும் 200 குடும்பங்களை கௌரவிக்கும் நிகழ்வு 23-06-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்றது.

பத்மநாபா மக்கள் முன்னணி கொக்கொட்டிச்சோலை அமைப்பின் ஏற்பாட்டில் பத்மநாபா மக்கள் முன்னணி தலைவர் தோழர் யோகி என்றழைக்கப்படும் முருகையா யோகராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் மற்றும் பெண் தலைமைதாங்கும் குடும்பங்களை கௌரவிக்கும் நிகழ்வில் அதிதிகளாக நன்கொடையாளர்களான கனடாவைச் சேர்ந்த கனகசபை சபேசன், இங்கிலாந்தைச் சேர்ந்த கனகசபை சிவசுந்தரம்,



மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு சபை தலைவரும் மாவட்ட பல. நோக்கு கூட்டுறவு சங்க முன்னாள் தலைவருமான எம். உதயராஜ், மட்டக்களப்பு தபால்கந்தோர் தபால் அதிபர் த.இந்திரன், சமாதான நீதவானும் மட்டக்களப்பு ப.நோ.கூட்டுறவு சங்க முன்னாள் தலைவரும் எல்லை வீதி சிந்தாமணி பிள்ளையார் ஆலைய போசகருமான சிவலிங்கம் கனகசபை,

மட்டு அம்பாறை செயலாளர் தோழர் சலீம், சமூக செயற்பாட்டாளர் செங்கதிரோன் கோபாலகிருஸ்ணன், உட்படவர்கள் கலந்துகொண்டு (ஈ.பி.ஆர்.எல்.எப்) தலைவர் பத்மநாபாவின் திருவுருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி சுடர் ஏற்றியதுடன் கொக்கட்டிச்சோலை, காத்தான்குடி, வெருகல், சத்திருக்கொண்டான், அரந்தலாவையில் படுகொலை செய்யப்பட்டவர்களையும் நினைவு கூர்ந்து 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதனை தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட கொக்கட்டிச்சேலை பிரதேசத்தைச் சேர்ந்த 200 பெண்தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு பணம் வழங்கி கௌரவித்தனர்.

# தமிழ் மக்களுக்கு சமஸ்டித் தீர்வுக்கான ஆதரவை வெளிப்படுத்தவேண்டும் என டுநளடநல ஊசயபை அம்மையாரிடம் வலியுறுத்திய எம்.பி. எஸ் கஜேந்தின்




தமிழ் மக்கள் ஒற்றையாட்சிக் குட்பட்ட எந்தவொரு தீர்வையும் நிராகரிப்பதுடன், தமிழர்தேசத்தை அங்கீகரித்து தமிழர்கள் ஒருபோதும் இழக்கமுடியாத சுயநிர்ணய உரிமையை, அனுபவிக்க கூடியதுமான ஒரு சமஸ்டித் தீர்வுக்கான ஆதரவை வெளிப்படுத்தவேண்டும் என பொதுநலவாய அமைப்பின் தென் ஆசிய பகுதிக்குப் பொறுப்பதிகாரியான Lesley Craig அம்மையார் மற்றும் கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதுவர் ஆகியோருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நா.உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நகரிலுள்ள ஜெற்விங் (Jetwing) விடுதியில் பொதுநலவாய அமைப்பின் தென் ஆசிய பகுதிக்குப் பொறுப்பதிகாரியான Lesley Craig அம்மையார் மற்றும் கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதுவர் ஆகியோருக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நா.உ.செல்வராசா கஜேந்திரன் ஆகியோருக்குமிடையில் 25-06-2024 செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற சந்திப்பின் போது இவ்வாறு வலியுறுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 75 வருடங்களாக இலங்கை அரசு கடைபிடித்துவரும் கொள்கைகளும், தீர்க்கப்படாமல் நீண்டு செல்லும் இனப்பிரச்சினையுமே இலங்கையின் இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்குப் பிரதான காரணங்களாகும். இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் பொருளாதாரத்தை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது.

இலங்கையில் இனப்பிரசினைக்கான அடிப்படை காரணியாக அமைந்தது இலங்கையிலிருக்கும் "ஒற்றையாட்சி" அரசியல் அமைப்பாகும். சிறிலங்கா அரசியலமைப்பில் 13ம் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு முற்றுமுழுதாக நடைமுறையில் இருக்கும்போதே தமிழ்த் தேசம் மீதான இலங்கை அரசின் இனவழிப்பு நடைபெற்றிருந்தது.

யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு புரிந்த இனவழிப்புக்குற்றங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை போன்றவற்றிற்கும் இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் தமிழர் தேசம் மீதான கட்டமைப்புசார் இனவழிப்பும் தீவிரமடைந்து மீண்டும் இனமுரண்பாடுகள் வலுவடைந்து செல்வதற்கும் அடிப்படைக் காரணம் இதே ஒற்றையாட்சி அரசியல் கட்டமைப்பேயாகும்.

13ம் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து, அதன் அதிகாரங்கள் குறித்து சிறிலங்காவின் மீயுயர் நீதிமன்றுகளில் ஏறத்தாழ 30 வழக்குகள் விசாரிக்கப்பட்டு அதன் தீர்ப்புகள் அனைத்தும், அரசு கட்டமைப்பு ஒற்றையாட்சியாக இருக்கும் வரைக்கும், அனைத்து அதிகாரங்களும், கொழும்பை மையப்படுத்திய மத்திய அரசிடமே இருக்கும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது, அதிகார பகிர்வுக்கு எதிராகவே நீதிமன்றங்கள் தீர்ப்புகளை அளித்திருக்கிறன.

உச்ச நீதிமன்று 13ம் திருத்த அதிகாரங்கள் குறித்து இதுவரைகாலமும் வழங்கிய தீர்ப்புக்களின் அடிப்படையிலும், 13ம் திருத்தமானது, சிறிலங்காவின் சட்ட வரம்புகளின் பிரகாரம் அது "முழுமையாக" அமுல்படுத்தப்பட்டே உள்ளது.

இலங்கைக்கான புதிய அரசியல் யாப்பினை உருவாக்குவதற்கான வரைபைத் தயாரிக்கும் பணிகள் கடந்த 2016இல் ஆரம்பித்து - 2019 சனவரியில் நிறைவடைந்தது. அந்த வரைபானது தற்போதுள்ள ஒற்றையாட்சிக் கட்டமைப்பினை விடவும் மிகவும் இறுக்கமான ஒற்றையாட்சி கட்டமைப்புக்கான வரைபாகும். அரச கட்டமைப்பு ஒற்றையாட்சி அரசமைப்பாக இருக்கும் வரையில், அர்த்தமுள்ள சுயாட்சியை அனுபவிக்கவோ அல்லது சுயநிர்ணய உரிமையை உரியமுறையில் பிரயோகிக்கவோ முடியாது.

இந்த காரணிகளின் அடிப்படையிலே எமது அமைப்பானது, 13 ஆம் திருத்தினைத் தீர்வுக்கான ஆரம்ப புள்ளியாகவேனும் கருத்திலெடுக்க கூடாதெனும் நிலைப்பாட்டினை ஆரம்பம் முதல் உறுதியாகவுள்ளது.

ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு தீர்வைக்குள் தமிழர்கள் நிராகரிப்பதுடன், தமிழர்தேசத்தை அங்கீகரித்து அதை பாதுகாக்கின்ற வகையிலானதும், தமிழர்கள் ஒருபோதும் இழக்கமுடியாத தங்களது சுயநிர்ணய உரிமையை, அனுபவிக்க கூடியதுமான ஒரு சமஸ்டித் தீர்வுக்கான தன் ஆதரவை வெளிப்படுத்தவேண்டும் எனவும் எமது அமைப்பு பிரித்தானியாவை கோரிநிற்கின்றது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்குள் கடந்த 12 ஆண்டுகளாக முடக்கப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் விவகாரத்தினை அங்கிருந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அல்லது சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்.

ஐநா மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர் ஒருவரை இலங்கையின் பெயர்குறித்து வடக்கு கிழக்கு நிலைமைகள் தொடர்பான அறிக்கையிடலுக்காக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்.

கடந்த 14 ஆண்டுகளாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பிரதான அமர்வுகளில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் மீதான இடையீட்டு விவாதங்களின்போதான எந்தவொரு சந்தர்பத்திலும், இலங்கையில் பாதிக்கப்பட்ட தரப்பு யார் என்பதுபற்றி இதுவரை வெளிப்படையாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதுடன் ஆனால் கடந்த 2024 மார்ச் 1 திகதி ஐநா மனித உரிமைகள் பேரவையில் மியன்மார் நாடு குறித்து பிரித்தானியா சமர்ப்பித்த அறிக்கையில் 6 தடவைகள் ரோகின்யா இனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே எதிர்காலத்தில் ஐ.ந மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானங்களில் பாதிக்கப்பட்ட தரப்பு தமிழ்கள் என்பதனைத் தெளிவாக குறிப்பிட பிரித்தானிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் அதேவேளை போரினால் அழிவடைந்த வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் கடந்த 15 ஆண்டுகளாக இலங்கை அரசினால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தினை போரால் பாதிக்கப்படட பிராந்தியமாகப் பிரகடனம் செய்யவும் இப்பிரதேச அபிவிருத்திக்கென சர்தேச நிதி உதவியைப் பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்.

தமிழர் தாயகத்தில் தீவிரப்படுத்தப்பட்டுள்ள சிங்களமயமாக்கல்களையும் பௌத்த மயமாக்கல்களையும் தடுத்து நிறுத்த உடனடி அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டுமெனவும்.

கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழர்கள் கைது செய்யப்படுவதும் சிறையிலடைக்கப்படுவதும் பொய் வழக்குகள் தொடர்வதும் இன்னமும் தொடர்கின்றது. இக்கொடிய சட்டத்தை நீக்க பிரித்தானிய அரசு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 15 - 29 வருடங்கள் வரை சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் 11 பேரும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டும். என்ற விடயங்கள் வலியுறுத்தப்பட்டது.

அதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் கேட்கப்பட்டபோது அதற்கு மாறி மாறி ஆட்சிப்பீடமேறும் ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளையும் கட்டமைப்புசார் இனவழிப்பையும் தீவிரப்படுத்திவரும் நிலையில் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பதென எமது அரசியல் இயக்கம் தீர்மானித்துள்ளது என்பதனையும் ஒற்றையாட்சி முறைமை ஒழிக்கப்படும் நிலையிலேயே முடிவு மறுபரிசீலனை செய்யப்படும் என்பதனையும் தெளிவுபடுத்தப்பட்டது என அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தலில் தொடர்பான கண்ணோட்டம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

### ஏதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையில் எதிர்கால ஜனாதிபதியாக வருவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பான ஆய்வு

இலங்கை ஜனநாயக தேசியக் குடியரசின் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் இடம்பெறும் என எதிர்வு கூறப்படுகின்றது. இத் தேர்தலில் தற்போது பல்முனைப் போட்டி ஒன்று ஆரம்பித்துள்ளது. தேர்தல் தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்பு இதுவரை வெளியிடப்படாத நிலையில் அரசியல் அமைப்பின் பிரகாரம் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெற வேண்டும் என கூறப்படுகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ச வெற்றி பெற்று அதன்பின் ஏற்பட்ட அரசியல் பொருளாதார நெருக்கடி காரணமாக பிரதமர் மகிந்த ராஜபக்ச வெளியிறேயதைத் தொடர்ந்து பிரதமராக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க அதன்பின் ஏற்பட்ட மக்கள் புரட்சியின் காரணமாக கோட்டாபய ராஜபக்ச வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்களிப்பின் மூலம் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

அப் பதவிக்காலம் இவ்வருடம் செப்டெம்பரில் முடிவடைவதால் இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி தேர்தல் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்கள் சூடுபிடித்துள்ளன. இதன்படி இம்முறை தேர்தலில் பேட்டியிடுவதற்கு பொதுவேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவும் அவருக்கு எதிராக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் அனுரகுமார திசாநாயக்க ஆகியோர் போட்டியிட உள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்பு இன்னமும் வெளிவரவில்லை.


இதற்குக் காரணம் பொதுஜன பெரமுன (மொட்டு கட்சி) வின் ஆதரவுடன் தேர்தலில் போட்டியிடுவதா அல்லது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்களை இணைத்துக் கொண்டு அனைவரின் ஆதரவுரன் பொது வேட்பாளராக போட்டியிடுவதா என்ற குழப்பமே இதற்குக் காரணமாகும்.

ஏனெனில் பொதுஜன பெரமுன கட்சியினர் ரணில் விக்கிரமசிங்கவை தமது கட்டுப்பாட்டில் அல்லது தமக்குச் சர்பானவராக செயற்பட வைப்பதற்கு எதிர்பார்க்கின்ற போதிலும் அது அவரின் வாக்கு வங்கியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கின்றனர். எதிர்கட்சி வேட்பாளர்கள் ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத்தைப் போல் எதிர்காலத்திலும் ராஜபக்சர்களை பாதுகாக்கவே போட்டியிடுகிறார் என்ற பிரச்சாரத்தின் மூலம் அவரின் வாக்கு வங்கியில் குறிப்பிட்ட வீதத்தினை குறைக்க முயற்சிக்கலாம் என்ற அச்சமும். அத்துடன் பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்தவர்களின் ஆதரவை இழக்க நேரிடும் என்ற அச்சமுமே இதற்கு காரணமாகும்.

மேலும் சிறுபான்மை தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவினை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் பொதுஜன பெரமுனவின் தயவில் இருந்து செயற்பட முடியாது. அத்துடன் தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே தற்போது தமிழ் மக்கள் சார்பில் தனியொரு வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துக் காணப்படுகின்றது. ஏனெனில் பெரும்பாலான தமிழ்க் கட்சிகளும் பொது அமைப்புக்களும் அதனையே விரும்புகின்றன. அத்துடன் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சியானது தேர்தலை புறக்கணிக்குமாறு கூறி வருகின்றது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இரா. சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பிரதான கட்சிகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஒருவரை ஆதரிக்க வேண்டும் என்றும் அதன் மூலமே தமிழ் மக்களின் உரிமைகளை பேரம்பேசி பெற்றுக் கொள்ள முடியும் என்ற நிலைப்பாட்டிலும் உள்ளனர். இதன்மூலம் நாம் காலம் காலமாக ஏமாற்றப்படுவதாக எதிர்த்தரப்பினர் கூறி வருகின்றனர்.

முஸ்லிம் காட்சிகளின் நிலைப்பாடும் பெரும்பாண்மை கட்சிகளை ஆதரிப்பதாகவே அமைந்துள்ளது. எனினும் அரசியல் சதுரங்க விளையாட்டில் மதிநுட்பவாதியான ரணில் விக்கிரமசிங்க எதிர்காலத்தில் எவ்வாறு காய் நகர்த்துவார் என்பதை பெறுத்தே இத் தேர்தலின் கட்சி தாவல்களும், ஆதரிப்புக்களும் உறுதியாக தெரியவரும்.

# ஊடகவியலாளர்களுக்கு இடையூறும் அச்சுறுத்தலும் விளைவித்த வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகச் செயலாளர்!



செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர்களுக்கு ஆளுநரின் ஊடகச் செயலா-ளர் இடையூறு விளைவித்ததுடன் அச்சுறுத்தலும் விடுத்தமை விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், 25-06-2024 அன்றையதினம் சங்கானையில் அம்மாச்சி உணவகம் திறந்து வைக்கப்பட்டது. இதில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உணவகத்தை திறந்து வைத்தார்.

இதன்போது செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர்களுக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில், ஆளுநரின் ஊடகச் செயலாளர் செயற்பட்டார். இடையூறு விளைவிக்க வேண்டாம் என ஊடகவியலாளர்கள் அந்த இடத்தில் ஆளுநரின் ஊடகச் செயலாளரிடம் கேட்டுக்கொண்டனர்.

உடனே அவர் “நீங்கள் யார்? ஊடகவியலாளர்களா? ஊடக அடையாள அட்டை இருக்கிறதா? எந்த ஊடகம்? எனக் கேட்டு அச்சுறுத்தும் விதத்தில் செயற்பட்டார். இதன்போது ஊடகவியலாளர்கள் தங்களை அடையாளப்படுத்த முயன்றபோது அங்கு வந்த ஆளுநரின் ஊடகப் பிரிவில் கடமை புரியும் ஒருவர் குறித்து ஊடகச் செயலாளருக்கு, அவர்கள் ஊடகவியலாளர்கள் தான் என்பதை உறுதிப்படுத்தியதுடன் சமரசப்படுத்தினார்.

பின்னர் குறித்த ஊடகச் செயலாளர் தொடர்ந்தும் இடையூறு விளைவிக்கும் விதத்தில் நடந்துகொண்டதை அவதானிக்க முடிந்தது.


## வயாவிளான் நலன்புரிச் சங்கம் (கனடா) நடாத்தும் ஒன்றுகூடல்

வயாவிளான நலன்புரிச˙ சங்கம் நடாத்தும் ஒன்று கூடல் எதிர்வரும் ஆடி மாதம் 6ம் திகதி 2024 சனிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 8.00 மணி வரை 390 Morningside Avenue இல் அமைந்துள்ள Morningside Park (Morningside/Ellesmere) Lot No:6 இல் நடைபெற இருப்பதால் அனைத்து நலன்புரிச்சங்க உறுப்பினர்களையும், மற்றும் நலன் விரும்பிகளையும் கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் அன்புடன் அழைக்கின்றனர்.

மேலதிக தொடர்புகளுக்கு:
தரன்: (647) 924-9390
பரம்: (416) 454-1263
கிருபா: (647) 501-9147


## அறிவித்தல்!
## கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பொதுக்கூட்டம்

அன்புடையீர்,
கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பொதுக்கூட்டமும், நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவும் 20-07-2024 சனிக்கிழமை காலை 10 :30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வு நடைபெறும் இடம் பற்றிய விபரங்களை பின்பு அறியத் தருவோம். பொதுக்கூட்டத்தில் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் பங்கேற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அங்கத்துவத்தை புதுப்பிப்பதற்கும், நிர்வாகசபை உறுப்பினர் பதவிகளுக்கு விண்ணப்பிதற்கும் , உரிய இறுதித் திகதி 12-07-2024.
நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்களை 12-07-2024 இற்கு முதல் கிடைக்கத்தக்கதாக **akanisuresh@gmail.com** அல்லது **vathani.suntha@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
அன்புடன்
அகணி சுரேஸ் , தலைவர் 416-732-8021 **akanisuresh@gmail.com**
கமலவதனா சுந்தா, செயலாளர் **vathani.suntha@gmail.com** (647)765-9761
ரவி கனகசபை, பொருளாளர் **kana-ravi@hotmail.com** (416)301-9027

# தலைகீழாக பதவி முத்திரை பொறித்த மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர்

இலங்கை செய்திகள் Sri Lanka News

**பு. கஜிந்தன்**

### சமூக ஊடகத்தில் வெளியிட்ட ஊடகவியலாளருக்கு விசாரணை!



தனது பதவி முத்திரையை தலைகீழாக பொறித்து கடிதம் ஒன்றினை அனுப்பிய மேலதிக மா-காண கல்வி பணிப்பாளர் த.உமாவினால் அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் முகநூலில் பதிவிட்ட ஊடகவ-ியலாளர் சொர்ணலிங்கம் வர்ணனை காங்கேசன்துறை கணிணி பொலிஸ் பிரிவினர் வாக்குமூலம் ஒன்றினை பதிவு செய்வதற்காக அழைப்பு விடுத்துள்ளனர்.


குறித்த ஊடகவ-ியலாளர், பதவி முத்திரையினை தலைகீழாக பொறிக்கப்பட்டமை தொடர்பில் ஆதாரபபூர்வமாக தனது முகநூலில் பதிவிட்டிருந்தார். குறித்த விடயம் தொடர்பில் மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் உமா பொ-லிஸ் கணிணி பிரிவிற்கு முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளார்.

இது குறித்து எதிர்வரும் திங்கட்கிழமை 24-06-2024 ஊடகவியலாளர் சொர்ணலிங்கம் வர்ணனை வாக்குமூலம் வழங்க வருமாறு காங்கேசன்துறை கணிணி பொலிஸ் பிரிவு அழைப்பு விடுத்துள்ளது.

தலைகீழாக பொறிக்கப்பட்ட பதவி முத்திரை தொடர்பான கடிதம் சமூக வலைத்தளங்களில் வெளியாகி பாரிய விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புதிய வெளிச்சம்: டயஸ்போறா–தமிழகம்–தாயகம்: ஒரு முக்கோண முயற்சி

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



கனடாவில் வசிக்கும் ஈழத் தமிழரான நவஜீவனால் நிர்வகிக்கப்படும் "புதிய வெளிச்சம்" என்ற செயற்பாட்டு அமைப்பானது, அண்மையில் யாழ்ப்பாணத்தில் மூன்று நாள் வதிவிடக் கருத்தரங்கு ஒன்றை ஒழுங்குபடுத்தியது.

தமிழகத்தின் முன்னணி நல்லெண்ணெய் தயாரிப்பு நிறுவனம் ஆகிய "இதயம் நல்லெண்ணெய்" நிறுவனத்தின் பங்களிப்பு அக்கருத்தரங்கில் இருந்தது. வளவாளர்களாக தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றினார்கள். உலகளாவிய ரோட்டரிக் கழகத்தின் தலைமைத்துவத்துக்கான விருதுகள் அதாவது ஆங்கிலத்தில், RYLA (rotary youth leadership awards) "ரய்லா" என்று அழைக்கப்படும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்படி கருத்தரங்கு நடத்தப்பட்டது. இலங்கையில் உள்ள இளம் தொழில் முனைவோரை வலுப்படுத்துவதே மேற்படி கருத்தரங்கில் நோக்கம்.

இக்கருத்தரங்கில் இதயம் நல்லெண்ணெய் நிறுவனத்தின் இயக்குனரும் பங்குபற்றினார். விருது வழங்கும் நிகழ்ச்சியில் யாழ்ப்பாணத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ரோட்டரிக் கழக உறுப்பினருமாகிய சரவணபவன் உள்ளிட்ட உள்ளூர் தொழில் முனைவோர் கலந்து கொண்டார்கள். யாழ்ப்பாணத்தின் முன்னணி வெதுபகங்களில் ஒன்று ஆகிய தினேஷ் பேக்கரியின் உரிமையாளர், யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய திருமண மண்டபங்களின் உரிமையாளர் உள்ளிட்ட பல்வேறு பிரமுகர்களும் அதில் பங்கு பற்றினார்கள்.

வதிவிடக் கருத்தரங்கும் விருது வழங்கும் நிகழ்வும் யாழ்ப்பாணம் புங்கங்குளம் சந்தியில் அமைந்துள்ள ஜே.ஹோட்டலில் இடம் பெற்றன. வதிவிடக் கருத்தரங்கில் கலந்து கொண்ட 30க்கும் குறையாத தொழில் முனைவோர் விருது வழங்கும் நிகழ்வில் உரையாற்றினார்கள். இளம் தொழில் முனைவோராகத் தாம் தமது தாய் நிலத்தில் வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கை அவர்களுடைய பேச்சில் காணப்பட்டது. கருத்தரங்கு அவர்களைச் செதுக்கியிருக்கிறது என்பது அவர்களுடைய உரைகளில் தெரிந்தது.

இந்த நிகழ்வுக்கு இரண்டு முக்கியத்துவங்கள் உண்டு. முதலாவது, தொழில் முனைவோரை பலப்படுத்துவது. இரண்டாவது அக்கருத்தரங்கை யார் யார் ஒன்றிணைந்து ஒழுங்குபடுத்தினார்கள் என்பது.

முதலாவதாக, தொழில் முனைவோரை ஏன் பலப்படுத்த வேண்டும் என்று பார்ப்போம். தொழில் முனைவோரைக் கட்டியெழுப்புவது என்பது அதன் இறுதி அர்த்தத்தில் தேசத்தைக் கட்டி எழுப்புவதுதான். தன் சொந்த நிலத்தில் வேர் விட்டு நிமிர்ந்து வரும் தொழில் முனைவோர் தமது தொழிற்துறைகளை பலப்படுத்தும் பொழுது அது தாயகத்தின் பொருளாதாரத்தை பலப்படுத்துகின்றது. தாயகத்தை பொருளாதார ரீதியாக செழிப்பாக்கினால், அது அதன் விளைவாக, தாயகத்தின் அரசியலையும் செழிப்பாக்கும். தொழில் முனைவோரை அதிகமாகக் கொண்ட ஒரு சமூகத்தில் இருந்து புலப்பெயர்ச்சி ஒப்பீட்டளவில் குறைவடையும். நாட்டுக்குள்ளேயே தொழில் உண்டு; வளமான வாழ்வு உண்டு; கை நிறைய உழைக்கலாம்; சமூகத்தில் தனக்குரிய அங்கீகாரத்தோடும் மதிப்போடும் மன நிறைவோடும் வாழலாம்... என்ற நம்பிக்கை விதைக்கப்பட்டால், அது தாய் நிலத்தை பௌதீக ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் கட்டி எழுப்பும்.

இலங்கைத் தீவைப் பொருத்தவரையிலும் இது புலப்பெயர்ச்சியின் காலம். 2009 ஆம் ஆண்டு எந்த நாட்டை யுத்தத்தின் மூலம் வென்றெடுத்ததாக சிங்கள தலைவர்கள் மார்தட்டிக் கொண்டார்களோ, அதே நாட்டை விட்டு மூழ்கும் கப்பலுக்குள் இருந்து தப்பிச்செல்லும் எலிகளை போல சிங்கள மக்களும் தமிழ் மக்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களை விட அதிக தொகையில் சிங்கள மக்கள் வெளியேறியிருப்பதாக புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. இதுதொடர்பாக உத்தியோகபூர்வமான இனரீதியான புள்ளிவிபரங்கள் கிடைக்கவில்லை. ஆனால் இரண்டு இனங்களையும் சேர்ந்த தொழில் முனைவோரும் மூளை உழைப்பாளிகளும் தலைமைத்துவ பண்புமிக்கவர்களும், தொழில்சார் திறன்களைக் கொண்டவர்களும் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் உரையாற்றும் பொழுது கிட்டத்தட்ட 20,000 பேர்வரை அண்மை காலங்களில் விசிட்டிங் விசாவில் கனடாவுக்கு சென்றிருப்பதாகத் தெரிவித்திருந்தார். இது உத்தியோகபூர்வமான தகவல் அல்லவென்று அவர் கூறுகிறார். அதேசமயம் லண்டனுக்கும் ஒரு பெரிய தொகை புலம்பெயர்ந்து விட்டது. இவைதவிர திருமணத்துக்காகச் செல்லும் இளம்பெண்கள் மற்றும் குடும்ப மேல் இணைவின் பொருட்டு செல்லும் குடும்பத் தலைவியர் என்று பார்த்தால் அதுவும் ஒரு தொகை. அவ்வளவும் அடுத்த சந்ததியை உற்பத்தி செய்யப்போகும் கருவளம் கொண்ட பெண்கள்.

அண்மையில் யாழ் போதனா வைத்திய சாலையில் விபத்து பிரிவில் விபத்தில் பாதிக்கப்பட்ட ஒருவரின் குருதியை பரிசோதித்த சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒரு தொழில்நுட்பவியலாளர் சொன்னார், தென்னிலங்கையில் பல ஆஸ்பத்திரிகளில் மருத்துவத்துறைசார் தொழில்நுட்பவியலாளர்களின் வெளியேற்றத்தால் சில ஆஸ்பத்திரிகளில் சில பிரிவுகள் வினைத்திறனோடு இயங்க முடியாத நிலைமை உருவாகி வருவதாக.

ஒரு சிங்களக் கட்டிடப்படக் கலைஞர், அண்மையில் தான் படித்து வெளியேறியவர், சொன்னார் ஒரு மோட்டார் சைக்கிளைக்கூட வாங்க முடியாத நாடு இது. என்னைப் போன்ற பலர் நாட்டை விட்டு வெளியேற துடிக்கிறார்கள் என்று. தென்னிலங்கையில் சில மருத்துவமனைகள் முழுமையாக இயங்க முடியாத அளவுக்கு தொழிற்சார் வல்லுனர்கள் வெளியேறியிருப்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அதாவது தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் பெருவாரியாக நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

2009 ஆம் ஆண்டு யுத்த வெற்றியை கொண்டாடிய மக்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்; தோற்கடிக்கப்பட்ட மக்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆயின் பெற்ற யுத்த வெற்றியின் பொருள் என்ன?

இவ்வாறு நாட்டை விட்டு தொழில் முனைவோரும் தொழிற்சார் திறன்களை பெற்றவர்களும் மூளை உழைப்பாளிகளும் வெளியேறிக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில், தமிழ்ப் பகுதியில் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு ஒழுங்குபடுத்தப்பட்ட மேற்படி கருத்தரங்குக்குப் பல்பரிமாண முக்கியத்துவம் உண்டு.

அக்கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பியவர்கள் தொடர்ச்சியாக நேர்காணல்களின்மூலம் தெரிவு செய்யப்பட்டார்கள். அவர்களிடம் கருத்தரங்கில் பங்குபற்றுவதற்கான கட்டணம் வாங்கப்பட்டிருக்கிறது. அதாவது அதில் கலந்து கொண்டவர்களின் நிதிப் பங்களிப்போடுதான் அக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. இது முதலாவது முக்கியத்துவம்.

இரண்டாவது முக்கியத்துவத்தைப் பார்க்கலாம். அக்கருத்தரங்கை ஒழுங்குபடுத்தியது கனடாவில் உள்ள புதிய வெளிச்சம் அமைப்பும் இந்தியாவில் உள்ள இதயம் நல்லெண்ணெய் நிறுவனமும் ஆகும். வளவாளர்கள் தமிழகத்தை சேர்ந்தவர்கள். இங்கே ஒரு முக்கூட்டு முயற்சியைப் பார்க்கலாம். தாயகம், டயஸ்போறா, தமிழகம் ஆகிய மூன்று முனைகள் இணைந்து முன்னெடுத்த ஒரு முயற்சி இது.

புதிய வெளிச்சம் அமைப்பானது இதற்கு முன்னரும் இதுபோன்ற வதிவிடக் கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தியிருக்கின்றது. உளவியல் ஆற்றுப்படுத்துகை, ஆசிரியைகளுக்கு மற்றும் அதிபர்களுக்கான பயிற்சி பட்டறைகள், தலைமைத்துவ பண்ணையாளர் உள்ளக வதிவிட வசதியுடன் பயிற்சி, இயற்கை விவசாயம், இளையோர்களின் வாழ்க்கை தொடர்பான தரிசனத்தையும் நம்பிக்கைகளையும் கட்டியெழுப்பும் கருத்தரங்குகள் போன்ற பல செயல்திட்டங்களை புதிய வெளிச்சம் அமைப்பு கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக முன்னெடுத்து வருகின்றது.

இந்த செயல் திட்டங்கள் அனைத்தும் தமிழகம் தாயகம் டயஸ்போறா ஆகிய மூன்று பரப்புக்களையும் இணைக்கும் முக்கோண முயற்சிகள்தான். நிதிப்பலமிக்க தமிழ் டயஸ்போறாவும் இந்தியாவின் வேகமாக வளரும் பொருளாதாரங்களில் ஒன்று ஆகிய தமிழகமும் இணைந்து இதை ஒழுங்குபடுத்தியுள்ளன.

தமிழ் டயஸ்போறாவானது புலம்பெயர்ந்த நாடுகளில் தன்னை ஒரு கவர்ச்சி மிக்க் முதலீட்டுச் சக்தி மிக்க துடிப்பான ஒரு டயஸ்போறாவாக வெளிப்படுத்தி வருகிறது. அதேசமயம் தாயகத்தைப் போலவே அங்கேயும் ஒற்றுமை இல்லை. எனினும் 2009க்குப் பின்னரான தமிழ் கூட்டு உளவியலை பலப்படுத்தியதில், தாயகத்தில் வாழும் மக்களை தமது சொந்தச் சாம்பலில் இருந்து பீனிக்ஸ் பறவை போல மீண்டெழ வைத்ததில் தமிழ் புலம்பெயர்ந்த சமூகத்துக்கு பெரிய பங்கு உண்டு.

அதேசமயம், மற்றொரு தமிழ் பரப்பாகிய, தமிழகமானது மகாராஷ்டிரா மாநிலத்துக்கு அடுத்தபடியாக இந்தியாவில் வேகமாக வளரும் பொருளாதாரமாக எழுச்சி பெற்று வருகிறது.

இவ்வாறு மூன்று வேறு புவியியல் பரப்புகளில் காணப்படும் மூன்று தமிழ்ச் சமூகங்களையும் ஒரு முக்கோண வடிவில் இணைத்து, முதலீட்டுத் திட்டங்கள் உட்பட அறிவுப்பரிமாற்றம்வளப் பரிமாற்றம்; போன்றவை தொடர்பான திட்டங்களையும் வகுக்கும்பொழுது அது வினைத்திறன் மிக்கதாக அமைய முடியும்.

தமிழ் டயஸ்போறாவானது இலங்கையில் முதலீடு செய்யும் பொழுது நிச்சயமின்மைகளும் ஆபத்துக்களும் உண்டு என்ற பயம் இப்பொழுதும் உண்டு. ஆனால் அதே முதலீடு தமிழகத்தோடு கூட்டிச் சேர்ந்து இலங்கைக்குள் வரும்பொழுது, அதற்கு ஒப்பீட்டளவில் பாதுகாப்பு அதிகம். எனவே தாயகம்; டயஸ்போறா; தமிழகம் ஆகிய மூன்று சமூகப், பொருளாதார, அரசியல் பரப்புகளும் இணைந்து ஒரு முக்கோண பொருளாதாரத் திட்டவரைவு ஒன்றை ஆராய வேண்டும். அதனை முக்கியமாக தாயகத்தின் நோக்கு நிலையிலிருந்து, தமிழ் மக்கள் தமது தேசத்தைக் கட்டி எழுப்புவது என்ற நோக்கு நிலையிலிருந்து வரைய வேண்டும்.

இக்கட்டுரையில் முன்பு சொல்லப்பட்ட மூன்று நாள் வதிவிட கருத்தரங்கை அவ்வாறான தேசத்தை கட்டி எழுப்பும் ஒரு செய்முறையில் ஒரு பகுதியாகக் கருதலாம். தேசத்தைக் கட்டியெழுப்பும் செய்முறையில் தமிழ் டயஸ்போறா ஒரு சக நிர்மாணி தான். இந்த அடிப்படையில் டயஸ்போறாவிலிருந்து முதலீடுகளை தாயகத்துக்குக் கொண்டு வர வேண்டும். அதுபோலவே அறிவையும் ஆற்றலையும் கொண்டு வர வேண்டும். தாயகமும் டயஸ்போறாவும் தமிழகமும் இணைந்து தமிழ் மக்களின் தேசத்தைக் கட்டியெழுப்பலாம் என்ற நம்பிக்கையைப் பலப்படுத்த வேண்டும்.




# 2024 ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தீர்மானிக்கும் சக்தியா?

***“இம்முறை நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள வாக்குகள் 3 ஆக பிளவடையப்போகும் நிலையில் தமிழ் பொது வேட்பாளருக்கான ஆதரவு, ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவு சஜித் பிரேமதாசாவுக்கான ஆதரவு, அநுரகுமார திசநாயக்காவுக்கான ஆதரவு, ஜனாதிபதித் தேர்தல் பகிஷ்கரிப்புக்கான ஆதரவு, ஏனைய வேட்பாளர்களுக்கான ஆதரவு, வாக்களிப்பில் அக்கறையின்மையென 7 வழிகளில் தமிழ் மக்களின் வாக்குகள் சிதறப்போவதால் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பார்களா என்ற சந்தேகம் வலுவாக எழுந்துள்ளது”***

**- கே. பாலா**

**நா**ட்டில் விரைவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் அரசியல் பலத்தை காட்டுவதற்கான “தமிழ் பொது வேட்பாளர்” என்ற கோஷம் ஒரு புறம் பலம் பெற்று வரும் நிலையில் மறுபுறம் இந்த வேட்பாளர் கோஷத்தினால் தமிழர்களிடம் தற்போதுள்ள அரசியல் பலம் மேலும் பலவீனமாகும் வகையிலான தமிழ்தேசியக் கட்சிகளின் “விடாக்கண்டன் கொடாக்கண்டன்” நிலைப்பாடுகளும் அதிகரித்து வருவதனால் ஜனாதிபதித் தேர்தலுக்கான வடக்கின் வாக்குகள் சிதறப்போகும் தேர்தல் கள நிலைவரம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல்களைப் பொறுத்த வரையில் பிரதான இரு வேட்பாளர்களுக்கிடையில் தான் பலமான போட்டி இடம்பெறுவதுடன் இவ்விருவருக்கும்தான் பெரும்பான்மையான வாக்குகளும் அளிக்கப்படுவதும் வழமை. உதாரணமாக இறுதியாக 2019 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் 15 வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலையில் இவர்களில் கோத்தபாய ராஜபக்சவுக்கும் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் தான் கடும் போட்டி ஏற்பட்டது. இவர்களில் கோத்தபாய ராஜபக்ச 69,24,255 வாக்குகளையும் சஜித் பிரேமதாச 55,64,239 வாக்குகளையும் பெற்ற நிலையில் 3 ஆம் இடத்தைப்பெற்ற அநுரகுமார திசாநாயக்க 4,18,553 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார்.

ஆனால் இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களாக களமிறங்கவுள்ள தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசநாயக்க ஆகியோரிடையில் கடும் போட்டி ஏற்பட்டு சிங்கள வாக்குகள் மூவருக்கும் சிதறடிக்கப்படுவதனால் மூவரில் எவருமே அறுதிப்பெரும்பான்மை வாக்குகளை பெற முடியாத சூழல் இருக்கும் நிலையில்தான் சிங்களவர்களின் வாக்குகளை விடவும் தமிழர்களின் வாக்குகளே அதிகளவில் சிதறப்போகும் நிலைமை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்றது.

இம்முறை நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள வாக்குகள் 3 ஆக பிளவடையப்போகும் நிலையில் தமிழ் பொது வேட்பாளருக்கான ஆதரவு, ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவு சஜித் பிரேமதாசாவுக்கான ஆதரவு, அநுரகுமார திசநாயக்காவுக்கான ஆதரவு, ஜனாதிபதித் தேர்தல் பகிஷ்கரிப்புக்கான ஆதரவு, ஏனைய வேட்பாளர்களுக்கான ஆதரவு, வாக்களிப்பில் அக்கறையின்மையென 7 வழிகளில் தமிழ் மக்களின் வாக்குகள் சிதறப்போவதால் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பார்களா என்ற சந்தேகம் வலுவாக எழுந்துள்ளது.

இறுதி வாக்காளர் கணக்கெடுப்பின்படி வடக்கு மாகாணம் 8,47,103 வாக்காளர்களைக் கொண்டுள்ளது. இதற்கமைய கடந்த 2019 ஜனாதிபதித் தேர்தலில் 6,00,236 வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்துள்ள நிலையில் இதில் கூட 14545 வாக்குகள் செல்லுபடியற்றதானதால் 5,85,691 வாக்குகள் மட்டுமே வடக்கு மாகாணத்தில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன. இதில் சஜித் பிரேமதாசவுக்கு 4,87,461 வாக்குகள்,கோத்தபாய ராஜபக்சவுக்கு 49.950 வாக்குகள்,தமிழ் வேட்பாளராக போட்டியிட்ட சிவாஜிலிங்கத்திற்கு 8.140 வாக்குகள், ஏனைய வேட்பாளர்களுக்கு 52.177 வாக்குகள் என வடக்கு மாகாண வாக்குகள் சிதறிப்போயிருந்தன.

கடந்த 2019 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ்மக்கள் விடுதலைக்கழகம். இலங்கை தமிழரசுக்கட்சி உள்ளிட்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஓரணியாக இருந்ததால் அதன் ஆதரவாளர்களின் வாக்குகள் அந்தக் கட்சி கை காட்டிய வேட்பாளருக்கே வழங்கப்பட்டன. தற்போது இந்த தமிழ் தேசியக்கூட்டமைப்பு பிளவடைந்து அதில் இலங்கை தமிழரசுக்கட்சியின் ஓரணி சிங்கள ஜனாதிபதி வேட்பாளருக்கே வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் மற்றைய அணியும் ஏனைய இரு கட்சிகளும் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலும் இருப்பதால் இவர்களின் ஆதரவாளர்களின் வாக்குகள் இரண்டாக பிளவடையப் போகின்றன. அது மட்டுமன்றி இந்த 3 கட்சிகளும் ஒன்றிணைந்த தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு தேசியத்தின் அடிப்படையில் கடந்த தேர்தலில் ஒற்றுமையாக வாக்களித்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் ஒரு பகுதியினர் தற்போது அந்தக்கூட்டமைப்பு பிளவடைந்திருப்பதனால் ரணில், சஜித், அநுர, தமிழ் பொது வேட்பாளர், ஏனைய வேட்பாளர்களென தாம் விரும்பியவாறு வாக்களிக்க எதிர்பார்க்கின்றனர்.

இதனை விட வடக்கை மட்டும் பிரதிநிதித்துவம் செய்யும் இரு எம்.பி.க்களைக் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் அதேவேளை ஒரு எம்.பி.யைக் கொண்ட நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றது. அதேவேளை வடக்கில் வன்னி மாவட்டத்தில் தெரிவான இரு முஸ்லிம் எம்.பி.க்களில் ஒருவர் ஜனாதிபதி ரணிலையும் இன்னொருவர் சஜித் பிரேமதாசவையும் ஆதரிக்கின்றனர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கஜன் இராமநாதன் இதுவரை யாருக்கு ஆதரவென அறிவிக்கவில்லை. அவருக்கும் வடக்கில் கிட்டத்தட்ட 50,000 வரையிலான வாக்குகள் உள்ளன.




எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் இலங்கை தமிழரசுக்கட்சியின் ஓரணி சிங்கள ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் விடுதலைக்கழகம், தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற கட்சிகள் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் ஈ.பி.டி.பி.யும் முஸ்லிம் எம்.பி.க்களில் ஒருவரும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் இன்னொரு முஸ்லிம் எம்.பி.யின் கட்சி சஜித் பிரேமதாசாவை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் உள்ள நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் எம்.பி. யான அங்கஜன் இராமநாதன் எந்தப்பக்கமும் சாராதுள்ளார். அதேவேளை ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசநாயக்காவுக்கான ஆதரவுதளமும் வடக்கில் சற்று அதிகரித்தே காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் இலங்கை தமிழரசுக்கட்சியை சேர்ந்த எம்.பி.யான இரா.சாணக்கியன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் பொது வேட்பாளருக்கும் எதிரான கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றார். அதே நேரம் தமிழரசுக்கட்சியின் கிழக்கு முக்கியஸ்தர்கள் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். கலையரசன் எம்.பி நடு நிலை வகித்துவரும் நிலையில் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கின்றார். தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கின்றது. இவ்வாறாக கிழக்கு மாகாணத்திலும் தமிழ் மக்களின் வாக்குகள் சிதறத்தான் போகின்றன.



இவ்வாறு வடக்கு, கிழக்குமாகாணங்களில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஒவ்வொரு தமிழ் கட்சிகளும் ஒவ்வொரு நிலைப்பாட்டில் இருப்பதாலும் இதனால் வாக்காளர்களான மக்களும் குழம்பிப் போயுள்ளதாலும் வாக்குகள் சிதறுவதுடன் வாக்களிப்பு வீதமும் குறைவடையவே அதிக வாய்ப்புக்கள் உள்ளன. எனவே இன்னும் காலம் பிந்திவிட வில்லை என்பதனால் தமிழ் தேசியக்கட்சிகள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வந்து தமிழ் மக்களை ஓரணியில் திரட்ட வேண்டும். இல்லையேல் தமிழர்களின் அரசியல் இருந்த இடத்திலிருந்து இன்னமும் கீழ் நோக்கியே செல்லும். அதற்கான வழியை ஏற்படுத்தியவர்கள் என்ற வரலாற்றுப் பழியை தமிழ் தேசியக்கட்சிகளே சுமக்க வேண்டி ஏற்படும்.


## வீணாவின் கவிக்கணை

வாரி வாரி கொடுக்கும்
வள்ளல் ஆனாலும் சரி,
கஞ்சத்தனத்திற்கே பெயர்
போன கருமியானலும் சரி,
அடுத்தவர் மீது பாசம்
காட்டுபவரானாலும் சரி,
அல்லது எரிந்து
விழுபவரானாலும் சரி,
எல்லோருக்கும் மரணம்
என்பது ஒரு முறை தான்,
ஆனால்,
ஒருவர் எப்படி பட்டவர்
என்பதை அவர் சென்ற
பிறகும் , அவர் நற்செயலினாலும்
நற்குணத்தினாலும் அனைவராலும்
பேசப் படுகையில், அவர்
சாவில்லா சிரஞ்சீவியாய்
இவ்வுலகில் என்றுமே
அழிவில்லாமல் வாழ்ந்து
கொண்டேயிருப்பார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மாமனிதர் ரவிராஜ் அவர்கள் இன்று இருந்திருந்தால் தமிழரசுக்கட்சி நீதிமன்றுக்கு சென்றிராது!

### பா.அரியநேத்திரன் - முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்



யாழ்பாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி மாமனிதர் நடராஜா ரவிராஜ் அவர்கள் உயிருடன் இருந்திருந்தால், 25 ஜூன் அன்று அவருக்கு 62,வயதாகும். ஆனால், கடந்த 2006, நவம்பர், 10ம் திகதி அவரது 44வது வயதில், மகிந்தராசபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில், சிங்கள பேரினவாதத்தால் திட்டமிட்டு, அவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சோகம், கொழும்பில் அரங்கேறியது.

தமிழரசு கட்சிக்குள் குத்து வெட்டுக்கள் இருந்திருக்காது

அவர் இன்று இருந்திருந்தால் 17வது இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் மகாநாடு எந்த இடையூறுகள், குத்து வெட்டுகள் இன்றி அவரே தலைவராக நிச்சயமாக பேராதரவுடன் தெரிவாகி இருப்பார். தனது மக்களின் விடிவிற்காக தனது உயிரையே கொடுக்க தயாராக இருந்த ஒரு தலைவர் மத்தியில் இன்று தங்களுடைய தங்களுடைய சுய நலனுக்காக நடிப்பு அரசியல் செய்து வாக்கு வங்கிகளையும் நிரப்பும் நோக்கில் செயற்படும் தமிழ்தேசிய அரசியல் வாதிகள் கட்சியின் தலைவர்கள் மாமனிதர் ரவிராஜ் அவர்களின் அரசியல் பயணத்திலிருந்து இருந்து பெற வேண்டிய பெறுமதியான படிப்பினைகளை உள்வாங்குவதில் தவறிவிட்டார்கள்.

இன்று தமிழரசுக்கட்சியை நீதிமன்றில் நிறுத்திய நிலைமை அவர் இருந்திருப்பின் ஏற்பட்டிருக்காது. தமிழ்த்தேசிய அரசியல் செயற்பாடுகள் உயிர்புடன் ஒற்றுமையாக முன்நோக்கி சென்றிருக்கும் என்பதில் எந்த மாற்றுக்கருத்துகளும் இருந்திராது.

அவர் தந்தை செல்வாவின் அகிம்சைப்போராட்ட அரசியலையும், தலைவர் பிரபாகரனின் ஆயுதப்போராட்ட அரசியலையும் நேசித்தார்.

மாமனிதர் ரவிராஜின் முன்மாதிரி

மாமனிதர் ரவிராஜ் அவர்களிடம் நாம் கண்ட துணிச்சலையோ இதயசுத்தியான நடத்தையையோ நேர்மையையோ எந்த தமிழ்தேசியகட்சி நாடாளுமன்ற உறுப்பினரிடமோ, அதன் தலைவர்களிடமோ நாம் எதிர்பார்க்கமுடியாது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர் எம்மை விட்டு பிரிந்தாலும் அவருடைய நேர்மையான தமிழ்த்தேசிய அரசியல் கொள்கையை அவருடைய அன்பு மனைவி, மற்றும் பிள்ளைகள், முன்கொண்டு செல்வது வடகிழக்கு தமிழ்த்தேசிய அரசியலுக்கு பக்கபலமாக உள்ளது என்பதில் மாற்றுக்கருத்துகள் இல்லை.

யாழ்ப்பாணம் தென்மராட்சி சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட ரவிராஜ் யாழ்ப்பாணம் டிறிபேர்க் கல்லூரி மற்றும் யாழ் பரி யோவான் கல்லூரிகளில் கல்வி கற்றார். அன்பு மனைவியாக சஷிகலா அவர்களை திருமணம் முடித்து இரண்டு பிள்ளைகளின் தந்தையாக வாழ்ந்தார். இவர் 1987 ஆம் ஆண்டு இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பதிவு செய்தார். ரவிராஜின் "ரவிராஜ் அசோசியேட்ஸ்" எனும் சட்ட நிறுவனமானது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகள், அவசரகாலச் சட்டத்தின் கீழான வழக்குகளுக்காக வாதாடியது. கொழும்பில் மனித உரிமைகள் சட்டத்தரணியாகவும் பணியாற்றினார்.

2004ல் 22 தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அதில் மாமனிதர் ரவிராஜ் அவர்களும் எங்களுடன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வேளையில் 2004ல் தேர்தல் இடம்பெறுவதற்கு மூன்று வாரத்துக்கு முன்னமே விடுதலைப்புலிகளுக்குள் பிழவு ஏற்பட்டு அதில் இருந்து கருணா என்பவனும், சிலரும் விலகி கிழக்கில் பிரதேசவாத அரசியலுடன் தமிழ்தேசிய அரசியலுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் தமிழ் ஆயுதக்குழுக்களாக இவர்களை பயன்கடுத்தி ஆட்சியாளர்களின் அனுசரணையுடன் படுகொலைகளும் இடம்பெற்றமையால் 22, பாராளுமன்ற உறுப்பினர்களும் சொந்த மாவட்டங்களுக்கு செல்ல முடியாமல் கொழும்பில் ஜெயவர்தன புர பாராளுமன்ற உறுப்பினர் விடுதி அமைந்த மாதிவெலயில் தங்கியிருந்த காலமாகும்.

மட்டக்களப்பு வாகரை மக்கள், மீதான எறிகணை தாக்குதல்

அந்தவேளையில்தான் 2006, யூலை மாதம் திருகோணமலை மாவிலையாற்றில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் ஆரம்பிக்கப்பட்டு திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த சம்பூர் மூதூர் பகுதி மக்கள் மட்டக்களப்பு வாகரையில் தஞ்சம் அடைந்திருந்தனர். 2006 நவம்பர் 8ம் திகதி வாகரையில் அகதிமுகாம்களில் தங்கி இருந்த அப்பாவி பொது மக்கள் மீது இராணுவம் மேற்கொண்ட எறிகணை தாக்குதலால் 35 பொதுமக்கள் கொல்லப்பட்டும் நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்தும் இருந்தனர். மறுநாள் 2006, நவம்பர் 9ம் திகதி காலை 9 மணிக்கு கொழும்பு நகரில் ஐ.நா செயலகத்திற்கு முன்பாக, இராணுவம் மேற்கொண்ட அத் தாக்குதலை கண்டித்து ஒரு கவன ஈர்ப்புபோராட்டத்தை நடத்தினோம். இந்தப் போராட்டத்தை ஒழுங்கு செய்தவர் மாமனிதர் ரவிராஜதான்.

இந்தப்போராட்டம் இடம்பெற்று நாம் கலைந்து செல்லும்போது மாமனிதர் ரவிராஜ் என்னிடம், மச்சான் நாளை நானும் நீரும் வாகரைக்கு போவோம் எவரிடமும் கூறாமல் திடிரென வாகரைக்கு சென்று அங்கு உயிர் இழந்த மக்களையும் காயப்பட்ட மக்களையும் நேரடியாக பார்த்து வருவோம் நான் நாளை காலை 9 மணிக்கு மாதிவெல விடுதிக்கு வருவேன் ஆயத்தமாக இரு எனது வாகனத்தை மட்டும் கொண்டு செல்வோம் உனது வாகனம்உனது பொலிசார் தேவையில்லை என கூறினார். நானும் உடனே சம்மதித்து மறுநாள் வாகரை செல்வதற்காக 2006, நவம்பர், 10ம் திகதி தயாராக இருந்தேன்.

நவம்பர் 10ம் திகதி காலை 7 மணி தொடக்கம் 8 மணிவரை "தெரண" தொலைக்காட்சிக்கு மாமனிதர் ரவிராஜ் நேர்காணல் அளித்தார். அதுதான் அவர் இறுதி நேர்காணலில் தமிழ்த் தேசிய இனத்தின் பல்வேறு பிரச்சனை பற்றியும் தனது ஆணித்தரமான கருத்துக்களை எடுத்துரைத்திருந்தார். அந்த நேர்காணலை முடித்து விட்டு திரும்பவும் அவருடைய வீட்டில் கொழும்பு நாரகேன்பிட்டிய மனிங்ரவுனில் உள்ள அவரது வீட்டில் இருந்து அவரது சிவப்பு நிற ஜீப் வண்டியில் என்னை ஏற்றுவதற்காக ஸ்ரீ ஜெயவர்தனபுர மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர்களின் விடுதிக்கு வரும்போதே 2006, நவம்பர் 10, வெள்ளிக்கிழமை காலை 8:15 மணியளவில் அவர்மீது மீது கொலைகாற கும்பல்களால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. பின்னர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபொது ரவிராஜ் சிகிச்சை பலனின்றி காலை 9.20 மணிக்கு உயிரிழந்தார்.

பின்னர் மாமனிதர் ரவிராஜ் படுகொலையைக் கண்டித்து கொழும்பில் திங்கட்கிழமை 2006, நவம்பர் 13ல் பாரிய கண்டனப் பேரணியில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். இப்பேரணியில் அனைத்து மூன்று இன மக்களும் வேறுபாடுகள் இன்றி அரசியல், மதத் தலைவர்கள் பொதுமக்கள் என பலதரப்பட்டவர்களைம் கலந்து கொண்டனர்.

தேசியத் தலைவர் வழங்கிய மாமனிதர் கௌரவம்

தேசியதலைர் பிரபாகரன் அவர்களால் தமிழீழத்தின் அதியுயர் தேசிய விருதான மாமனிதர் விருது வழங்கி கௌரவப்படுத்தப்பட்டார். தேசியதலைவருடைய அந்த அறிக்கையில் "நடராஜா ரவிராஜ் அவர்கள் ஒரு அற்புதமான மனிதர், அபூர்வமான குண இயல்புகளைக்கொண்டவர், பந்த பாசங்களுக்கு அடிமைப்பட்டு பொருள் உலகால் ஆட்டிப்படைக்கும் ஒரு பொம்மை மனிதரல்ல அவர் தமிழீழ மக்கள் மீதும், மண்மீதும் ஆழமான பற்றும் பாசமும் கொண்டவர்" என அறிக்கையில் குறிப்பிட்டு மாமனிதர் மதிப்பை வழங்கி இருந்தார்.

உண்மையில் துடிப்புள்ள நாடாளுமன்ற உறுப்பினராக என்னுடன் பயணித்த காலத்தை மறுக்கமுடியாது தனக்கு வாக்களித்த யாழ்மாவட்ட மக்களின் அபிலாசைகளை கருத்தில் கொண்டு இன ஒற்றுமையை மனதில் கொண்டு போராடிய ஒரு தலைவரே மாமனிதர் ரவிராஜ்.

# கனடாவில் மே 2024 இல் அதிகரித்த பணவீக்கம்...

(பின் பக்கத் தொடர்ச்சி)
எனினும் அதிகரித்து வரும் வட்டி விகிதங்கள் மற்றும் அதிகரித்து வரும் மக்கள்தொகை எண்ணிக்கை கனடா முழுவதும் அதிக வீட்டு வாடகை விலைகள் மீதும் தொடர்ந்து அழுத்தம் கொடுப்பதால், கனடியர்கள் இப்போது வாடகைக்கு அதிக கட்டணம் செலுத்துகின்றனர். அடமான வட்டியும் இன்னும் பணவீக்கத்தில் முதலாவதாக பாதிப்பில் உள்ளது.

அடமான வட்டிகள் பல ஆண்டுகளாக 23.3 சதவீதம் அதிகரித்தன, அதே நேரத்தில் வீட்டு வாடகை விலை 8.9 சதவீதம் அதிகரித்துள்ளது. உணவுப் பொருட்களின் விலைகள் மற்றும் கைத் தொலைபேசி சேவைகளுடன் தரைப் பயணம் மற்றும் விமானப் பயணம் ஆகியவற்றின் செலவுகளும் உயர்ந்துள்ளன.
2023 மே மாதத்துடன் ஒப்பிடும்போது, 2024 மே மாதத்தில் உணவுப் பொருட்களின் விலை 1.5 சதவீதம் அதிகரித்துள்ளது. இது ஜூன் 2023க்குப் பிறகு உணவுப் பொருட்களின் மீதான செலவுகளில் முதல் அதிகரிப்பைக் குறிக்கிறது. 2020ஆம் ஆண்டை விட பொதுமக்கள் உணவுப் பொருட்களுக்கு 22.5 சதவீதம் அதிகமாகச் செலுத்துவதாக கனடாவின் புள்ளிவிவரங்கள் திணைக்களம் வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

காய்கறிகள், இறைச்சி, பழங்கள் மற்றும் மது அல்லாத பானங்கள் ஆகியவற்றின் விலைகள் மாதத்திற்கு ஒரு மாத அடிப்படையில் 6.4 சதவீதமாக உயர்ந்துள்ளன. 2023 உடன் ஒப்பிடும்போது பெட்ரோல் விலை 2024 ல் 5.6 சதவீதம் அதிகரித்துள்ளது.
இந்த அதிகரிப்புடன், விற்பனைச் சந்தையில் ஜூலையில் 40 சதவீத விகிதக் வீழ்ச்சியை எதிர்பார்க்கலாம், ஆனால் புள்ளிவிவரங்கள் கனடா திணைக்களம் இன்னும் ஏப்ரல் மாதத்திற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தித் தரவை அடுத்த வாரம் வரை ஜூலை 24 அன்று அடுத்த விகித முடிவு எடுக்கப்படும் வரை வழங்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## வனப்புறு கனடா
## (இன்னிசை வெண்பா)

*கனடா எனுமோர் கனிவுறு தேசம்*
*இனவெறி இல்லா இனிப்புறு நேசம்*
*வனவளம் எங்கும் வளர்ந்து இருந்து*
*கனமாய் வருமதி காண்.*

*பல்லின மக்கள் பரந்து வசிக்கிற*
*தொல்லை அகன்ற சுதந்திர பூமியே!*
*அல்லும் பகலுமே ஆலைகள் ஓடிட*
*செல்வம் கொழிக்கும் சிறப்பு.*

*வந்தோரை ஆதரிக்கும் வண்ணத் தலமது*
*நொந்தோர் பிணிகளை நீக்கிடும் தேசமாம்*
*சொந்தம் அறுந்தோர் சுகம்பெறு நாடிது*
*சந்தம் வருமெனச் சாற்று.*

*கல்வி வசதியும் காணி உரிமையும்*
*பல்வகை மக்களின் பண்புகள் காத்திடும்*
*பல்லோரும் போற்றும் பரப்பு நிலமதை*
*எல்லோரும் கூடியே ஏற்று.*

*அகதியாய் வந்த அனைத்து மனிதர்*
*சுகமாய் இருக்கச் சமத்துவம் ஈந்தே*
*தனத்துடன் வாழ்விடம் தந்திடும் நாட்டை*
*வனப்புடன் வாழவே வாழ்த்து.*

**ஆக்கம் பாவலர் மார்க்கம் சந்திரன் (416) 844-7453**

ஓம்

ஓம்
சரவணபவ

# கனடா கதிர்காமம் தியான பீடம்

## வருடாந்த கதிர்காமம் திருவிழா உற்சவம்



எல்லாம் வல்ல தமிழ்க்கடவுளாம் கதிர்காமம் முருகப்பெருமான் திருவருள் கடாட்சத்தால், கதிர்காமம் வருடாந்த திருவிழா உற்சவம் கனடா கதிர்காமம் தியான பீடத்தில் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

ஜூலை 5ம் திகதி கதிர்காமம் கொடியேற்றம் தொடக்கம் பூஜைகள் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து 16 நாட்கள் நடைபெற்று ஜூலை 21ம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவேறவுள்ளது.

மேற்படி கதிர்காமம் உற்சவம் பூஜைகளில் கலந்து கொண்டு முருகன் திருவருளை பெற சித்தமானவர்கள், அன்னதானம் மற்றும் சிறப்பு பூஜை செய்ய விரும்புவர்கள் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பூசை நேரம் : மாலை 6:00 மணி தொடக்கம் 9:00 மணி வரை

CANADA KATHIRKAMAM YOGA MEDITATION CENTER

437 880 9000, 416 4541893, 416 3579250
canadakathirkamam6@gmail.com
3001 Markham Road, Unit #21A Scarborough

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

ரொறன்ரோ-கனடா



## ஸ்ரீ வரசித்தி விநாயகர் ப்ரம்மோத்ஸவ திருநாட்களில் நடைபெறும் விஷேட அபிஷேகம், ஹோமம், அலங்கார உபசார பூஜை வழிபாடுகள்

## 14.07.2024 ஞாயிறு முதல் 28.07.2024 ஞாயிறு வரை

**07.07.2024 ஞாயிற்றுக்கிழமை – சமயதீட்சை**

காலை 7:45 மணி முதல் 11:00 மணி வரை அடியார்களுக்கு "சமயதீட்சை" வழங்கப்படும்.

**12.07.2024 வெள்ளிக்கிழமை – மாலை**

விக்னேஸ்வரபூஜை, அனுக்ஞை, கணபதி ஹோமம், சங்காபிஷேகம்.

**13.07.2024 சனிக்கிழமை**

வாஸ்துசாந்தி நடைபெறும்.

**14.07.2024 ஞாயிற்றுக்கிழமை** காலை 7:45 மணி முதல் விக்னேஸ்வரபூஜை, கும்பபூஜை, ஹோமம், அபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை. காலை 10:00 மணிக்கு விஷேட பூஜை. காலை 11:00 மணிக்கு வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை கணபதிதாளம், வேத, கீத, ஸ்தோத்திர, திருமுறை உபசாரங்கள் தொடர்ந்து நாதஸ்வர மங்கள வாத்யக் கச்சேரி, விபூதி பிரசாதம், அன்னதானம் வழங்கல் என்பன நடைபெறும்.

**காலை**


| | |
|---|---|
| 7:45 மணிமுதல் | கும்பபூஜை, அடியார்கள் பங்குகொள்ளும் விஷேட ஹோமம் ஸ்நபனாபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை |
| 10:00 மணிக்கு | விசேடபூஜை |
| 11:00 மணிக்கு | வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை நாதஸ்வர மங்கள வாத்யக் கச்சேரி விபூதி பிரசாதம், அன்னதானம் வழங்கல் |

**மாலை**

| | |
|---|---|
| 4:00 மணிமுதல் | கும்பபூஜை, அடியார்கள் பங்குகொள்ளும் விஷேட ஹோமம் ஸ்நபனாபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை |
| 6:00 மணிக்கு | சாயரட்சைப்பூஜை |
| 7:00 மணிக்கு | வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை கலைநிகழ்ச்சி தொடர்ந்து விபூதி பிரசாதம் வழங்கல் |








**14.07.2024 ஞாயிறு – 1ம் நாள்**
ஓங்கார கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் தாளவாத்ய லயவின்யாசம்

**15.07.2024 திங்கள் – 2ம் நாள்**
மயூர கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் வயலின் ஆராதனை

**16.07.2024 செவ்வாய் – 3ம் நாள்**
சூரியப்பிரபை வடிவக் காட்சி
கலைஞர்களின் வாத்ய ஆராதனை

**17.07.2024 புதன் – 4ம் நாள்**
வித்யா கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் வீணை ஆராதனை

**18.07.2024 வியாழன் – 5ம் நாள்**
அனந்தசயன வடிவக் காட்சி
அந்தணர்களின் வேதபாராயணம்

**19.07.2024 வெள்ளி – 6ம் நாள்**
சிவலிங்கபூஜை வடிவக் காட்சி
கைலாச வாகன அலங்காரக் காட்சி

**20.07.2024 சனி – 7ம் நாள்**
நர்த்தன கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் நடன சமர்ப்பணம்

**21.07.2024 ஞாயிறு – 8ம் நாள்**
கப்பல் திருவிழா
கப்பல் வடிவ அலங்காரக் காட்சி

**22.07.2024 திங்கள் – 9ம் நாள்**
சங்கீத கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் பஞ்சரத்ன கீர்த்தனை இசை ஆராதனை

**23.07.2024 செவ்வாய் – 10ம் நாள்**
திருமஞ்சத் திருக்காட்சி
அழகிய மஞ்ச அலங்காரக் காட்சி

**24.07.2024 புதன் – 11ம் நாள்**
நம்பியாண்டார் நம்பி திருமுறை
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகம், திருமுறை பாராயணம்

**25.07.2024 வியாழன் – 12ம் நாள்**
மாம்பழத் திருவிழா
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகமாக வழங்கப்படும்


**26.07.2024 வெள்ளி – 13ம் நாள்**
சப்பற அலங்காரக் காட்சி
மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு


**27.07.2024 சனி – 14ம் நாள்**
தேர் அலங்காரக்காட்சி


**28.07.2024 ஞாயிறு – 15ம் நாள்**
தீர்த்தத் திருநாள்
காலை: விஷேட ஹோமம், அபிஷேகம், பூஜை
மாலை: திருவூஞ்சல்

**29.07.2024 திங்கள்**
பூங்காவனம்
சங்கீத இசை நிகழ்ச்சி

**30.07.2024 செவ்வாய்**
வைரவர் மடை
காலை: பிராயச்சித்த அபிஷேகம். மாலை: வைரவர் மடை






விரத காலங்களில் 15 தினங்களும் அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் (தாகசாந்தி) வழங்க விரும்பும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

மிகவும் சிறப்பாகவும் விமரிசையாகவும் நடைபெறவிருக்கும் அலங்கார உபசார பூஜை வழிபாடுகளில் அந்தணப் பெருமக்கள், ஆலய நிர்வாகத்தினர், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை இணையத்தள ஊடகத்துறையினர், தமிழ் சமயப் பெரியோர்கள், சமூக நலன் விரும்பிகள், தமிழ் பற்றாளர்கள், கல்விமான்கள், சான்றோர்கள், கலைஞர்கள், தொண்டர் ஸ்தாபனத்தினர், வர்த்தகப் பிரமுகர்கள், மன்ற உறுப்பினர்கள், சமூக ஊக்குவிப்பாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், உபயகாரர்கள், தொண்டர்கள், சமய சொற்பொழிவாளர்கள், பஜனைக் குழுவினர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**Aadi Amavasai Viratham**
ஆடி அமாவாசை விரதம்
(பிதிர்தர்ப்பணம்)
03.08.2024 சனிக்கிழமை


**Aadipoora Viratham**
ஆடிப்பூர ருதுசாந்திப் பெருவிழா
06.08.2024 வியாழக்கிழமை

**Varaluxmi Viratham**
வரலட்சுமி விரதம்
(சுமங்கலி பூஜை, திருவிளக்குப் பூஜை)
16.08.2024 வெள்ளிக்கிழமை

## அனைவரும் வருக! இறையருள் பெறுக!

இங்ஙனம் சிவப்பணியில் நிற்கும்
"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**
ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர்

1.416.291.8500 www.vinaayagar.com vinaayagar@gmail.com vinaayagar

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

ரொறன்ரோ-கனடா



## ஸ்ரீ வரசித்தி விநாயகர் கருங்கல் திருக்கோவில்

# சங்குஸ்தாபன மஹோத்ஸவம்

## அடிக்கல்நாட்டு விழா அழைப்பிதழ்

**July 11th & July 12th, 2024**



## 12.07.2024
## வெள்ளிக்கிழமை

**காலை 10:00 மணிமுதல் 11:15 மணிவரையுள்ள**
**சுப நல்வேளையில்**
ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானின் புதிய கருங்கல்
ஆலயத்திற்குரிய சங்குஸ்தாபனம்



கருங்கல் திருக்கோவில் ஸ்தபதியார்
"சிற்பக்கலையரசன்" திரு. சரவணமுத்து ஜெயராஜா
"சிற்பக்கலாரத்தினம்" திரு. சக்திவிநாயகம்

### 11.07.2024 வியாழக்கிழமை

**அதிகாலை 4:10 மணிமுதல்**
விக்னேஸ்வர பூஜை, அனுக்ஞை, புண்யாகவாசனம், மஹாகணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்துசாந்தி, பூமிபூஜை.

**காலை 7:15 மணிமுதல்**
சங்குகளுக்கு விநாயகர் சகஸ்ரநாம அர்ச்சனை-ஹோமம், கணபதி மூல மந்திர, மாலா மந்திர, காயத்திரி மந்திர ஹோமம், ருத்ர த்ருசதி அர்ச்சனை-ஹோமம், லலிதா த்ருசதி அர்ச்சனை-ஹோமம், தேவிகட்கமாலா அர்ச்சனை-ஹோமம்.

**மாலை 4:30 மணிமுதல்**
சங்குகளுக்குரிய விஷேட பூஜைகள்: விஷ்ணு த்ருசதி அர்ச்சனை-ஹோமம், மஹாலக்ஷ்மி த்ருசதி அர்ச்சனை-ஹோமம், சத்ருசம்ஹார த்ருசதி அர்ச்சனை-ஹோமம், நவக்கிரக சூக்த ஹோமம், பைரவர் அஷ்டோத்திர அர்ச்சனை-ஹோமம், அஸ்திர ஹோமம்.

### 12.07.2024 வெள்ளிக்கிழமை

**காலை 7:15 மணிமுதல்**
விநாயகர் வழிபாடு, புண்யாகவாசனம், கருங்கல் ஆலய திருப்பணி உபயகாரர்கள் மற்றும் அடியவர்களுக்குரிய சங்கல்பம், விஷேட ஷண்ணவதி திரவிய ஹோமம், கோ(பசு) பூஜை, அஸ்வ(குதிரை) பூஜை மஹாபூர்ணாகுதி.

காலை 10:00 மணிமுதல் 11:15 மணிவரையுள்ள
சுப நல்வேளையில்
ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானின் புதிய கருங்கல் ஆலயத்திற்குரிய சங்குஸ்தாபனம் அடிக்கல்நாட்டு விழா நடைபெற்று.

**மிகவும் சிறப்பாகவும் விமர்சையாகவும் நடைபெறவிருக்கும் சங்குஸ்தாபன அடிக்கல் நாட்டுவிழாவில் அந்தணப் பெருமக்கள், ஆலய நிர்வாகத்தினர், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, இணையத்தள ஊடகத்துறையினர், தமிழ் சமயப் பெரியோர்கள், சமூக நலன் விரும்பிகள், தமிழ் பற்றாளர்கள், கல்விமான்கள், சான்றோர்கள், கலைஞர்கள், தொண்டர் ஸ்தாபனத்தினர், வர்த்தகப் பிரமுகர்கள், மன்ற உறுப்பினர்கள், சமூக ஊக்குவிப்பாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், உபயகாரர்கள், தொண்டர்கள், சமய சொற்பொழிவாளர்கள், பஜனைக் குழுவினர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**



"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்
ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை.
ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

**3025 Kennedy Rd, Unit 10, Scarborough ON M1V1S3**

1.416.291.8500
www.vinaayagar.com
vinaayagar

# SAME BREW
# A LEGENDARY ROAR

**SINHA beer, your beloved brew, continues to reign supreme, honouring its iconic LION identity, the name by which it is recognised worldwide.**

If you've ever indulged in the inimitable flavour of Sinha Stout, you've likely been captivated by its unique taste. While retaining its unique character, Sinha is now poised to embrace its original identity as Lion, the name that conquered the hearts of beer afficionados around the world. Lion Stout will remain the same signature brew you've come to know and love as Sinha.

Originating from the island of Ceylon, known for its legendary folklore, the legacy of the Lion roared into life in 1881. Unleashing its distinctly bold flavour through time-honoured recipes, the daring taste of Lion made its mark and became a revered name in the island. In 1998, the Lion ventured into uncharted territories, crossing borders to establish its rightful dominion in over 19 countries, triumphing over the palates of beer enthusiasts worldwide.

Today, Lion Brewery stands as a testament to the enduring legacy of time, steeped in tradition, and a relentless commitment to crafting beers that pack a punch. Skillfully fusing age-old recipes with state-of-the-art brewing techniques, Lion will continue its reign of dominance in Canada, bringing you a flavour that transcends generations.




**ONLY** STOUT IN ASIA TO BE LISTED IN 300 BEERS TO TRY BY ROGER PROTZ

**ONLY** BEER IN THE WORLD ENDORSED BY MICHAEL JACKSON THE LEGENDARY BEER WRITER

99/100 ratebeer

AVAILABLE IN 473ML CANS AT

LCBO
LCBO.COM

BEER STORE
THEBEERSTORE.CA

FOR MORE INFORMATION PLEASE CALL:
FINE BEERS AGENCY LIMITED AT 416-443-2020 OR
EMAIL FRED@FINEBEERS.CA

# இலங்கை அரசை கண்டித்து ராமேஸ்வரம் மீனவர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம்:

## 800க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர். லெம்பேட் (24-06-2024)

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக ராமேஸ்வரம் மீனவர்கள் 22 பேரை கைது செய்த இலங்கை அரசை கண்டித்தும், சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய மத்திய மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் ராமேஸ்வரம் மீனவர்கள் 24-06-2024 அன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் ஈடுபட்டனர்.

மீனவர்களின் இந்த வேலை நிறுத்தம் காரணமாக சுமார் 800க்கும் மேற்பட்ட விசைப்படகு மீன் பிடிக்க கடலுக்கு செல்லாமல் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளதுடன் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் வேலை இழந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மீன் பிடி துறைமுகத்தில் இருந்து கடந்த 22-06-2024 அன்று சனிக்கிழமை காலை 507 மீன்பிடி விசைப்படகுகளில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடி அனுமதி பெற்று கடலுக்குள் மீன்பிடிக்க சென்றனர்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மீனவர்கள் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக ஜஸ்டின், ரெயிமென்ட் மற்றும் கெரின் ஆகியோருக்கு சொந்தமான 3 மீன்பிடி விசைப் படகுகளையும் அதில் இருந்த சுரேஷ் பாபு, காளிதாஸ், ரூபின், கண்ணன், நாகராஜ் உள்ளிட்ட 22 மீனவர்களை கைது செய்து ஊர்க்காவல்துறை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.

இதனை அடுத்து நேற்று ராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவ சங்க தலைவர்கள், மீனவர்கள் மற்றும் விசைப்படகின் உரிமையாளர்கள் ராமேஸ்வரம் துறைமுகத்தில் அவசர ஆலோசனை கூட்டம் நடத்தினர்.

அந்த கூட்டத்தில் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக ராமேஸ்வரம் மீனவர்கள் 22 பேரை கைது செய்த இலங்கை கடற்படையை கண்டித்தும், சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய மத்திய மாநில அரசுகள் துரித நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட போவதாக முடிவு செய்தனர்.

அதன் அடிப்படையில் இன்று ராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. மீனவர்கள் இந்த வேலை நிறுத்தம் காரணமாக சுமார் 800-க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன்பிடிக்கச் செல்லாமல் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளதுடன் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சார்பு தொழிலாளர்கள் மறைமுகமாகவும் வேலை இழந்துள்ளனர்.

இந்த வேலை நிறுத்ததால் ஒரு கோடி ரூபாய் அந்நிய செலவாணி பாதிக்கப்பட்டதுடன் ராமேஸ்வரம் மீன் பிடி துறைமுகம் வெறிச்சோடி காணப்பட்டது.

# "மன்னார் மாவட்டத்தில் யுத்தத்தின் பின்னர் மீளக்குடியேறிய பின்னர் தமது விவசாய நிலங்களை மீள பெற்றுத்தருமாறு கோருகின்றனர்". மன்னார்அரச அதிபர் எடுத்துரைப்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (25-06-2024)



இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக மன்னார் மாவட்டமும் பாதிக்கப்பட்டிருந்தது. மீள் குடியேற்றத்தின் பின்னர் நாங்கள் எதிர் நோக்குகின்ற முக்கியமான பிரச்சனையாக பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதில் உள்ளது என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பொறி முறைகளுக்கான இடைக்கால செயலகத்தின் ஏற்பாட்டில் உத்தேச சட்ட வரைவு நிறுவுவதற்கு ஜனாதிபதியின் ஏற்பாட்டில் குறித்த குழு 25-06-2024 செவ்வாய்க்கிழமை மன்னாருக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் பிரதேசச் செயலாளர் உள்ளிட்ட திணைக்கள தலைவர்களை உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பொறி முறைகளுக்கான இடைக்கால செயலகத்தின் உத்தேச சட்ட வரைவு நிறுவுவதற்கான குழுவினர் சந்தித்து கலந்துரையாடி உள்ளனர்.

இதன் போது மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து குறித்த குழுவினர் கலந்துரையாடி உள்ளனர்.

இதன் போதே மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் குறித்த குழுவினரிடம் குறித்த பிரச்சினையை முன் வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக மன்னார் மாவட்டமும் பாதிக்கப்பட்டிருந்தது. மீள்குடியேற்றத்தின் பின்னர் நாங்கள் எதிர் நோக்குகின்ற முக்கியமான பிரச்சனையாக பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதில் உள்ளது.

மன்னார் மாவட்டத்தில் முக்கியமான வாழ்வாதார செயல்பாடாக விவசாயம் காணப்படுகின்றது. விவசாயத்தை விருத்தி செய்ய பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்றோம்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் வன வள திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் கிட்டத்தட்ட 36 வீதம் காணிகளை பிடித்துள்ளனர்.

மேலதிகமாக புதிதாக 30 வீத காடுகளை உருவாக்கி உள்ளனர். இவர்கள் ஜீ.பி.எஸ். மற்றும் கூகுள் படம் ஊடாக கூடுதலான நூறுக்கு மேற்பட்ட விவசாய குளங்களை தமது எல்லைக்குள் அடையாளப்படுத்தி உள்ளமையினால் விவசாய அபிவிருத்தியை புனரமைப்பு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறிய பின்னர் தமது விவசாய நிலங்களை மீள பெற்றுத்தருமாறு கோருகின்றனர்.

அதன் அடிப்படையில் குறிப்பிட்ட விவசாய நிலங்கள் தற்போது வன வள திணைக்களத்திடம் இருந்து மீள பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் மீள்குடியேறி பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்க அடிப்படையில் அவர்களின் நிலங்களை மீள வழங்குவதில் நாங்கள் சவால்களை எதிர் நோக்குகிறோம்.1980 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்ததன் காரணமாக பொது மக்களினால் பயன்படுத்தப்பட்ட இடங்கள் கூட சிறு காடுகளாக காணப்படுகிறது.

இதன் காரணமாக 12 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தை குறித்த திணைக்களத்திடம் உரிய ஆதாரத்துடன் சமர்ப்பித்து பொது மக்களின் 1500 ஹெக் டயர் காணிகளே விடுவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களினால் அடையாளம் காணப்பட்ட ஏனைய நிலங்களை விடுவிக்க முடியாத நிலை காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த குழுவினர் அரச அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் உட்பட பல்வேறு தரப்புக்களையும் சந்தித்து உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உத்தேச சட்ட வரைவு குறித்து கலந்துரையாடி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்க கஞ்சா கடத்த ராமேஸ்வரத்தில் பதுங்கி இருந்த இலங்கையர் உட்பட மூவர் கைது: கஞ்சா மற்றும் இலங்கை ரூபாய் நோட்டுகள் பறிமுதல்



- எஸ்.ஆர்.லெம்பேட் (26-06-2024)

தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு கஞ்சா கடத்துவதற்காக ராமேஸ்வரம் தங்கும் விடுதியில் பதுங்கி இருந்த இலங்கையைச் சேர்ந்த ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கஞ்சா மற்றும் இலங்கை ரூபாய் நோட்டுகளை பறிமுதல் செய்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனிப்பிரிவு போலீசார் தொடர்ந்து அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் இலங்கைக்கு மிக அருகில் இருப்பதால் தனுஷ்கோடி கடல் வழியாக நாட்டுபா படகுகளில் இலங்கைக்கு கஞ்சா, ஐஸ் உள்ளிட்ட போதை பொருட்கள் அதிக அளவு கடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ராமேஸ்வரத்தில் தங்கி தனு'கோடி கடல் வழியாக போதைப் பொருள் கடத்தல் தொழில் செய்வதற்கு இலங்கை புத்தளம் மாவட்டம் கல்பிட்டியைச் சேர்ந்த அந்தோணி பிரவீன் (35) என்பவர் கடந்த மே மாதம் 31ஆம் தேதி விமான மூலம் கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு ஜூன் ஒன்றாம் தேதி காலை சென்னை வந்து இறங்கி பின்னர் அங்கிருந்து ராமேஸ்வரம் வந்து தனியார் தங்கும் விடுதியில் அறை எடுத்து தங்கினார்.

பின்னர் இலங்கையை சேர்ந்த அந்தோணி பிரவீன் பெங்களூர், வேளாங்கண்ணி உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்று அங்குள்ள கஞ்சா வியாபாரிகள் பலரை சந்தித்து கஞ்சா கொள்முதல் செய்வதற்காக விசாரித்ததாக சொல்லப்படுகிறது.

பின்னர் ராமேஸ்வரம் புதுரோடு பகுதியைச் சேர்ந்த உமா செல்வம்(45) என்பவர் மூலம் பேக்கரும்பு பகுதியைச் சேர்ந்த கஞ்சா வியாபாரி தியாகராஜன்(57) என்பவரை சந்தித்து அவரிடம் இருந்து கஞ்சா பொட்டலங்களை வாங்கி தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு படகு மூலம் கஞ்சா கடத்துவதற்கு முயற்சி செய்து வந்துள்ளார்.

மேலும் அந்தோணி பிரவீனுக்கு இலங்கை மன்னாரைச் சேர்ந்த சுதாகர் என்பவர் இரண்டு தவணையாக கஞ்சா கொள்முதல் செய்ய 2 லட்சம் பணம் அனுப்பியுள்ளார்.

அந்த பணத்தில் அந்தோணி பிரவீன் கஞ்சா தரம் குறித்து தெரிந்து கொள்வதற்காக முதல் கட்டமாக 2 கிலோ கஞ்சா பொட்டலத்தை ரூ.35 ஆயிரத்திற்கு தியாகராஜனிடம் வாங்கியுள்ளார்.

இதனிடையே இது குறித்து தகவல் அறிந்த காவல் கண்காணிப்பாளர் தனிப்பிரிவு ராமேஸ்வரம் சர்பு ஆய்வாளர் நல்லுசாமி மற்றும் காவலர் பால முரளி தலைமையிலான போலீசார் அந்தோணி பிரவீனை சுற்றி வளைத்து கைது செய்து அவர் தங்கி இருந்த அறையை சோதனை செய்த போது அவரிடம் இருந்து சுமார் ஒன்றரை கிலோ கஞ்சா மற்றும் இலங்கை ரூபாய் 50,000 உள்ளிட்டவைகள் பறிமுதல் செய்யப்பட்டது.

அதை தொடர்ந்து அந்தோணி பிரவீனை தனுஷ்கோடி காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று நடத்திய விசாரணையில் தியாகராஜனிடம் கஞ்சா பொட்டலங்களை வாங்கி உமா செல்வம் என்பவர் மூலம் நாட்டுப்படகில் இன்னும் ஓரிரு நாட்களில் சுமார் 400 கிலோ கஞ்சா பொட்டலங்கள் அடங்கிய மூட்டையை இலங்கைக்கு கடத்த திட்டமிட்டிருந்தது தெரியவந்தது.

இதையடுத்து தியாகராஜன், உமா செல்வம் இருவரையும் கைது செய்த போலீசார் இலங்கையை சேர்ந்த அந்தோணி பிரவீன் உட்பட மூவர் மீது வழக்கு பதிவு செய்து தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைக்கு பின்னர் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தி மூவரும் சிறையில் அடைக்கப்படுவார்கள் என போலீசார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இருந்து விமானம் மூலம் தமிழகம் வந்து ராமேஸ்வரத்தில் தங்கி கஞ்சா கடத்தலில் ஈடுபட இருந்த இலங்கையைச் சேர்ந்த நபர் உட்பட மூவரை தனிப்பிரிவு போலீசார் அதிரடியாக கைது செய்ததை அடுத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ் தனிப்பிரிவு போலீசாரை வெகுவாக பாராட்டியுள்ளார்.



# ரணிலுக்கு "குண்டு" வைத்த கருணா

**"விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை, தமிழர் போராட்டத்தை தமிழ் மக்களை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவை காட்டிக்கொடுத்து துரோகம் செய்த கருணா அம்மான் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் தனது மைத்துனரான அலிசாஹிர் மௌலானாவையும் அன்வர் ஹாஜியாரையும் காட்டிக்கொடுத்துள்ளார்"**

**------------------------------ - கே. பாலா**

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அதன் தலைவர் பிரபாகரனுக்கு அடுத்த இடத்தில் இருந்தும் பிரபாகரனுக்கு அடுத்தவராக தமிழ் மக்களினால் நேசிக்கப்பட்டும் போர்களை நடத்துவதில் சிறந்ததொரு தளபதியாக செயற்பட்டும் விடுதலைப்புலிகளினாலும் தமிழ் மக்களினாலும் "கருணா அம்மான்" என அன்புடன் அழைக்கப்பட்டும் வந்த நிலையில் பிரபாகரனுக்கு மட்டுமன்றி தமிழ் மக்களுக்கும் செய்த துரோகம், காட்டிக்கொடுப்பினால் இன்றுவரை "துரோகி என அடையாளப்படுத்தப்பட்டு வரும் விநாயகமூர்த்தி முரளிதரன் என்னும் கருணா அம்மான் மீண்டும் ஒரு காட்டிக்கொடுப்பை செய்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் தலைவரையும் தமிழ் மக்களையும் காட்டிக்கொடுத்த கருணா அம்மான் 20 வருடங்கள் கழித்து தற்போது பிரபாகரனையும் தமிழ் மக்களையும் தான் காட்டிக்கொடுக்கக் காரணம் தற்போதைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கதான் என பொது வெளியில் பகிரங்கமாகக்கூறி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் தன்னை பாதுகாப்பாக கொழும்புக்கு அழைத்து வந்தவர்கள் அப்போதைய ஐக்கிய தேசியக்கட்சியின் எம்.பி.யும் தற்போதைய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யுமான அலிசாஹிர் மௌலானாவும், இன்னொருவரான அன்வர் ஹாஜியாரும்தான் எனவும் கூறி காட்டிக்கொடுத்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் காலத்தில் கருணா அம்மான் தியாகத்தினதும் வீரத்தினதும் புகழினதும் உச்சியில் இருந்தவர். இலங்கை இராணுவத்தினருக்கும் இராணுவத்தளபதிகளுக்கும் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவர். 1983 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு விடுதலைப்புலிகளின் தலைவர் வைத்த பெயர்தான் கருணா அம்மான். 20 ஆண்டுகளுக்கு மேலாக விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து தமிழீழ விடுதலைக்காகப் போராடியவர். விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண விசேட கட்டளைத் தளபதியாக செயற்பட்டவர். சந்திரிகா -ரணில் அரசில் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் புலிகளுடனான சமாதான பேச்சு வார்த்தைக் காலத்தில் வெளிநாடுகளுக்கு சென்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டவர்.

அப்போது அரசுடனும் புலனாய்வுத் துறையினருடனும் ஏற்பட்ட இரகசிய உறவின் காரணத்தால் "விடுதலைப் புலிகள் கிழக்கிலங்கைப் போராளிகளுக்கு அவர்களது அமைப்பில் தகுந்த மதிப்பு, வாய்ப்புக்கள் தருவதில்லை, கிழக்குப் போராளிகள் பயன்படுத்தப்பட்டு வீணாக பலியிடப்பட்டனர்" என்று புலிகளின் தலைமை மீது குற்றம்சாட்டி பிரதேசவாதக் கருத்தை முன்வைத்து பிரபாகரனுக்கும் தமிழ் மக்களுக்கும் போராட்டத்தில் விதையான ஆயிரக்கணக்கான மாவீரர்களுக்கும் போராடிக்கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான போராளிகளுக்கும் துரோகம் செய்து காட்டிக்கொடுத்து விட்டு 2003 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறி அரசின் அதி உச்ச பாதுகாப்பில் கொழும்பிலும் பின்னர் வெளிநாடுகளிலும் வாழ்ந்த நிலையில் மீண்டும் இலங்கை திரும்பினார்.

தனது மாகாணமான கிழக்கு மாகாணத்திற்கு திரும்பிய கருணா அம்மான் "தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள்" எனும் புதிய அரசியல் கட்சியை உருவாக்கி அதன் தலைவராக தன்னை அறிவித்துக்கொண்டு இலங்கை அரசின் ஆதரவாளராக செயல்படத் தொடங்கினார். ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டபின்னர் இலங்கை அரசியலில் நுழைந்த கருணா அம்மான் 2008 அக்டோபர் 7 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் மூலம் இலங்கை பாராளுமன்றத்தின் எம்.பி.யாக பதவியேற்றுக்கொண்டார். அதே ஆண்டு தேசிய நல்லிணக்க மறுசீரமைப்பு அமைச்சராகவும் பதவியேற்றுக் கொண்டார். இந்நிலையில் 9 மார்ச் 2009 ஆம்திகதி தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியிலிருந்து விலகி மைத்திரி பாலசிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டார். அவருக்கு அக்கட்சியின் உபதலைவர்களில் ஒருவராக பதவி வழங்கப்பட்டது.

ஆனால் காட்டிக்கொடுப்புக்கும் துரோகத்துக்கும் பெயர்பெற்றவரான கருணா அம்மான் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேனாவையும் அவரது கட்சியையும் காட்டிக்கொடுத்துவிட்டு மஹிந்த ராஜபக்ஸ தரப்புக்கு தாவினார். மீண்டும் 2010 ஆம் ஆண்டு தேசியப்பட்டியல் ஊடாக எம்.பி.யான அவருக்கு மீள்குடியேற்ற பிரதியமைச்சர் பதவி வழங்கப்பட்டது. அப்போதும் அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது விடுதலைப்புலிகளுக்கு இந்திய இராணுவ காலத்தில் உதவிய அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவையும் காட்டிக் கொடுத்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போது ஐ.தே.க எம்.பி.யான சுஜீவ சேனசிங்க முன்வைத்த கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போது,

"சுஜீவ சேனசிங்க எம்.பி. எப்பொழுது பார்த்தாலும் என்னுடைய பெயரைக் பாராளுமன்றத்தில் குறிப்பிடும் போது "கருணா அம்மான் அரசாங்கத்துடன் இணைந்துள்ளார்", "கருணா அம்மான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் இணைந்துள்ளார்" என்றெல்லாம் குறிப்பிடுகிறார். ஆம் அது மிகவும் சரியானது. இந்நேரத்தில் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன், அது என்னவென்றால் தற்போது இங்கு எமக்கு முன்னால் இருக்கின்ற ஜே.வி.பி கட்சியினர் மற்றும் தமிழ்தேசிய கூட்டமைப்பினர் பாராளுமன்றத்தில் இருக்கும் போது ஏன் நான் இருக்கக்கூடாது.

நான் வரலாற்றினை தற்போது சிறிதளவில் கூற விரும்புகிறேன். சிரேஷ்ட எம்.பி.க்களான ஜோன் அமரதுங்க லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோர் இங்கு அமர்ந்துள்ளனர். அவர்களுக்கு வரலாற்றில் இலங்கையில் என்ன நடந்தது என்பது பற்றி தெளிவாக தெரியும். எனினும் வரலாற்றினை நானும் கொஞ்சம் தட்டிப்பார்க்க விரும்புகிறேன். உதாரணமாக 1989 ஆம் ஆண்டில் இந்திய இராணுவத்தினர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட பின்னர் 350 விடுதலைப்புலிகள் இயக்கத்தினரே எஞ்சி இருந்தனர். ஏனையோர் அனைவரும் இறந்தும் இயக்கத்தினை விட்டும் சென்றுவிட்டனர்.

அப்போது எமது நாட்டின் ஜனாதிபதி பிரேமதாஸ ஆட்சியிலிருந்தார். நாட்டை ஒழுங்கமைப்போடும் சிறப்போடும் கொண்டு செல்லும் பணி அவரது கையில் காணப்பட்டது. அப்போது ஜனாதிபதி பிரேமதாஸ தான் விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கு மிகவும் பலமாக காணப்பட்டார். அந்நேரத்தில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட ஆயுதங்களை இவர் வழங்கியிருந்தார். ஆயுதங்களை மட்டுமன்றி கோடிக்கணக்கான பண பலத்தினையும் இவரே வழங்கியிருந்தார். இவரது உதவியினால் மட்டுமே 350 ஆகக்காணப்பட்ட விடுதலைப்புலிகளின் தொகை 3 மாதத்தில் மட்டும் 6000 ஆக உயர்ந்தது. இது தான் வரலாற்றில் இடம்பெற்றது. உங்களுக்கு வரலாறு பற்றி தெரிய வாய்ப்பில்லை. ஆகவே தான் நான் கூறுகிறேன். புலிகள் பற்றி கதைக்கும் போது எனது பெயரை நீங்கள் சேர்க்கத் தேவையில்லை. அவ்வாறு நீங்கள் எனது பெயரை சேர்ப்பீர்களேயானால் நான் இவ்வாறாக ஒவ்வொரு ரகசியத்தினையும் வெளிக்கொண்டு வருவேன்" என ஜனாதிபதி பிரேமதாசவை காட்டிகொடுத்திருந்தார்.

பின்னர் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தையடுத்து 2020 ஆம் ஆண்டு பிரதமராகவிருந்த மஹிந்த ராஜபக்ஸவின் மட்டு - அம்பாறை ஒருங்கிணைப்பாளராக கருணா அம்மான் நியமிக்கப்பட்டார். இதற்கிடையில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்து அதன் தலைவராக கருணா அம்மான் தன்னை அறிவித்துக்கொண்டார். எனினும் கருணா அம்மானுக்கு தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்கவில்லை. இதனால் அவர் அரசியலில் இருந்தும் ஒதுங்க வேண்டி ஏற்பட்டது. அண்மைக்காலமாக அவரின் செயற்பாடுகள் காணாமல் போயிருந்த நிலையில்தான் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கின்றேன் என்ற கோஷத்துடன் மீண்டும் வெளிப்பட்ட கருணா அம்மான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் அலிசாஹிர் மௌலானா மற்றும், அன்வர் ஹாஜியார் ஆகியோரையும் காட்டிக்கொடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித் பிரேமதாச, அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்து பிரசாரங்களில் ஈடுபட்டபோதும் கருணாஅம்மான் தலைகாட்டவில்லை. கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்த நிலையிலேயே வெளியே வந்த கருணா அம்மான் கூட்டமொன்றில் பேசுகையில்,

"விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து என்னை வெளியில் அழைத்து வந்தது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தான். நான் புலிகள் அமைப்பிலிருந்து பிரிய நினைத்தபோது ரணில் விக்கிரமசிங்கதான் என்னை கொழும்புக்கு வரவழைத்தார். 2003ஆம் ஆண்டு நாங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து வந்த பொழுது மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து என்னை பாதுகாப்பாக கொழும்புக்கு அழைத்துச் சென்றவர்கள் அலிசாஹிர் மௌலானாவும், அன்வர் ஹாஜியாரும்தான். அன்வர் ஹாஜியாரின் வாகனத்தில் தான் நான் வந்தேன். அந்த இருவராலும் தான் நான் அன்று காப்பாற்றப்பட்டேன் இந்த உண்மை இப்போது வரை யாருக்கும் தெரியாது. பலரும் மஹிந்த ராஜபக்சதான் பிரித்தார் கோத்தபாய ராஜபக்ஸ்தான் அழைத்தார் என்று கூறுகின்றனர். அது தவறு என்னை புலிகள் அமைப்பிலிருந்து வெளியே வரவழைத்தவர் ரணில் விக்கிரமசிங்க தான் "என்று கூறியே ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஒரு துரோகத்தனத்தையும் காட்டிக்கொடுப்பையும் செய்துள்ளார்.

தற்போது விடுதலைப்புலிகளை பிளவு படுத்தி தன்னை பிரித்தது ரணில் விக்கிரமசிங்க தான் என்பதை கருணா அம்மானே பகிரங்கமாக கூறியுள்ள நிலையில், 2020 பாராளுமன்றத்தேர்தல் காலகட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்புமாவட்ட வேட்பாளராக போட்டியிட்ட தமிழ் முற்போக்கு கூட்டணித்தலைவரான மனோ கணேசன் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து கருணா பிரிந்த அந்த தருணங்கள் பற்றிய பதிவொன்றை தனது முகநூலில் "புலிகளும் ரணிலும் மகிந்தவும் நானும் கருணாவும் மௌலானாவும்" என்ற தலைப்பில் பதிவு செய்திருந்தார் அவர் தனது பதிவில்,

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபா-கரனை சந்தித்து விட்டு நான் கொழும்பு வந்த அடுத்தநாள் பிரதமர் ரணிலை அவரது பாராளுமன்ற அலுவலகத்தில் சந்தித்தேன். நான் விடுதலைப் புலிகள் தலைவரை சந்திப்பதற்கு கிளிநொச்சி சென்ற பொழுது பிரதமர் ரணில் கொழும்பில் இருக்கவில்லை. ஆகவே அப்போது அரசாங்கத்தில் "செகண்ட்-இன்- கொமாண்ட்" ஆக இருந்த அமைச்சர் கரு ஜெயசூர்யவிடம் எனது பயணத்தை பற்றி கூறி சென்றிருந்தேன்.

**தொடர்ச்சி 19 பக்கம்)**

கனடிய செய்திகள் Canadian News

# தற்காலிக விசாவில் தாங்கியிருப்போக்கு கனடா அரசாங்கத்தின் சந்தோசமான செய்தி

தற்காலிக சுற்றுலா விசாவில் கனடாவில் தங்கியிருப்பவர்களில் அகதி அந்தஸ்த்துக் கோரிக்கையை முன்வைத்துள்ளவர்களின் விசாரணைக் காலத்தினை குறைக்குமாறு கனேடிய பிரதமர் அறிவித்துள்ளார். இதுவரை காலமும் அகதி அந்தஸ்து கோருபவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலணைக்கு எடுத்துக் கொள்ள 18 முதல் 24 மாதங்கள் வரை சென்றதாகவும் இனி வரும் காலத்தில் அவற்றை விரைவிகா பரிசீலித்து முடிவுகளை அவிக்குமாறு அவர் மாகாண ஆளுநர்களுடான சந்திப்பின்போது குறிப்பிட்டுள்ளார்.

கனடாவிற்கு தற்காலிக சுற்றுலா விசாவில் வருகைதருவேரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இலங்கையில் மட்டுமன்றி பல்வேறு நாடுகளிலிருந்தும் தற்போது அதிகளாவானவர்கள் வருகை தருகின்றனர்.

கனடாவில் முதுமானி பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதன் மூலம் வேலை அனுமதி பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒட்டாவா, கனடா - அமெரிக்க எல்லையில் பொருட்கள் மற்றும் மக்களின் பாதுகாப்பான பரிமாற்றம், வட அமெரிக்காவின் பொருளாதாரம் மற்றும் கனடியர்கள் மற்றும் அமெரிக்கர்கள் அனுபவிக்கும் நெருக்கடியை குறைப்பது முக்கியமானது. அதனால்தான், எங்கள் குடியேற்ற அமைப்பின் ஒருமைப்பாட்டை சமரசம் செய்யாமல், எளிதாகவும் வேகமாகவும் எல்லையைக் கடப்பதற்கான வழிகளைத் தொடர்ந்து ஆராய்கின்றோம்.

வெளிநாட்டினர் இனிமேல் பட்டப்படிப்பு பணி அனுமதிக்கு (PGWP) எல்லையில் விண்ணப்பிக்க முடியாது என மாண்புமிகு மார்க் மில்லர், குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர், இன்று அறிவித்தார். இது உடனடியாக அமலுக்கு வருகிறது. இந்த நடவடிக்கை "கொடிக்கொடி" என்று அழைக்கப்படுவதைக் குறைக்க உதவும். கனடாவில் தற்காலிகமாக வசிப்பவர்கள், வேலை அல்லது படிப்பு அனுமதிக்காக ஆன்லைனில் விண்ணப்பிப்பதில் உள்ள சாதாரண காத்திருப்பு நேரத்தைத் தவிர்த்துவிட்டு, அதே நாளில் குடியேற்ற சேவைகளைப் பெறுவதற்கு உடனடியாக மீண்டும் நுழையும்போது, கொடியிடுதல் ஏற்படுகிறது.

கொடியிடுதல் எல்லையில் குறிப்பிடத்தக்க ஆதாரங்களைப் பயன்படுத்துகிறது, அதிகாரிகளை அமுலாக்க நடவடிக்கைகளில் இருந்து விலக்குகிறது, பயணிகளுக்கு தாமதத்தை ஏற்படுத்துகிறது பொருட்களின் இயக்கத்தை மெதுவாக்குகிறது. மார்ச் 1, 2023 முதல் பெப்ரவரி 29, 2024 வரை, PGWP விண்ணப்பதாரர்கள், கொடிக்கம்பத்தை கட்ட முயன்ற வெளிநாட்டவர்களில் ஐந்தில் ஒரு பகுதியினராவர்.

விண்ணப்பதாரர்கள் கொடிக் கம்பத்தை விட கனடாவில் விண்ணப்பிக்க கனடா அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. நாங்கள் செயலாக்க நேரங்களைத் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறோம், மேலும் உலகளாவிய பயன்பாட்டுச் செயலாக்கத்தை விரைவுபடுத்த உதவும் வகையில் ஒருங்கிணைந்த, நவீனமயமாக்கப்பட்ட மற்றும் மையப்படுத்தப்பட்ட பணிச் சூழலை நோக்கி நகர்கிறோம்.

இன்று அறிவிக்கப்பட்ட மாற்றம் விண்ணப்பதாரர்களிடையே நேர்மையை அதிகரிக்கிறது மற்றும் கனடா அரசாங்கம் கொடிமரத்தை குறைக்க எடுக்கும் மற்றொரு படியாகும். அமெரிக்காவுடனான நமது பகிரப்பட்ட எல்லையானது சுமூகமாகவும் திறமையாகவும் இயங்கி, இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில், கொடிக்கம்பத்தைக் குறைப்பதற்கான வழிகளைத் தொடர்ந்து தேடுவோம்.

# ஒன்ராறியோ அரசு வாகன உரிமத் தகடுகளை தானாகவே புதுப்பிக்கும் முறையை அறிமுகப்படுத்துகிறது

## ஒன்ராறியோ அமைச்சர் விஜய் தணிகாசலம்



"ஒன்ராறியோ முழுவதிலும் உள்ள வாகன ஓட்டுநர்களுக்கு குறைந்த செலவுடனான மேம்படுத்தப்பட்ட வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு எமது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது" என ஒன்ராறியோ அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார். 2022 ஆம் ஆண்டில், பயணிகள் வாகனங்களுக்கான உரிமத் தகடுகளுக்கான "ஸ்டிக்கர்" கட்டணத்தை நாம் நீக்கி உரிமையாளர்கள் வாகனமொன்றுக்கு ஆண்டுக்கு 120 டொலர்களை சேமிக்க உதவியிருந்தோம்.

தானாகவே வாகன உரிமத் தகடுகளைப் புதுப்பிக்கும் முறையை இப்போது அறிமுகப்படுத்தியிருப்பதன் மூலம், வட அமெரிக்காவிலேயே நாம் முன்னணி வகிப்பதுடன், ஆண்டொன்றுக்கு வாகன உரிமையாளர்களின் 900 மணித்தியால நேர விரயமும் தவிர்க்கப்படும். ஜூலை 1 முதல், முறையான வாகனக் காப்பீடு உள்ளதுடன், அபராதத் தொகை அல்லது நெடுஞ்சாலைக் கட்டணங்கள் நிலுவையில் இல்லாத பட்சத்தில், வாகன உரிமத்தகடு காலாவதியாவதற்கு 90 நாட்களுக்கு முன்னதாக அவை தாமாகவே புதுப்பிக்கப்படும். இப்புதுப்பித்தல் முறையில் சிக்கல்களை எதிர்நோக்குவோர், "சேவிஸ் ஒன்ராறியோ"வின் சேவையை அணுகலாம்.

*(18 பக்கம் தொடர்ச்சி)*

# ரணிலுக்கு "குண்டு" வைத்த கருணா

ஜனாதிபதி சந்திரிகா ஒரு தகவலை கொண்டு சென்று புலிகளின் தலைவரிடம் சேர்க்க சொன்னார் என்று கருவிடம் முன்னமே கூறி இருதேன். கரு மூலமாக எனது கிளிநொச்சி பயணத்தை அறிந்த ரணில் புலிகளின் தலைவர் பிரபாகரனுடனான எனது சந்திப்பு பற்றி அறிய விரும்பினார். அதே சமயத்தில் கிளிநொச்சி சென்று புலிகளின் தலைவரை என்னைப் போலவே சந்தித்த அமைச்சர்கள் ஆறுமுகம் தொண்டமான் பெரியசாமி சந்திரசேகரன் ஆகியோரிடமும் ரணில் கதை விட்டு தகவல்கள் பிடுங்கி இருக்கலாம்.

எனது சந்திப்பு பற்றி என்னுடன் ரணிலுக்கு பேசி அறிய வேண்டிய தேவை இருந்ததை போல எனக்கும் ரணிலுடன் இது பற்றி பேச வேண்டிய தேவை இருந்தது. புலிகளின் தலைவர் "ரணிலுக்கு சொல்லுங்கள்!" என்று எனக்கு சொன்ன செய்தியை நான் பிரதமர் ரணிலிடம் கூற வேண்டும் அல்லவா?

விடுதலைப் புலிகள் தலைவரால் சொல்லப்பட்ட, கருணா அம்மான் தொடர்பான விடயத்தை அவர் சொன்ன மாதிரியே நான் ரணிலிடம் சொன்னேன். "அலிசாஹிர் மௌலானா மூலமாக கருணா அம்மானை கொழும்புக்கு கூட்டி வந்தீர்கள். இன்று அவரை கொழும்பிலே இரகசியமாக ஒளித்து வைத்திருக்கிறீர்கள்" என்று பிரபா கூறியதை அப்படியே ரணிலிடம் கூறினேன்.

நான் இதை சொன்ன பொழுது ரணிலின் அறையில் நானும் ரணிலும் மட்டும்தான் இருந்தோம். மேசையின் அந்த பக்கம் ரணில். இந்த பக்கம் நான். ரணில் என் முகத்தை சற்று நேரம் உற்றுப் பார்த்துக்கொண்டு இருந்தார். பிறகு பிரபாவின் குற்றச்சாட்டை முற்றாக மறுத்தார். கருணா அம்மான் தானாகவே பிரபாவுடன் முரண்பட்டு சண்டையிட்டுக்கொண்டதாகவும்தான் தனக்கு புலனாய்வு அறிக்கை கிடைத்ததாக ரணில் என்னிடம் சொன்னார்.

இப்பொழுது எனது சந்தர்ப்பம். நான் சற்று நேரம் ரணில் முகத்தை உற்று பார்த்துக்கொண்டு இருந்தேன். இல்லை, இல்லை என்று மறுத்து நாட்டின் பிரதமருடன் விவாதம் செய்ய வேண்டிய தேவை எனக்கு இருக்கவில்லை. "இதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. மிஸ்டர் பிரபாகரன் அப்படித்தான் உங்களுக்கு சொல்ல சொன்னார்." என்று கூறிவிட்டு அந்த அறையில் இருந்து வெளியேறத் தொடங்கினேன்.

அமைதியாக அமர்ந்திருந்த பிரதமர் ரணில் கதவுப் பிடியில் கைவைத்து கதவை திறக்க முற்பட்ட என்னை அழைத்து, அவரது ஆசனத்தில் அமர்ந்திருந்தபடியே "உண்மையிலேயே பிரபாகரன் அவ்வாறு கூறினாரா?" என்று கேட்டார். நான் கதவுக்கு அருகில் நின்றபடியே "ஆம்!" என்று வார்த்தையாலும் தலை அசைத்தும் கூறிவிட்டு பிரதமர் அறையில் இருந்து வெளியேறினேன்.

அடுத்து வந்த நாட்களில் சில சம்பவங்கள் நடந்தன. ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் எம்.பி.யாக இருந்த அலிசாஹிர் மௌலானா தனது எம்.பி. பதவியை இராஜிநாமா செய்தார். அதன் பின்னர் அவர் நாட்டிலிருந்து வெளியேறினார்.இந்த முடிவுகளுக்கு பின்னால் பிரதமர் ரணில் இருந்ததை நான் ஊகித்துக்கொண்டேன். அப்போது அலிசாஹிர் ஐக்கிய தேசிய கட்சியின் நேரடி உறுப்பினர். அவரது தலைவர் ரணில் விக்ரமசிங்கதான். இப்போது அலிசாஹிர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கிய உறுப்பினர். இப்பொழுது அவரது தலைவர் நண்பர் ரவுப் ஹக்கீம்.

விடுதலை புலிகள் அரசியல் சிறுவர்கள் கிடையாது. அவர்களை யாரும் திட்டமிட்டு பிரிக்க முடியாது. அவர்களுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளைத்தான் அடுத்தவர்கள் பயன்படுத்த முடியும். ஆகவே புலிகளின் தலைவர் தனது கிழக்கு மாகாண தளபதியை தனது அமைப்பில் இருந்து வெளியேற்றினார். இதையே கருணா அம்மானிடம் கேட்டால் என்னை யாரும் வெளியேற்றவில்லை நானே தான் வெளியேறினேன் என்று கூறுவார். அது அவரவர் நிலைபாடுகள்.

இலங்கை பிரதமர் என்ற முறையிலே ரணில் விக்கிரமசிங்க கருணா அம்மான் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிவதை விரும்பியிருப்பார். பிரிந்த கருணாவை தனது எம்.பி. மௌலானா ஊடாக கொழும்பிற்கு கொண்டு வந்திருப்பார்.இது பின்நாட்களில் கருணா அம்மானை பயன்படுத்தி புலிகளை தோற்கடிக்க ராஜபக்ச அரசாங்கத்திற்கு வழி சமைத்தது.

இதிலே தூரதிஷ்டசாலிகள் இரண்டு பேர். ஒருவர் பிரதமர் ரணில். அடுத்தவர் புலிகளின் தலைவர் பிரபா. தான் புலிகளின் பிரதான தளபதியை பிரித்து புலிகளை பலவீனப்படுத்தி அவர்கள் தோல்வியடைவதற்கு பெரும் காரணகர்த்தா என்று தன்னை சிங்கள மக்கள் மத்தியிலே சந்தைப்படுத்திக்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முடியவில்லை. இது ரணிலின் தூரதிஷடம். அதே போல ரணிலை தோற்கடித்து அதன் மூலம் கொழும்பிலே ஒரு சிங்கள தேசியவாத அரசாங்கம் உருவாகினால்தான் தமிழ் ஈழத்திற்கான தமது பயணம் இலகுவாகும் என புலிகளின் தலைவர் பிரபாகரன் தவறாக கணக்கு போட்டு விட்டார். இது அவரது தூரதிஷ்டம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை, தமிழர் போராட்டத்தை தமிழ் மக்களை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவை காட்டிக்கொடுத்து துரோகம் செய்த கருணா அம்மான் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் தனது மைத்துனரான அலிசாஹிர் மௌலானாவையும் (இருவரினதும் மனைவிகள் தமிழ் சகோதரிகள்), அன்வர் ஹாஜியாரையும் காட்டிக்கொடுத்து துரோகம் செய்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்களின் வாக்குகளை எப்படியாவது பெற்று விட வேண்டுமென பெரும் பிரயத்தனம் செய்துவரும் நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை புகழ்வதாக நினைத்துக்கொண்டு கருணா அம்மான் வெளிப்படுத்தி, உறுதிப்படுத்தியுள்ள "புலிகளிடமிருந்து ரணில் விக்கிரமசிங்க தான் என்னை பிரித்தார்" என்ற விடயம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான தமிழர் வாக்கு வங்கிக்கு வைத்த வெடிகுண்டாகவே இருக்கப் போகின்றது.

# மீண்டுமொரு "அரகலய போராட்டக்களம்" தோன்றக் கூடாது என்பதற்காக கொண்டுவரப்பட்டதே அரசாங்கத்தை பாதுகாக்கவல்ல "உத்தேச இணையவழி பாதுகாப்பு சட்டம்"

கிஷலி பின்ரோ ஜயவர்த்தன - தமிழாக்கம் சர்மிளா



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சட்டமூலத்தால் சீற்றமடைந்திருந்த தனது எதிர்ப்பாளர்களுக்கு (நட்பாகவோ அல்லது வேறு விதமாகவோ) பதிலடி கொடுத்தார். அவர் ஒரு ஊடக "பாதுகாவலர்" என்றும், அந்தவகையில், இலங்கையில் குற்றவியல் அவதூறு சட்டங்களை நீக்கினார்.

ஜனாதிபதியின் உறுதிமொழிகள் மற்றும் பிரிட்டனின் முன்னுதாரணங்கள் மோசமாக வடிவமைக்கப்பட்ட சட்டங்கள் பற்றிய கடுமையான பொது விமர்சனங்களால் வெளிப்படையாகத் தாக்கப்பட்ட ஜனாதிபதி, திசைதிருப்பும் ஒரு முயற்சியுடன் மறுத்தார். ஹோமாகம பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருந்தவர்கள் மத்தியில் உறுதியளித்த அவர், அரசாங்கத்தின் நோக்கம் "ஊடகங்களால் பாதிக்கப்படுபவர்களுக்கு (அப்பாவிகளின்) உதவும்" சட்டங்களைக் கொண்டுவருவது மட்டுமே என்றார்.

அந்த முடிவில், ஐக்கிய இராச்சியத்தில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் நடைமுறைகளைப் பார்க்குமாறு அவரது அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. சட்டமாஅதிபருக்கு பிரிட்டனின் விதிமுறைகளில் சட்டமூலத்தை முன்வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. ஏனெனில் அங்கு முடிவெடுப்பதில் முன்னுதாரணங்களைப் பெறலாம். குற்றவியல் அவதூறு சட்டத்தை ரத்து செய்த பிறகு, கருத்து சுதந்திரத்திற்கான உரிமையை நிலைநிறுத்துவதாக ஜனாதிபதி திடமாக உறுதியளிக்கிறார். ஜனாதிபதி செயலகம், 2023 ஜூன் 15.

நிச்சயமாக, ஜனாதிபதியின் ஊடகக் குழு அந்த வாக்கியத்தை பொது வெளியீடாக வடிவமைத்ததில் உள்ள கசப்பான மொழி விரும்பத்தக்கதாகவே இருந்தது.

இருந்தபோதிலும், ஒலிபரப்பு சட்டமூலம், பொது ஆலோசனையிலிருந்து வெளிப்படையாக வாபஸ் பெறப்பட்டது. எவ்வாறாயினும், ஹோமாகமவில் ஜனாதிபதி அந்த இலகுவான உறுதிமொழிகளுக்கு பொய்யை வழங்குவது அதன் பின்னரான அவரது அமைச்சரவையின் நடவடிக்கைகள் ஆகும். உதாரணமாக அருவருப்பான இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தை எடுத்துக் கொண்டால், அது ஒலி பரப்பு சட்டமூலத்தை மிக மோசமான வடிவத்தில் பின்பற்றுவதாகும்.

சட்டமியற்றும் வரைவு வேலை வெளிப்படையாக, இந்த சட்டமூலம் அதன் உள்ளடக்கங்கள் பகிரங்கப்படுத்தப்பட்ட சில வாரங்களுக்குப் பிறகு, அதிர்ச்சியான வடிவத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கான உச்சகட்டத்தில் உள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கைகளில், இந்த ஆவணம் "பிரிட்டனின் முன்னுதாரணங்கள்" அல்லது வேறு எந்த முன்னுதாரணத்தின் மீதும் வரைவு செய்யப்பட்டதாக எந்தவித பாசாங்குகளும் இல்லை. முற்றுகையின் கீழ் ஒரு அரசியல் ஸ்தாபனத்தால் சட்டமியற்றும் வேலையாக இது திகழ்வதுடன் என்னகட்டம் ஏற்பட்டாலும் அவற்றுக்கு எதிராக அனைத்து பாதுகாப்புகளையும் திரட்ட தயாராகிறது.

அருவருப்பான முறையில் கட்டமைக்கப்பட்ட உட்பிரிவுகளின் ஒரு அடுக்கை நீங்கள் உரிக்கும்போது, அவை "சட்டத்தை உருவாக்கும்" மற்றும் மோசமான சாகச முயற்சிகளால் பின்பற்றப்படுகின்றன.

ஐக்கிய இராச்சியத்தின் இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தை உற்று நோக்குமாறு ஜனாதிபதி தனது அமைச்சர்களுக்கு அறிவுறுத்தலாம். இது அதன் கொடூரமான இலங்கைப் பெயருக்கு அப்பாற்பட்ட உலகம்.

அதிகாரத்தில் இருப்பவர்களால் "இணையவழி பாதுகாப்புச் சட்டத்தின்" உண்மையான சுயவிவரம் எப்படி இருக்கும் என்பதைப் படித்துப் புரிந்துகொள்ள முடியும். தற்செயலாக, பிரிட்டன் சட்டமூலம் இந்த மாதம் பாராளுமன்றத்தின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அரசரின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. ஆனால், ஏனைய எல்லா வழிகளிலும், இது நாம் இங்கு காணும் கேலிக்கூத்திலிருந்து வேறுபட்டது.

உலகளாவிய சமூக ஊடக தளங்கள் மட்டுமின்றி வழக்கறிஞர்கள், ஆர்வலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனும் கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் நீடித்த ஒரு விரிவான ஆலோசனை செயல்முறைக்குப் பிறகு பிரிட்டன் சட்டமூலம் வந்தது.

## திகைப்பு மற்றும் அச்சத்திலிருந்து ஒரு அரசாங்கத்தை பாதுகாத்தல்

அதன் உள்ளடக்கங்கள் கணிசமாக திருத்தப்பட்டன, பொது மக்களால். முன்மொழியப்பட்ட திருத்தங்கள், மக்கள்பிரதிநிதிகள் சபை மற்றும் பிரபுக்கள்சபை ஐக்கிய இராச்சியத்தின் தகவல் தொடர்பு அலுவலகம், அரச கட்டுப்பாட்டாளர், செயற் படுத்தல் மற்றும் அமு லாக்கத்தில் பணிபுரியும். சட்ட அமு லாக்க முகவர் சமூக ஊடக தளங்களில் பிள்ளைகளைப் பாதுகாப்பதில் குறிப்பாக கவனம் செலுத்துவதன் மூலம் சட்ட விரோதமான இணையவழி உள்ளடக்கத்தை உடனடியாகச் சமாளிக்க சட்ட அமு லாக்க முகவரமைப்பு களுக்கு இந்தசட்டமூலம் உதவுகிறது.

இதற்கு நேர்மாறாக, இலங்கையின் சட்டமூலம், நான் பார்ப்பது போல், வெளிப்படையாகவே "அச்சத்துடன்" இருக்கும் அரசாங்கத்தை, மற்றொரு "அரகலய" (பாரியளவிலான எதிர்ப்பு) சாத்தியப்பாட்டிற்குஎதிராக பாதுகாக்க முயல்கிறது. அங்கே நாம் சுருக்கமாக விடயம் உள்ளது. சட்டமூலத்தின் தெளிவற்ற மற்றும் நிச்சயமற்ற "நோக்கங்கள்" கடந்த வாரம் விவாதிக்கப்பட்டன, இதில் "எச்சரிக்கை அல்லது துன்பகரமான" அறிக்கைகள் எதுவாக இருந்தாலும், ஆட் களைப் பாதுகாப்பது அடங்கும்.

உண்மையில், அதன் நீண்ட தலைப்பு கூட கொடூரமான வார்த்தைகளால் ஆனது. "உண்மையின் சில அறிக்கைகளை" தடை செய்வதே இதன் நோக்கம் என்று இது கூறுகிறது. ஆனால் சிங்கப்பூரில் உள்ள மிகக் கொடூரமான சட்டம், இணையவழி பொய்கள் மற்றும் கையாளுதல் சட்டத்திலிருந்து உலகெங்கிலும் உள்ள பேச்சு சுதந்திரத்திற்கு எதிரான எதேச்சதிகாரர்களின் மகிழ்ச்சியாக உள்ளது. "உண்மைகுறித்த பொய்யான அறிக்கைகளை" தடைசெய்வது போன்ற அதன் நோக்கத்தை இன்னும் கேவலமாக அறிமுகப்படுத்துகிறது. சிங்கப்பூர் சட்டம் மோசமாக இருந்தால், முன்மொழியப்பட்ட இலங்கையின் சட்டமூலத் தின் மோசமானதன்மை எல்லையற்றது.

## தீங்கிழைக்கும் வகையிலான வரைவு விதிகள்

தடைசெய்யப்பட்ட மற்றும் தவறான அறிக்கைகளை வரையறுக்கும் இலங்கை சட்டமூலத்தின் உட்பிரிவுகள் விரிவானவை. கடந்த வாரம் விவாதிக்கப்பட்டதைப் போல, சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சட்டத்தில் (ஐ.சி.சி.பி. ஆர் சட்டம், 2007) அதே தடைசெய்யப்பட்ட தன்மையும் இதில் அடங்கும், இது விமர்சகர்களுக்கு எதிராக இரக்கமின்றி ஆயுதம் ஏந்தப்பட்டது. மேலும் காயத்திற்கு அவமானம் சேர்க்கும் வகையில், எங்களிடம் ஏனைய உட்பிரிவுகள் உள்ளன.

சரத்து 14 தவறான முறையில் அல்லது வேண்டுமென்றே தூண்டிவிட்டு கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் தவறான அறிக்கையை வழங்குவதைத் தடுக்கிறது.உண்மையான கலவரம் ஏற்படாவிட்டாலும், இந்தக் குற்றம் (குறைந்த தண்டனையுடன் இருந்தாலும்) எழுவதாகக் கருதப்படுவது மிகவும் ஆபத்தானதாக இல்லாவிட்டால் அதன் விளைவுவேடிக்கையாக இருக்கும். தேவைப்படுவதெல்லாம், சுயாதீனமற்ற இணையவழி பாதுகாப்பு ஆணைக்குழுவின் மதிப்பீடு மட்டுமே. உட்பிரிவு 15, 16 மற்றும் 17 ஆகியவை முறையே ஒரு மதக் கூட்டத்தின் "தொந்தரவு" அல்லது வேண்டுமென்றே "காயம்" மற்றும் "சீற்றம்" மத உணர்வுகளை ஏற்படுத்தும் தவறான அறிக்கைகளுடன் தொடர்புடையது.

ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் குறைந்தபட்சம் பிரிவு 3 (1) குற்றத்தின் ஒரு பகுதியாக பாரபட்சம், விரோதம் அல்லது வன்முறைக்கு "தூண்டுதல்" பரிந்துரைக்கிறது என்றாலும், பொலிசாரின் கைகுகள் மற்றும் வழக்குகள் அந்த அம்சத்தை எப்போதாவது கணக்கில் எடுத்துக்கொள்ளும். இருப்பினும், இந்த சட்டமூலத்தில் குற்றமாக கருதப்படும் செயல்களின் முட்டாள்தனம் புரிதலை மீறுகிறது. எந்த விதத்தில் ஒரு "தொந்தரவு" அல்லது "நோக்கம்" "காயம்∴ சீற்றம்" உணர்வுகளை குற்றமாக விளக்கலாம்?

## அரச முகவர்களை வெறித்தனமாக செல்ல

அனுமதித்தல் ஏறக்குறைய ஒவ்வொரு நாளும், இலங்கைப் பிரஜைகள் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளால் "சீற்றம்", "காயமடைந்த" அல்லதுஇரண்டும் "கலந்த" நிலையில் உள்ளனர். சட்டரீதியான பின்விளைவுகளைத் தீர்மானிப்பது போன்ற திட்டவட்டமான பேச்சுவழக்கு சொற்றொடர்களுக்கு இது ஒரு முட்டாள்தனம். இவ்வாறான குற்றச்செயல்கள் இலங்கையின் தண்டனைச் சட்டத்தை இருண்ட மற்றும் சோதிக்கப்படாத நிலைகளுக்கு இழுத்துச் செல்கின்றன. அரச முகவர்கள் காட்டுமிராண்டித்தனமாக செல் வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள வீச்சை மிகைப்படுத்த முடியாது.

இதற்கிடையில், ஒரு நபரை "அச்சுறுத்தல், பயமுறுத்துதல் அல்லது துன்புறுத்துதல்" மற்றும் மிகவும் விசேட மாக, "ஒரு நபரின் கண்ணியத்தை மீறும்" விளைவைக் கொண்ட எந்தவொரு செயல் தொடர்பாக. வேண்டுமென்றே தவறான அறிக்கைகளை வெளியிடுவதை 21 ஆவது பிரிவு தடை செய்கிறது.

பின்வரும் உதாரணங்கள் தனிப்பட்ட நபர்களுக்கிடையேயான உறவுகளுடன் தொடர்புடையவை, ஆனால் சரியான கடுமையான கட்டமைப்பில் இல்லாததால், இந்த சரத்து ஒரு "இலக்குவைக்கப்பட்ட நபரின்" அரசியல் விமர்சனத்தை மறைக்கப் பயன்படுத்தப்படலாம். ஹோமாகமவில் ஜனாதிபதியின் கூற்று, கேள்விக்குரிய சரத்து "பொய்யான" அறிக்கைகளுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், கொள்கையளவில் அதை எதிர்க்க வேண்டும்.

அரசில் ஒரு பயங்கரமான முன்னுதாரணத்தை அமைத்தல் ஒட்டுமொத்தமாக, கூச்சமின்றி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட (மற்றும் நிராகரிப்பு செய்யப்பட வேண்டிய) இணையவழி பாதுகாப்பு ஆணைக்குழு இந்த மிகவும் போட்டியிட்ட கேள்விகளை மதிப்பிடுகிறது. இங்குதான் இந்தசட்டமூலத்தின் திகில் உள்ளது. "எந்தவொரு நபராலும்" தூண்டப்பட்டு, மீறல் குறித்து திருப்தி அடைந்த பிறகு, ஆணைக்குழு இயற்கை நீதியின் விதிகளைக் கடைப்பிடிக்கவும், குற்றம் சாட்டப்பட்டவரைக் கேட்கவும் கடமைப்பட்டிருக்காது.

அதற்கு பதிலாக, இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் கீழ்ப்படிய வேண்டிய உள்ளடக்கத்தின் புழக்கத்தைத் தடுக்க இது அறிவிப்பை வெளியிடலாம். இல்லையெனில், இணைய அணுகல் சேவை வழங்குநர் அல்லது இணைய இடைத்தரகரால் இதே போன்ற அறிவிப்பு வெளியிடப்படும். குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்திற்கு செல்ல முடியும், அதன் பிறகுதான், கிட்டத்தட்ட ஒரு பின் சிந்தனையாக. "இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள்" ஆணைக்குழுவின் உத்தரவுக்கு கீழ்ப்படியாததற்கு ஐந்தாண்டு சிறை தண்டனை மற்றும்/அல்லது அபராதம் விதிக்கப்படலாம்.

உண்மையிலேயே பயமுறுத்துவது என்னவென்றால், இது எதிர்காலத்திற்கு அமைக்கும் ஓர்வெல்லியன் எதிர்கால எதேச்சாதிகாரத்திற்கான முன்னுதாரணமாகும்.





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1101



## பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் கொழும்பு

**நண்பர்களே!**

**எனது பெயர் கொண்ட முகநூலில் (Facebook) ஒவ்வொரு வாரமும் இந்துமதம் கூறுவதென்ன? மற்றும் தேடல் என்ற தலைப்பில் பல்வேறு விடயங்கள் பற்றி எழுதி வருகின்றேன். வாசித்தறிந்து உங்கள் கருத்துக்களை வெளியிடுங்கள்.**

**நன்றி.**

கோபுரதரிசனம் கோடிபுண்ணியம் என ஆன்றோர் கூறியுள்ளனர். முன்னோர் வாக்குக்கமைய தொலை தூரத்திலிருந்தும் இக்கோயிலில் எழுந்தருளியுள்ள தெய்வங்களை மனதிருத்தி வணங்கும்வகையில், மிக உயரமாக இராசகோபுரம் அமைக்கப்பட்டுள்ளமை, இவ்வாலயத்தின் சிறப்பாகக் காணப்படுகின்றது. கோபுர தரிசனமும் இறையுணர்வும் இந்துக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளது. கோயில்கள் என்றதும் அனைவருடைய மனக்கண்முன் நிற்பது அழகிய கோபுரங்களே ஆகும். ஆலய அமைப்பிலே கருவறை, அந்தராளம், முகமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று, பரிவாரஆலயங்கள், மற்றும் திருமதில்கள் இவைகளை உள்ளடக்கி திருவாயிலை அலங்கரிக்கும் வகையில், ஒரு அடுக்குமுதல் பல அடுக்குகக்களைக் கொண்டதாய், விண்ணைத்தொடும் அளவிற்கு உயர்ந்ததாய் அமைக்கப்பெறும் அமைப்பே, கோபுரம் ஆகும். இதனை இராசகோபுரம் என்றும் சிறப்பித்துக் கூறுவர். கோயிலுக்குச் செல்ல இயலாதவர்கள், தூரத்திலிருந்தே கோபுரத்தை வழிபடுதலை, அன்றாட வாழ்க்கையில் காணக்கூடியதான சமுதாய அமைப்பு தற்காலத்திலும் காணப்படுகின்றது.

கோபுர அமைப்பை கீழ்ப்பகுதி என்றும், மேற்பகுதி என்றும் இருபகுதிகளாகப் பிரிக்கலாம். கீழ்ப்பகுதியானது உபபீடம், அதிட்டானம், சுவர், கூரை என்ற அங்கங்களையும், மேற்பகுதி கர்ணகூடு, கூரை, கண்டம், சிகரம், கலசம், என்ற அங்கங்களையும் கொண்டதாகும். பெரும்பாலும் கீழ்ப்பகுதி கருங்கல்லாலும், மேற்பகுதி செங்கற்களாலும் அமைக்கப்படுகின்றது. காசியபம், மயமகம் போன்ற சிற்ப நூல்கள், கோபுரங்களில் இடம்பெறும் அங்கங்களையும், அவற்றின் அளவு முறைகளையும் குறிப்பிட்டுள்ளன. இவற்றிலே குறிப்பிடப்பட்டமைக்கமைய, கோபுரங்கள் பல அடுக்கக்களைக் கொண்டதாக அமைப்பர். கோபுர அமைப்பை அடுக்குக்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஒருநிலை, இருநிலை என்றோ அல்லது ஒரு தளம், இருதளம் என்றோ கூறுவர்.

இவ்வாறாக சிற்பநூல்களிலே கூறப்பட்டமைக்கு அமைய, கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலின் இராசகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. தூரத்திலிருந்து பார்க்கக்கூடியவகையிலே இக்கோயிலின் இராசகோபுரம் கம்பீரமாக எழுப்பப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் கிழக்கு வாசலிலே அறுபத்தைந்தடி உயரங்கொண்ட இந்த இராசகோபுரத்திலே, அழகிய தெய்வசிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இக்கோபுரம் ஐந்து தளங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. அவ்வாறே அம்பாள் எழுந்தருளியுள்ள தெற்குவாயிலில், முப்பத்தைந்தடி உயரம் கொண்ட கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரம் மூன்று தளங்களைக் கொண்ட கோபுரமாகக் காணப்படுகின்றது. இவற்றோடு ஆலயத்தின் கிழக்கு, மேற்கு நுழைவாசல்களில் இரு சிறிய கோபுரங்கள் அமைந்துள்ளன.

இவ்வாறான வெளிஅமைப்புக்கள் காணப்பட, உள்மண்டபம் புராண வரலாறுகளைக் கொண்ட கலைநுட்பம் நிறைந்த காட்சிகளை எடுத்தியம்புகின்றது. உள்மண்டபக் கற்தூண்களிலும், சுவர்களிலும் கண்ணப்பநாயனார் தனது இடது கண்ணை தோண்டி இலிங்கத்திலே அப்ப ஆயத்தமாகும் காட்சி தத்ரூபமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அம்பாளின் தாண்டவம், சிவனின் ஊர்த்துவதாண்டவம், இடபத்தில் உமையும் சிவனும், அருத்தநாரீஸ்வரர், வைரவர், பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதர், பிச்சாடனர், இராமர், நான்முகன், தட்சணாமூர்த்தி, மத்தளத்துடன் நந்திதேவர், நாரதர், பாயும் சிங்கம், அன்னப்பறவைகள், கலைமான், ஐந்து தலைநாகம், யானை, மரத்தை முறித்துக் கிளை உண்ணல், எருது, மரத்தை எட்டிக் குழை உண்ணல், ஐந்துதலை நாகலிங்கம், மந்தி, யானையின் காலடியில் மனிதன், மீனை விழுங்கும் கொக்கு, இரட்டைத்தலைக் கிளி, இரட்டைத்தலை மயில், யானைமேற் பாயும் சிங்கம், ஆடும் மயில், இருதலை ஒரு உடல் சிங்கம், மூன்றுதலை ஒரு உடற் கழுகு போன்ற சிற்பங்கள் கலைநுணுக்கத்தோடும் அழகோடும் அற்புதமாகக் காட்சியளிக்கின்றன.

சிவாகம முறைப்படி நடைபெறும் இவ்வாலயம் பூசை வழிபாடுகளோடு அமையாது சைவமும், தமிழும் தழைத்தோங்க அரும்பணியாற்றி வருகின்றது. அறநெறிப்பாடசாலை, சிவதர்ம சம்வர்த்தன வேதப்பாடசாலை என்பன ஆலயத்தின் மேற் பார்வையிலே நடத்தப்பட்டுவருவது, சிறந்த சமய சமூகப் பணியாகக் கொள்ள வேண்டும். பன்னிருதிருமுறைகள் சைவசமயத்தின் கண்களாகப் போற்றப்படுகின்றன. இவற்றை வருடாவருடம் ஓதுதல் ஆலயத்திலே நடைபெறுகின்றது. கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் நிறுவனராக விளங்கிய திரு. அருணாசலம் பொன்னம்பல முதலியார் அவர்களுடைய சந்ததி வழிவந்தவரான திரு.தே.ம. சுவாமிநாதன் அவர்கள், இவ்வாலயத்தின் தர்மகர்த்தாவாக இருந்து தொண்டாற்றி வருகின்றார். இவரோடு ஐந்துபேர் கொண்ட உறுப்பினர்களும் இணைந்து, இவ்வாலயத்தை திறம்பட நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான கலையம்சம் பொருந்தியதும், அருள்வீச்சினால் அனைவரையும் ஆட்கொண்டதுமான, கொச்சிக்டை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் அமைய காரணமாயிருந்த பெரியார் திரு. அருணாசலம் பொன்னம்பலமுதலியார் அவர்கள், தமிழ்சமூகத்திற்கு அளித்த பெருங்கொடையாகவே இக்கோயிலை வரலாறு போற்றுகின்றது.

கலைப்புலவர் கே. நவரத்தினம் அவர்கள் தனது நூலிலே, “The temple may be considered the Architectural gem of South Indian Art in Ceylon today. Visitors to the country pay a visit to this temple.” னனக் குறிப்பிட்டுள்ளமை உற்றுநோக்கத்தக்கது. புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து செல்லும் தமிழ்மக்கள், இவ்வாறான ஆலயங்களை தரிசிப்பதோடு, எதிர்காலச் சந்ததியினருக்கும் இவ்வாறான ஆலயங்களை தரிசிக்க வாய்ப்பேற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

“ குன்றேயுநல் கொழும்புநகர்
குலவும் கொச்சிக்கடையில்
நன்றேயுயர் திருக்கோயிலில்
நாளும் வீற்றேயிருக்கும்
அன்றேபுர மெரித்தான் பொன்னம்
பலவாணனைத் தொழுதால்
சென்றேவிடும் உமது வினை
சேர்ந்தே பயன் பெறுவீர் ”

*வளரும்...*




Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

கனடிய செய்திகள் Canadian News

# கனடா – ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் 30 ஆண்டுகள் பூர்த்தி விழா சிறப்பாக நடைபெற்றது





ஸ்காபுறோவில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பெற்ற ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் என்ற நற்பெயரோடு 30வது ஆண்டு நிறைவு செய்துள்ள ஆதிபராசக்தி குருமன்றத்தின் 30 ஆண்டுகள் பூர்த்தி விழா கடந்த 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோவில் 1120 ரெப்ஸ்கொட் வீதி என்னும் விலாசத்தில் அமைந்துள்ள ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்றத்தில் நடைபெற்றது பிற்பகல் 2.00 தொடக்கம் மாலை 7.00 மணி வரை நடைபெற்ற இந்த விழாவை சக்தி யோகநாதன் அவர்கள் தொகுத்து வழங்கினார். சிறப்புரைகள் மற்றும் ஆன்மீக சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெற்றன.

உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகன் லோகேந்திரலிங்கம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் மற்றும் சட்டத்தரணி தம்பையா ஸ்ரீபதி ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினர்.

அவர்கள் இருவரும் தங்கள் உரைகளில் 30வது ஆண்டை நிறைவு செய்துள்ள ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு அவர்களின் ஆன்மிக உணர்வையும் அவரது கடும் முயற்சியினால் தற்போது பல சக்திகளின் ஒத்துழைப்போடு இயங்கிவரும் குருமன்றத்தின் செயற்பாடுகளையும் சேவைகளையும் விபரமாக எடுத்துரைத்து, அவற்றை தலைமை தாங்கி நடத்தி வரும் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு அவர்களின் காலத்தில் இந்த மன்றம் மேலும் வளர்ச்சிபெற்று ஆன்மிக மற்றும் தியானம் வழிபாடு ஆகிய அவசியமான மன சார்ந்த செயற்பாடுகளை ஊக்குவிக்கும் என்று தெரிவித்தார்கள்.







தொடர்ந்து நடன ஆசிரியைகள் ரேணுகா விக்னேஸ்வரன் மற்றும் ஜனனி ரவிசங்கர் ஆகியோரின் மாணவிகளின் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் மேடை யேறின.

தொடர்ந்து 30வது ஆண்டு நிறைவு செய்துள்ள ஆதிபராசக்தி குருமன்றத்தைச் சேர்ந்த சக்திகளின் வழங்கிய பக்திப் பாமாலை மற்றும் ஆன்மிக உரைகள் ஆகியன இடம்பெற்றன.





தொடர்ந்து 30வது ஆண்டை நிறைவு செய்துள்ள ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு அவர்களின் சேவைகளைப் பாராட்டும் வகையில் ஒன்றாரியோ மாகாண மூத்தோர் விவகாரங்களுக்கான அமைச்சர் ரேமன் சோ மற்றும் ஸ்காபுறோ அஜின்கோர்ட் வட்டாரத்தின் ரொறன்ரோ நகர சபை உறுப்பினர் திரு நிக் மென்டஸ் ஆகியோரின் பாராட்டுப் பத்திரங்களையும் தொண்டர்களுக்குரிய பாராட்டுப் பத்திரங்களையும் லோகன் லோகேந்திரலிங்கம் அவர்கள் வாசித்து வழங்க பல அன்பர்கள் மற்றும் சக்திகள் இணைந்து அவற்றை ஸ்தாபகர் சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு அவர்களின் கரங்களில் ஒப்படைத்தனர்







மேற்படி விழாவில் வர்த்தகப் பிரமுகர் ரங்கனாஸ் நகை மாளிகையின் அதிபர் ரங்கநாதன் பத்மநாதன் அவர்களும் மேடையில் கௌரவிக்கப்பெற்றார்.

அன்று நடைபெற்ற இந்த விழாவானது ஆன்மீகம் மற்றும் சமூகம் சார்ந்த பணிகளை ஆற்றிவரும் ஒரு அமைப்பு மற்றும் அதனுடன் இணைந்து செயற்படும் தொண்டர்கள் அனைவரையும் பாராட்டும் ஒரு நிகழ்வாகவும் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**- சத்தியன்**

# இவ்வார ராசிபலன்

**28-06-2024 வெள்ளி தொடக்கம் 04-07-2024 வியாழன் வரையும்**




**மேஷம்:** ஏற்றுமதி தொழிலால் லாபம் தரும் வாரம். தாய்வழி உறவில் நன்மை உண்டாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். வெளியூர் பயணம் வெற்றியைத் தரும். நல்லோர் நட்பு கிட்டும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். உத்தியோக இடமாற்றம் உண்டு. பயணம் தடைப்படும். திடீர் செலவு உண்டாகும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். அதிருப்தி அதிகரிக்கும். பால் தானம் செய்வதால் பாவம் போகும். இலக்கிய ஆர்வம் கூடும். இனிப்பான செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புகள் கிட்டும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். கல்வியில் தடை ஏற்பட்டு விலகும். புதிய பொருள் சேரும். காலணிகள் காணாமல் போகும். தாய், தந்தை உதவி உண்டு. வெகுமதி தேடி வரும். வீண் வம்பு ஒடி ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். காரிய வெற்றி கிட்டும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். வில்லங்கம் விலகும். தொல்லைகள் அகலும். போட்டிகள் மறையும். தீர்த்த யாத்திரை செல்லும் வாய்ப்பு வரும். திருப்புமுனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,9,4,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,C





**ரிஷபம்:** உற்சாகத்தோடு செயல்படும் வாரம். சகோதர ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குதூகலம் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. தொழில் உற்பத்தி அதிகரிக்கும். நிதி நிறுவனம் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்பு விலகும். வேண்டிய உதவி கிட்டும். விவசாய நிலம் சேரும். வெற்றிக்காண வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். செயல்களில் துணிவு கூடும். செய்த்தொழில் நன்மை தரும். செல்வாக்கு அதிகமாகும். வழக்குகள் திருப்பம் தரும். பொறாமைகள் விலகும். வேலை பளு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வருமானம் திருப்தி தரும். பூமியால் லாபம் உண்டு. நற்செய்தி நாடி வரும். தொழில் வாய்ப்பு கூடி வரும். தடைகள் விலகும். புதிய பொறுப்புக்கள் வரும். அரசியலில் பொறுமை தேவை. பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். செயலில் வேகம் கூடும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். கடன் கொடுப்பதை தவிர்க்கவும். பெரிய திருப்பம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 9,5,2,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,X




**மிதுனம்:** புதிய தொழில் வாய்ப்புக்கள் வரும் வாரம். மாற்று இன நட்பு பெருகும். வேற்று மதத்தினரால் உதவி உண்டு. தோற்றப்பொலிவு கூடும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபக்காரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். வெகுமதி தேடி வரும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் எண்ணம் ஈடேறும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். உறவினர் பாராட்டு கிட்டும். கடன் உபத்திரவம் குறையும். அளவான பேச்சு நன்மை தரும். வழக்குகள் சாதகமாகும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கிய அபிவிருத்தி உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வியாபாரம் லாபம் தரும். வாழ்த்துச் செய்திகள் வந்து சேரும். சொத்துச் சேர்க்கையுண்டு. ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரண சேர்க்கையுண்டு. மன சந்தோஷம் கூடும். அந்தஸ்து உயரும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். முன்கோபத்தை குறைக்கவும். புதிய முயற்சியில் சற்று கவனம் தேவை. மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் குறையும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டும். நிம்மதி பெருகும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 7,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**கடகம்:** தன வரவுகள் அதிகரிக்கும் வாரம். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசுவழி ஆதாயம் உண்டு. நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை குறையும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணம் உருவாகும். தகுதிகள் உயரும். வறுமைகள் ஒழியும். புகழ்ச்சி அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. காரியத்தடை விலகும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். குதூகலமான எண்ணம் மேலோங்கும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திருமண வாய்ப்பு கூடி வரும். ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவு அதிகரிக்கும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். மெத்தனப் போக்கு விலகும். பூமியால் லாபம் உண்டு. பாதகமான சூழ்நிலை விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. வருமானம் பெருகும். புத்திரர் வழியில் நன்மை உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காரியசித்தி ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 2,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,V


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'



"ஜோதிட மகரிஷி"
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**சிம்மம்:** சோம்பல் அதிகரிக்கும் வாரம். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புதமான வாய்ப்பு கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். ஆரோக்கியம் அதிகரிக்கும். மாற்று யோசானை பலன் தரும். வேலைவாய்ப்புக் கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். நிம்மதியாக இருப்பீர்கள். உத்தியோக உயர்வு உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மைகள் உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். வி.ஐ.பியின் தொடபு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனைத் தீரும். வியாபாரம் சிறக்கும். இடமாற்றம் நன்மை தரும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். தொழில் போட்டிகள் உருவாகி மறையும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். சுயநலம் கூடும். ஸ்திர சொத்து சேரும். முயற்சியில் வெற்றி உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். பணிவான பேச்சுக்கள் தேவை. நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். சுபச்செலவு அதிகரிக்கும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதைகள் நீங்கும். நன்மைகள் பெருகும். பதவியில் பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். சிரமங்கள் குறையும். பெருமைகள் உயரும். நிர்வாக அலைச்சல் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,T





**கன்னி:** பதவி உயர்வு கிடைக்கும் வாரம். பொருளாதாரம் உயரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. படிப்பில் கவனம் வேண்டும். உடன்பிறப்பால் உதவி உண்டு. நண்பர்களால் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கணவன், மனைவி உறவு சீராகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் ஏற்படும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. பெண்கள் பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். தொழில் வாய்ப்புக்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் முடிவிற்கு வரும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மையுண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பழையகடன் வசூலாகும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். மங்கலச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**துலாம்:** சுப விரயம் ஏற்படும் வாரம். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். பழையகடன் வசூலாகும். மாற்று இன நட்பு பெருகும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். பெண்களின் ஆலோசனை பூர்த்தியாகும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆனந்தம் குடிகொள்ளும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித்தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பாதிப்புக்கள் அகலும். உற்சாகம் களைகட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். பணிவும்ருபவ் துணிவும் கூடும். கஷ்ட காலம் மறையும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வாகன மாற்றம் உண்டாகும். ஆன்மீகச் சிந்தனை அதிகமாகும். பணியில் கண்டிப்பு தேவை. தனவரவுகள் பெருகும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். மேன்மைகள் தொடரும். சுயதொழில் வாய்ப்பு அமையும். சாதனை படைக்கும் வாரம். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல் வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். பேச்சில் கம்பீரம் இருக்கும். மாற்றங்களை சந்திப்பீர்கள். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். பொறாமைகள் அதிகரிக்கும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. ஏற்றங்கள் அமையும். கௌரவம் அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். வெற்றி வீடு தேடி வரும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிராணிகளால் தொல்லை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பண்ணாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,3,5,7
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**விருச்சிகம்:** சுபசெய்தி வரும் வாரம். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. பூர்வீகச் சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பாதகமான சூழ்நிலை விலகும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களைகட்டும். யோகமான காலம். ஆடை, அணிகலன்கள் சேரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். விளையாட்டுத் துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். திருப்புமுனை ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவிற்கு வரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். விரயங்கள் அதிகமாகும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். பழையகடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு குறையும். சாதனையான எண்ணம் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 6,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q **(தொடர்ச்சி 26 பக்கம்)**

# கடந்தவையும் கடப்பவையும் – (102)

உண்டபின் உறங்குதற்கு இடம் வேண்டும்
மண்போட்டால் மண்விழாது என்பதற்கு - அங்கு

அடிக்கிவைத்த கிழங்குகள் போல் நெருக்கமாய்
படுத்திருப்போர் சூழலும் எடுத்துக்காட்டே

கூடவந்த சொந்தங்கள் நிற்குமிடம் தெரியாது
தேடிவந்து சொந்தமென்று சொல்லுதற்கு ஆளிருக்கு - ஆனாலும்

எங்குவர வேண்டுமென்று அவருக்கும் தெரியாது - பெரும்
சங்கடமே அன்றிரவு நித்திரையும் வரவில்லை

எப்பவரும் அதிகாலை என்றபடி விழித்திருக்க
அப்பொழுதோ நெடிதான பொழுதாகப் புலர்ந்துவர

சில் என்ற குளிர் காற்றும் சூழவுள்ள - சிறு
புல் நிலத்து புது மணமும் - அந்த

எல்லையைத் தாண்டிவரத் தனித் தெம்பொன்றை
மெல்லமாய்த் தந்தபோதும் எல்லையில் நின்ற அக்கா

என்னவேணும் என்பதுபோல் எட்டியே பார்க்க
சொன்னனான் முன்னமென்று செல்லமாய் கடிந்தது - அங்கு

அந்தரத்தில் கிடைத்த முன்பின் அறியா - ஆனால்
தொந்தரவு ஏதுமற்ற அந்த நட்பு

அதிகாலை நகர்ந்து அந்திமாலை வந்தபோதும்
சரியான பதிலேதும் தந்துகொள்ள ஆளில்லை - ஆனாலும்

தலையாட்டி வருமென்ற தன்மையில் ஒருபேச்சு - அதனால்
குலைநடுக்கம் ஒருபக்கம் வந்துமாச்சு - அங்கும்

இறந்த வீட்டில் கொஞ்சநேரம் பிணமாக இருந்தாலென்ன
நிறைந்த சனம் போகுமட்டும் என்பவரும் இருந்தனர்தான்

எதிர்த்தரப்பு அக்காமார் சொன்னதாக வழிநடத்தி
நிறுத்தினார்கள் அனைவரையும் வரிசையிலே

அடுத்தபக்கம் ஆண்களில் ஆரையோ பிடித்ததென்று
விடுப்புக்கேட்டுச் சொல்பவரும் இருந்தார்கள் - அப்பத்தான்

அவர்கள் சொன்னதெல்லாம் உண்மையென்று தெரியவர
எவரொருவர் வருவாரோ தெரியாது மூடிக்கொண்டு

முன்பின் விரோதமென்று யாருமில்லை - ஆனாலும்
முன்கோவப் பேச்சினால் அண்மையில் பகையேதும் வந்ததோ

என்னளவில் எனக்குள் சின்னதாய் மதிப்பீடு
தன்னளவில் முடிவெடுத்து தக்கவள் தானென்று

உயர்தரத்தில் படிக்கப்போன பெண்ணொருத்தி - விடுதலை
உணர்வு கொண்டு போனதனால் அவளை - மீண்டும்

அழைத்துவர அவள் அன்னையுடன் போனபோது - அங்கு
கனக்கக் கதைத்ததுதான் ஒரு பயத்தைத் தந்தது

நல்லகாலம் அதிக நேரக்காத்திருப்பு ஆனபோதும் - பெண்கள்
எல்லைக்குள் தலையாட்டி வரவில்லை அன்று

இன்று இல்லை நாளை என்று சொல்லிவிட்டே
அன்று அவ்வரிசையைக் கலைத்துவிட்டார் - இனி

அங்கிருந்து போகவேண்டும் என்பதே நினைவாக
அங்கிருந்த அக்காவை துணிந்துபோய் கேட்பதாக முடிவெடுத்து

தந்தையோடு கதைப்பதற்கு ஆவனசெய்யவேண்டும்
எந்தனுக்கு உதவும்படி நின்று கேட்க

முன்னர் நினைத்தபடி அவரில்லை - தன்மையாய்
என்னிடத்தில் ஒவ்வொன்றாய் தகவல்களைக் கேட்டுக்கொண்டார்

என் தந்தையவர் பொறியியலாளர் கண்டியில் உள்ளார்என்றேன் - மிக
தன்மையாய் எடுத்துச்சொன்னார் தந்தையே வரவேண்டுமென்றார்

நம்பரைத் தாருமென்றார் இருந்ததைக் கொடுத்துவிட்டு
நிம்மதிப் பெருமூச்சோடு இருக்கிறேன் தந்தைக்காக

அடுத்தநாள் ஆனபோது போகிறார் பலபேர் - அவர்களை
அழைத்துத்தான் போவதற்கு ஆராரோ வருகிறார்கள் - எனக்குள்

கணக்கொன்றைப் போட்டுப்பார்த்தால் தகவல் கிடைத்திட்டாலும் - கொஞ்சம்
சுணங்கித்தான் வந்துசேர்வார் தூரமும் அவ்வாறுதான்

இரண்டுநாள் கழிந்துபோக இறுக்கமும் குறைந்துபோக - வெளி
தொடர்பினை எடுப்பதற்கு ஆவன செய்துதந்தார் - வெகுநாள்

தொடர்பிலே இல்லாது இருந்தவர் தொடர்பும் கூட
தொடங்கிய நல்லதோர் தருணமாக அமைந்ததும் அங்குதான் - ஆனாலும்

ஒருவித கம்பியின் தடுப்புக்குள் விம்மியே நிற்கத்தான்
தெரிகிறார் அம்மா பெரியதோர் பெப்சிப் போத்தலோடு

அங்கவர்கள் வேறோர் இடத்திலே இருப்பதாய் சொல்லியே
வந்துகொண்டிருக்கும் தந்தைக்காய் இருவரும் காத்தங்கு இருக்கிறோம்

தந்தையும் வந்தபின் முன்னுக்கு வந்த என்னை முதலில் விடவே
பின்னுக்கு வந்தோரோடு அம்மாவும் செல்கிறார்

அவர்களை அழைக்க வேறுநாள் வரவேண்டுமாம் - ஆனாலும்
அவர்களுள் சிறியோரை மட்டுமே விட்டனர் - தாத்தாவோடு

விடுபட்டோர் எல்லோரும் கொழும்பை நோக்கி
கடுகதி இரயிலில் ஏறும்போது

எழுபத்தி ஒன்பதில் எங்கிருந்து அகதி என வந்தோமோ - மீண்டும்
முழு அகதிகளாய் அங்கேயே திரும்புகிறோம்.

(பாகம் 1 முற்றும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --






# "மூழ்கிய படகுகளும்" விலகாத மர்ம முடிச்சுகளும் (கனடா உதயனின் சிறப்பு புலனாய்வு கட்டுரை)

என். புவியரசன்

இலங்கைக் கடற்பரப்பிற்குள் ஊடுருவிய சமயம் பிடிக்கப்பட்ட மூன்று இந்திய மீனவர்களின் ட்ரோலர் விசைப்படகுகள் கடலில் மூழ்கி விட்டன என நீதிமன்றிற்குக் கடற்படையினர் அறிக்கையிட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் ஊடுருவும் இந்தியப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்படுவதும் சில விடுவிக்கப்படுவதும் எஞ்சியவை அரச உடமையாக்கப்பட்டு ஏலத்தில் விடப்படுவதும் வழக்கமாகிவிட்டது.

இருந்தபோதும் இரண்டு ஆண்டுகளிற்கு முன்பு படகுகள் ஏலத்திற்கு வந்த போது பல படகுகளைக் காணவில்லை என்ற பெரும் சர்ச்சையும் ஏற்பட்டது.

இந்த நிலையில் தற்போது மன்னாரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் கடலில் மூழ்கி விட்டன எனக் கடற்படையினரால் மன்னார் நீதிமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய சமயம் மன்னார் மாவட்டத்தில் பிடிக்கப்பட்ட படகுகள் மன்னார் கடற்படை முகாம்களில் உள்ள இறங்கு துறைகளிலேயே தரித்து வைக்கப்படுகின்றன.

இவ்வாறு தரித்து நின்ற இந்திய இழுவைப் படகுகளில் இருந்தே மூன்று படகுகள் கடலில் மூழ்கிவிட்டன எனத் தலைமன்னார் கடற்படையினரால் மன்னார் நீதிமன்றிற்கு எழுத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தாழ்வுப்பாடு மற்றும் தலைமன்னார் பகுதிகளில் தரித்து நின்ற இந்த மூன்று படகுகளும் மூழ்கியதாக நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்ட நிலையில் இந்தப் படகுகளிற்கு தற்போது வரையில் வழக்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதனால் அந்த வழக்குகளை தொடரவதில நெருக்கடி நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு வழக்கு இடம்பெறும் படகுகள் மூன்று கடலில் மூழ்கிவிட்டதானால் எவ்வாறு வழக்கை நடாத்துவது என மாவட்ட கடற்றொழில் நீரியல்த் திணைக்கள அதிகாரிகள் தலையை பிய்க்கின்றனர்.

இங்கே கடலில் மூழ்கியதாக கடறபடையினரால்:

IND/TN/10/mm/933

IND/TN/10/MM/966

IND/TN/10/MM/379 ஆகிய மூன்று இலக்கங்களும் குறிப்பிட்டே அறிக்கை வழங்கப்பட்டுள்ளன. இந்த இலக்கப்படகுகளில் 933 மற்றும் 379 ஆகிய இலக்க இரு படகுகள் 20.3.2024 அன்றும் 966 இலக்கப் படகு 5.11.2022 அன்றும் பிடிபட்ட படகுகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ரோளர் படகுகள் கடலில் மூழ்கியிருப்பின் வழக்கு நடவடிக்கைகளைத் தொடர அவை மூழ்கிய நிலையில் உள்ள ஒளிப்படங்களை மன்றில் சமர்ப்பிக்குமாறு மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் விடுத்துள்ள கோரிக்கைக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள அடுத்த தவணை வழக்கின்போது கடற்படையினர் வழங்கும் ஆதாரங்களே பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் இந்த விடயம் மீண்டும் இலங்கை, இந்திய மீனவர்களின் பேசு பொருளாக மாறும் எனக் கருதப்படுகின்றது.

இதேநேரம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பிடிக்கப்படும் இந்திய மீனவர்களின் படகில் இலங்கை கடற்படையினர், திணைக்கள அதிகாரிகள், மீன்பிடி சங்கங்கள் வரையில் இலாபம் பார்ப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அதனை மயிலிட்டித் துறைமுகத்தில் அனைவரும் கண்கூடாகவும் பார்க்க முடிகின்றது. யாழ்ப்பாணக் கூடாநாட்டு கடற்பரப்பில் பிடிக்கப்படும் படகுகள் முதலில் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கே கொண்டு செல்லப்படும். அங்கே மீனவர்கள் இறக்கப்படுகின்றார்களோ இல்லையோ படகுகளில் இருந்து 3 அல்லது 4 பரல் டீசல்கள் இழுத்தெடுக்கப்படும். அத்தோடு படகில் இருக்கும் தரமான மீன் வகைகள் முதல் இறால் நண்டு வரையில் கடற்படையினர் எடுத்து விடுவர் அதன் பின்பே மீண்டும் படகு மயிலிட்டித் துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றது.

மயிலிட்டித்துறைமுகத்திற்கு படகு வந்ததும் திணைக்கள அதகாரி மற்றும் உள்ளூர் மீனவ அமைப்பின் பிரதிநிதி மற்றும அவரது உதவியாளர்கள் ஓர் உள்ளூர் படகில் சென்று படகில் இருந்து பிடுங்க வேண்டியவற்றை பிடுங்குகின்றனர். இதில் மினகலம் முதல் நயிலோன் கயிறு முதல்கொண்டு நல்லநிலை மீன்கள் வரையில் அடங்குகின்றன.

இதனால் துறைமுகத்தின் உள்ள ஊடகவியலாளர்களும் அனுமதிக்கப்படுவது கிடையாது.

இதன்பின்பு படகு வெறும் கோதாகவே துறைமுகங்களில் இருந்து பழைய இரும்பு வியாபாரிகளின் வருகைக்காக காத்திருக்கின்றன.

எமது நாட்டின் வளத்தை அழிக்கும் இந்திய மீனவர்களின் படகுகளை கைப்பற்றினால் அதன் வருமானம் நாட்டிற்கே சேர வேண்டும். ஆனால் இங்கே சிலரின் விசுவாசிகளிற்கே செல்வதாக மீனவர்கள் சிலர் ஆதங்கம் தெரிவிப்பதோடு இந்திய மீனவர்கள் செய்யும் செயலும் அதில் இருந்து பிடுங்குபவர்கள் செயலும் ஒரே வகையிலேயே காணப்படுவதனால் இவற்றை சுட்டிக் காட்டிவிடுவோம் என்றே மீனவ அமைப்புக்களில் இருந்து பலர் நீக்கப்படுகின்றனர் என மானவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதேநேரம் 2021 ஆம் ஆண்டு தமது பாவனைக்கென கடற்படையினரின் கோரிக்கையின் பெயரில் இந்திய மீனவர்களின் 6 படகுகள் ஊர்காவற்றுறை நீதிமன்றம் வழங்கியது.

இவை இவ்வாறு இருக்க 25 ஆம் திகதி அதிகாலை ஓர் இந்தியப் படகை 10 மீனவர்களுடன் பிடிக்கும்போது ஏற்பட்ட படகு விபத்தின்போது கடற்படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளமை புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பல விபத்துக்களின்போது இந்திய மீனவர்கள் பலர் உயிரிழந்தாலும் இம்முறை முதல்முறையாக கடற்படையைச் சேர்ந்தவர் உயிரிழந்திருப்பதோடு இது தொடர்பில் பொலிசார் மூலம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கின் முடிவு பல திருப்பங்களை உண்டுபண்ணக்கூடும் எனவும் கருதப்படுகின்றது.

## இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** மாற்றங்கள் நிகழும் மகத்தான வாரம். வெகுமானம் கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டுக் கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். வெற்றிச்செய்தி வரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. மனோ பயம் அகலும். வினோதமான எண்ணங்கள் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பாராட்டுக்கள் அதிகமாகும். கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். நண்பர்கள் உதவி கிடைக்கும். திருமண வாய்ப்பு வரும். பொறியியல் துறை லாபம் தரும். செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். கனவுகள் பலிதமாகும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். வாழ்க்கை வசதி பெருகும். வாழ்வு நிலை உயரும். மனவேதனை குறையும். பணவிரயம் ஏற்படும். தேகப்பலம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,9,7,1

அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X




**மகரம்:** நலம் விளையும் வாரம். நன்மைகள் அதிகமாகும். நட்புகள் பெருகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். மங்களச் செய்தி வரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாகத் திறன் கூடும். செயல்திறன் வெளிப்படும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கடன் பிரச்சனை உருவாகும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். உள்ளம் மகிழும். மனைவியால் அமைதி உண்டாகும். முக்கிய எண்ணம் நிறைவேறும். உடன் பிறந்தோரால் உதவி உண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. சுப காரிய செய்தி வரும். வேலைபளு அதிகரிக்கும். தொழில் மாற்றம் ஏற்படும். சந்தோ'ம் அலைமோதும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச்சலுகைகள் கிட்டும். தொழில் போட்டி மறையும். சோதனைகள் குறையும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். பணிமாற்றம் ஏற்படும். பெருமைகள் தேடி வரும். வெற்றிகள் குவியும். அரசு வகை ஆதாயம் கிட்டும். பழிச்சொல் தேடி வரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். புத்தி சாதுர்யம் கூடும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். தீய எண்ணம் விலகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு உதவிகள் கிட்டும். வில்லங்கம் விலகும். செயல்திறமை வெளிப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,T




**கும்பம்:** எச்சரிக்கையோடு செயல்பட வேண்டிய வாரம். எதிலும் நிதானம் தேவை. எடுத்தக் காரியம் தடைப்படும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து கூடும். பூர்வீக சொத்து சேரும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். விவசாயம் மேன்மை பெறும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். காரியம் கைக்கூடும். தொழில் லாபம் கிட்டும். மனதெளிவு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். உழைப்பு உயர்வு தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரணம் சேரும். வீண் வம்பு விலகும். நிதி நிலைமை சீராகும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் விலகும். கொடுக்கல், வாங்கலில் நன்மை உண்டாகும். கவலைகள் அடியோடு விலகும். விவசாயம் கை கொடுக்கும். தொலைதூர பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபார மந்த நிலை அகலும். கடன் உதவி கிட்டும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கெடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை தேவை. பணியில் உயர்வு கிட்டும். சுபகாரியம் கைகூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். வேற்று மதத்தினரால் உதவிகள் உண்டு. தோற்றப்பொலிவு கூடும். மாற்று எண்ணம் உதயமாகும். அளவான பேச்சு நன்மை தரும். பயணம் நன்மை தரும். மங்களகரமான காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,9,5,1

அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,T




**மீனம்:** சாதனை படைக்கும் வாரம். சோதனைகள் நீங்கும். சகோதர உறவு பலப்படும். சந்தோ'ம் அதிகரிக்கும். பாதகம் விலகும். பணியார்வம் கூடும். பண நெருக்கடிகள் தீரும். வீண் செலவு கூடும். வில்லங்கம் தீரும். வியாபாரம் மேன்மை தரும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். வீடு, மனை யோகம் வரும். வாகன மாற்றம் வரும். வாய்ப்புக்கள் தேடி வரும். புதிய தொழிலமையும். தனவரவு பெருகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். இனிக்கும் சம்பவம் அமையும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. முடிவுகள் சாதகமாகும். விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்பு விலகும். வெற்றிக்கான வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். திக்கற்ற நிலை மாறும். ஒப்பற்ற பலன் சேரும். தொழில் திறமை பளிச்சிடும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். பொருள் நஷ்டம் ஏற்படும். வேலைபளு கூடும். அரசியல் ஆதாயம் உண்டு. குடும்ப சச்சரவு ஏற்படும். பணியில் கவனம் தேவை. சங்கடம் அதிகமாகும். வருமான வரி தொல்லை ஏற்படும். விரோதம் ஏற்படும். படிப்பில் ஆர்வம் கூடும். ஆரோக்கியம் சீராகும். தெய்வீகப் பற்று கூடும். மனச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நிதி நிலைமை சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மதுரை மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1

அதிர்ஷ்ட நிறம்: வெண்மை அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,X

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




**RESIDENTIAL- COMMERCIAL**

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker = RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank
TD Canada Trust
NATIONAL BANK
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
Manulife
Desjardins
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519




இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

உதயம் 1473 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday June 28, 2024

# இன்று 28.06.2024 மாலை 5.00 மணி முதல் WHITBY- CANADA EVENT CENTRE இல் "லத்திகா புறடக்ஸன்ஸ்" வழங்கும் "இசையருவி – 2024"



இன்று 28-06-2024 வெள்ளிக்கிழமையன்று மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 11.00 மணி வரை றுர்ஜவுடீலு நகரில் அமைந்துள்ள மாபெரும் அரங்கமான **CANADA EVENT CENTRE** இல் நடைபெறவுள்ள "லத்திகா புறடக்ஸன்ஸ்" பெருமையுடன் வழங்கும் "இசையருவி-2024" மாபெரும் இசைநிகழ்ச்சியில் கலந்து கொள்ளவென கனடாவிற்கு விமானம் மூலம் வருகை தந்த பிரபல திரைத்துறை பின்னணிப் பாடகர்கள் ஹரிணி. திப்பு, அரவிந்த் மற்றும் வர்சா மற்றும் தொலைக்காட்சிக் கலைஞர் கேபிவை பாலா உட்பட வாத்தியக் கலைஞர்கள் அனைவரும் நேற்று முன்தினம் ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கினர்.

அன்றைய தினம் விமான நிலையத்தில் அவர்களை வரவேற்கச் சென்றிருந்த ஊடகவியலாளர்கள் மற்றும் லத்திகா புறடக்ஸன்ஸ் " நிறுவன அதிபர் சசிகுமார் மற்றும் அவரது பாரியார் பிரியா ஆகியோர் கலைஞர்களையும் பாடகர்களையும் மகிழ்ச்சியோடு வரவேற்பதைக் காணலாம்.

-இந்த மாபெரும் இசைநிகழ்ச்சிக்கான அனுமதிச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள 647 996 5922 அல்லது 905 201 6000 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்.

# MPP Logan Kanapathi for Markham – Thornhill, hosted his Community BBQ on June 27th at 'SIMONSTON PARK' in Markham





மார்க்கம்- தோர்ண்ஹில் தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் ஏற்பாடு செய்த "சமூக ஒன்றுகூடல்" நேற்று வியாழக்கிழமை 27ம் திகதி மார்க்கம் நகரில் உள்ள **'SIMONSTON PARK'** சிறப்பாக நடைபெற்றது.

மாகாண அமைச்சர் மற்றும் ஏனைய மாகாணப் பாரளுமன்ற உறுப்பினர்கள் மூத்தோர் கழகங்களின் உறுப்பினர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு அங்கு இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள் மற்றும் கலந்துரையாடல் போன்றவற்றில் பங்கெடுத்தனர். குளிர்பானங்கள் மற்றும் சிறறூண்டிகள் மற்றும் ஐஸகிறீம் போன்றவையும் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் வழங்கப்பெற்றன.

# 'An Evening' with Hon Raymond Cho, Ontario's Minister for Seniors and Accessibility

கடந்த 21-06-2024 வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற **'An Evening' with Hon Raymond Cho'** என்னும் இராப்போசன விருந்துபசாரத்தில் எடுக்கப்பெற்ற படங்கள். இங்கு காணப்படுகின்றன.

கௌரவ ரேமன்ட் சோ அவர்கள் ஒன்றாரியோ மாகாணத்தின் மூத்தோர் விவகாரங்கள் மற்றும் அவர்களின் நலன்களைக் கவனிக்கும் அமைச்சர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.







# கனடா பிக்கரிங் நகரில் நடைபெற்ற INTERNATIONAL CHILDREN'S EXPO – 2024

**LUCKY EXCLUSIVE FOUNDATION** அமைப்பின் சார்பில் **'INTERNATIONAL CHILDREN'S EXPO-2024** "சர்வதேச சிறுவர்களின் கொண்டாட்டம்" என்னும் இரண்டு நாள் விழா கடந்த 22ம் திகதி சனிக்கிழமை பிக்கரிங் நகரில் ஆரம்பமானது. காலை 11.00 தொடக்கம் இரவு 11.00 மணி வரை நடைபெற்ற இந்த அற்புதமான சிறுவர்களுக்கான விழாவில் கலை நிகழ்ச்சிகள் நடன நிகழ்ச்சிகள் மற்றும் வர்த்தக கண்காட்சி என கண்களுக்கும் காதுகளுக்கும் விருந்தான பல நிகழ்வுகள் இணைக்கப்பட்டிருந்தன.

**LUCKY EXCLUSIVE FOUNDATION** அமைப்பின் சார்பில் பல தொண்டர்களின் ஆதரவோடு நிகழ்வு தொடர்ச்சியாக சிறப்பாக நகர்ந்து கொண்டிருந்தது. அடுத்த நாள் 23ம் திகதியும் அதே மண்டபத்தில் நடைபெற்றது. விழா நடைபெற்ற இடம்:- **Chestnut Hill Development Recreation Centre, 1867 Valley Farm Road. Pickering –** வாழ்த்த விரும்புவோர்:- 647 309 3091 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.



# கனடாவில் மே 2024 இல் அதிகரித்த பணவீக்கம் 2024 ஜூலையில் குறையும் என்று எதிர்பார்க்கலாமா?



கனடாவில் பல ஆண்டுகளாக, கனடாவில் பணவீக்கம் கணிசமாக உயர்ந்துள்ளது, இந்த உயர்வானது கனடியர்களுக்கு வாழ்க்கைச் செலவு மற்றும் வீட்டு வசதி பற்றிய அதிக சவால்களை ஏற்படுத்தியுள்ளது என்பது யதார்த்த மான ஒரு விடயமே ஆகும்.

இந்த ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் 2.7 சதவீதமாக இருந்த பணவீக்க விகிதம் மே மாதத்தில் 2.9 சதவீதமாக உயர்ந்ததனால் இந்த உயர்ச்சி கனடியர்களைப் பெருமளவில் பாதித்தது.

பகுப்பாய்வாளர்களின் கணிப்பின்படி, பணவீக்கம் 2.6 சதவீதமாகக் குறையும் என்று எதிர்பார்க்கிறார்கள் ஆனால் அதிக சேவை விலைகள் காரணமாக முடக்கம் அதிகரித்ததாக கனடாவின் புள்ளிவிவரங்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. பணவீக்கம் தொடர்ந்து குறைந்து வருவதால் கனடா வங்கி தனது முதல் வட்டி விகிதக் குறைப்பை அறிவித்தது.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)